

மூன்று பைக்குகள் ஒரே பெற்றோலில்...
(படப்பிடிப்பு - சமன் அபேசிறிவர்தன)


# தமிழன்

THAMILAN தமிலன்

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 03, இதழ் : 21 சுபகிருது வருடம், ஆடி மாதம் 04ஆம் திகதி புதன்கிழமை (20.07.2022) ஹிஜ்ரி - 1443, துல்ஹஜ் - 20, 0115886187 - பக்கங்கள் 12

விலை ரூ.50


## பாடசாலைகள் திங்கள் ஆரம்பம்

அனைத்து அரச மற்றும் அரச அனுமதிபெற்ற தனியார் பாடசாலைகளும் ஜூலை 25ஆம் திகதி திங்கட்கிழமை கற்றல் நடவடிக்கைகளுக்காக ஆரம்பிக்கப்படுமென கல்வியமைச்சு அறிவித்துள்ளது.

முன்னதாக ஜூலை 21 பாடசாலை ஆரம்பமாகுமென கல்வியமைச்சு அறிவித்திருந்தது.

# ஜனாதிபதி யார்? இன்று முடிவு!



## ரணில், டலஸ், அநுர மும்முனைப் போட்டி

•யோ.தர்மராஜ்

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவி விலகியதையடுத்து, ஏற்பட்டுள்ள வெற்றிடத்துக்கான ஜனாதிபதி பதவிக்கு யார் யார் போட்டியிடவுள்ளனரென முழு நாட்டுமக்களும் எதிர்பார்த்திருந்த நிலையில், மூன்று போட்டியாளர்கள் தங்களுடைய வேட்பு மனுக்களை நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்துள்ளனர்.

அதன்படி, பதில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் டலஸ் அலகப்பெரும மற்றும் தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திசாநாயக்க ஆகியோர் தங்களுடைய வேட்புமனுக்களை நேற்று (19) நாடாளுமன்ற செயலாளர் நாயகத்திடம் கையளித்தனர்.

இவர்களில் யார் அடுத்த ஜனாதிபதி என்பதை தெரிவு செய்வதற்கான இரகசிய வாக்கெடுப்பு இன்று (20) இடம்பெறவுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, கடந்த 14ஆம் திகதி பதவியிலிருந்து விலகியதால் ஏற்பட்டுள்ள வெற்றிடத்துக்கான ஜனாதிபதி ஒருவரை தெரிவு செய்வதற்கான வேட்புமனு நேற்று (19) நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்படவிருந்த நிலையில், ஜனாதிபதி பதவிக்கு பதில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, நாடாளுமன்ற உறுப்பினர் டலஸ் அலகப்பெரும மற்றும் தேசிய மக்கள் சக்தி தலைவர் அநுரகுமார திசாநாயக்க ஆகியோர் போட்டியிடவுள்ளதாக அறிவித்திருந்தனர். 02 பக்கம்

## ரணிலுக்கு எதிரான மனு நிராகரிப்பு

பதில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் நாடாளுமன்ற உறுப்புரிமையை செல்லுபடியற்றதாக்குமாறு கோரி தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மனுவை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளாமலேயே உயர் நீதிமன்றம் நேற்று தள்ளுபடி செய்துள்ளது.

சட்டத்தரணி நாகானந்த கொடித்துவக்கு இந்த மனுவை தாக்கல் செய்திருந்தார்.

ரணில் விக்ரமசிங்க நாடாளுமன்ற உறுப்பினராக செயற்படுவதையும், நாடாளுமன்றத்தில் வாக்களிப்பதையும் தடுக்கும் வகையில் இடைக்கால உத்தரவு பிறப்பிக்குமாறு இந்த மனுவில் கோரப்பட்டிருந்தது.

சட்ட மா அதிபர் மற்றும் பிரதிவாதிகள் தரப்பில் முன்வைக்கப்பட்ட அடிப்படை ஆட்சேபனைகளை ஏற்றுக்கொண்ட உயர் நீதிமன்ற நீதியரசர்களான காமினி அமரசேகர, ஷிரான் குணரத்ன, ஜனக்க டி சில்வா ஆகியோர் அடங்கிய உயர் நீதிமன்ற நீதியரசர்கள் குழாம் மனுவை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளாமல் தள்ளுபடி செய்தது.



நாடாளுமன்ற வளாகத்தில் நேற்று இறக்கப்பட்ட பாதுகாப்புப் படையினர் மற்றும் பொலிஸார்... (படப்பிடிப்பு - கிஷான் காரியவசம்)

## பாரம்பரிய அரசியலுக்கப்பால் ஒன்றாக இணைந்துள்ளோம்

### டலஸ் - சஜித் அணி கூட்டாக அறிவிப்பு

•யோ.தர்மராஜ்




பாரம்பரிய அரசியலை மாற்றியமைத்து, மக்களுக்காக இணையுமாறே மக்கள் அழைப்பு விடுத்தனர். அதன்படி, மக்களுக்காகவே நாங்கள் தியாகம் செய்து ஒன்றிணைந்துள்ளோமென சஜித் - டலஸ் கூட்டணி கூட்டாக அறிவித்துள்ளது.

ஜனாதிபதி பதவிக்கான போட்டியில் நாடாளுமன்ற உறுப்பினர் டலஸ் அலகப்பெரும மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தரப்பு இணைந்துள்ளதையடுத்து, இருவரும் நேற்று நாட்டு மக்களுக்கு ஆற்றிய விசேட உரையிலேயே இதனைத் தெரிவித்தனர். 02 பக்கம்

## வாக்கெடுப்பை கிரமமாக முன்னெடுக்க சகல கட்சிகளின் ஒத்துழைப்பும் தேவை

### சபாநாயகர் கோரிக்கை



உரிய சட்டவிதிகளுக்கமைய நாடாளுமன்றத்தின் மூலம் அடுத்துவரும் ஜனாதிபதியைத் தெரிவுசெய்ய இன்று (20) நடத்தப்படும் வாக்கெடுப்பை ஜனநாயகத்துக்கு மதிப்பளிக்கும் வகையில் வெற்றிகரமாக நடத்திமுடிப்பதற்கு சகல கட்சிகளினதும் ஒத்துழைப்பை எதிர்பார்ப்பதாக சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தெரிவித்தார். 02 பக்கம்

## 44,000 மெட்ரிக் தொன் யூரியா உர விநியோகம் ஆரம்பம்

இந்திய கடன் திட்டத்தின்கீழ் பெறப்பட்ட 44,000 மெட்ரிக்தொன் யூரியா உரமானது, அரசுக்குச் சொந்தமான சிலோன் உரக் கம்பனி லிமிடெட் மற்றும் கொழும்பு கொமர்ஷல் பேர்ட்டிலைசர் லிமிடெட் ஆகியவற்றிற்கு சொந்தமான கிடங்குகளில் சேமித்து வைக்கப்பட்ட பின்னர் விநியோகம் செய்யப்படவுள்ளது.

மூன்று நாட்களுக்குள் நாடளாவிய ரீதியிலுள்ள கமநல சேவை நிலையங்களுக்கு 3,000 மெ.தொ. யூரியா உரம் விநியோகிக்கப்பட்டுள்ளதாக விவசாயத் திணைக்களம் தெரிவித்துள்ளது. 02 பக்கம்

## வெளிநாட்டு தபால் சேவைக் கட்டணத்தை அதிகரிக்க முடிவு

வெளிநாட்டு தபால் சேவைக் கட்டணத்தை அதிகரிக்க இலங்கை தபால் திணைக்களம் தீர்மானித்துள்ளது. எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் முதலாம் திகதிமுதல் கட்டணம் அதிகரிக்கப்படுமென தபால் மா அதிபர் ரஞ்சித் ஆரியரத்ன தெரிவித்துள்ளார்.

இதனிடையே, அமெரிக்கா, நெதர்லாந்து, இஸ்ரேல் மற்றும் ரஷ்யா ஆகிய நாடுகளுக்கான தபால் பொருட்களை ஏற்கும் நடவடிக்கைகள் தொடர்ந்தும் இடைநிறுத்தப்பட்டுள்ளன. நிலவும் எரிபொருள் நெருக்கடி காரணமாக நாட்டிற்கான விமானங்களின் சேவைகள் வரையறுத்தும், இடைநிறுத்தப்பட்டும் உள்ள காரணத்தினால் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக தபால் மா அதிபர் குறிப்பிட்டுள்ளார்.

### கமெண்ட் கந்தர்..




## யாரின் ஆதரவு யாருக்கு? தீவிர அரசியல் நகர்வுகள்

•யோ.தர்மராஜ்

ஜனாதிபதி பதவிக்காக போட்டியிட்டுள்ள ரணில் விக்ரமசிங்க, டலஸ் அலகப்பெரும மற்றும் அநுரகுமார திசாநாயக்க ஆகியோரில் யாருக்கு வெற்றிவாய்ப்புள்ளது என்பதை மக்கள் ஆர்வத்துடன் எதிர்பார்த்துள்ளனர்.

இந்நிலையில், பல்வேறு தரப்புகளும் தங்களுடைய ஆதரவு யாருக்கு என்பதை பகிரங்கமாக அறிவித்துள்ளன. அதன்படி, நேற்று மாலைவரையில், ஆளுந்தரப்பிலிருந்து பிரிந்து செயற்படும் சுயாதீனக் குழு, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் இளைஞர் அமைப்பு, இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், ஐக்கிய மக்கள் சக்தி என்பன... 02 பக்கம்

## ஒன்லைன் பதிவினூடாக எரிபொருள் விநியோகம்

### நாளை முதல் ஆரம்பம்





வாகன இலக்கத்தகட்டின் இறுதி இலக்கத்துக்கமைய எரிபொருள் விநியோகிக்கும் நாட்களில் திருத்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

ட்விட்டர் பதிவொன்றில் அமைச்சர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அதற்கமைய, நாளை 21ஆம் திகதிமுதல் நடைமுறைக்கு வரும்வகையில், இலக்கத்தகட்டின் கடைசி இலக்கத்துக்கமைய எரிபொருள் வழங்கப்படும் நாட்களில் இவ்வாறு மாற்றம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. 02 பக்கம்

### உஷ்



நாடாளுமன்றத்தில் இடம்பெறும் இன்றைய இரகசிய வாக்கெடுப்பின்போது எம்.பிக்கள் வாக்களிப்பதை கைத்தொலைபேசியில் படமெடுத்து தன்னுடைய வட்ஸ்அப்பிற்கு அனுப்புமாறு கட்சித் தலைவர் ஒருவர் தனது எம்.பிக்களிடம் கேட்டுக்கொண்டாராம்.

இதனையடுத்தே அப்படியான செயற்பாடுகள் நடக்கக்கூடாதென தடைவிதித்தாராம் சபாநாயகர். அப்படி படம் எடுக்கும் எம்.பிக்கள் 7 வருடகாலம் நாடாளுமன்றம் வரமுடியாதவாறு தடை விதிக்கப்படுமாம்.

# பஸ் கட்டணங்கள் குறைக்கப்பட்டன



நேற்று நள்ளிரவு முதல் அமுலுக்கு வரும் வகையில் பஸ் கட்டணம் 2.23 வீதத்தால் குறைக்கப்படுவதாக தேசிய போக்குவரத்து ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அதனடிப்படையில், குறைந்தபட்ச பஸ் கட்டணம் 38ரூபாவாக மாற்றியமைக்கப்படவுள்ளது.

இதன்படி, பஸ் கட்டணங்களில் நேற்று (19) நள்ளிரவு முதல்திருத்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தேசிய போக்குவரத்து ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

ஒப்பீட்டளவிலான வீதத்தில் பஸ் கட்டணம் குறைக்கப்படும் என இலங்கை போக்குவரத்து சபையின் பணிப்பாளர் நிலான் மிரண்டா குறிப்பிட்டுள்ளார்.

எரிபொருட்களின் விலைகள் குறைக்கப்பட்டுள்ளமைக்கு அமைய, பஸ் கட்டணத் திருத்தங்களை மேற்கொள்ள தயார் என பஸ் சங்கங்கள் நேற்றுமுன்தினம் (18) தெரிவித்திருந்தன.

# தினேஷ் குணவர்தனவை பிரதமராக்க வேண்டும்

## ஆளுந்தரப்பு எம்.பி. கோரிக்கை

**யோ.தர்மராஜ்**

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச உள்ளிட்ட ஐக்கிய மக்கள் சக்தியுடன் எங்களால் ஆட்சியமைக்க முடியாது. எனவே, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஆட்சி ஒன்றை அமைப்பதற்கு தினேஷ் குணவர்தனவை பிரதமராக நியமிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக, ஆளுந்தரப்பு உறுப்பினர் அனுப பெஸ்குவல தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரசுக்கு எதிராக முன்னெடுக்கப்பட்ட பல்வேறு போராட்டங்களில் ஐக்கிய மக்கள் சக்தியும் இணைந்துகொண்டது. உறுப்பினர்களின் வீடுகள் தீ வைக்கப்பட்டபோது, உறுப்பினர் ஒருவர் கொலை செய்யப்பட்ட சம்பவங்களுக்கு பின்னால் பாரிய அரசியல் சக்தி ஒன்று இருந்தது.

முன்னாள் ஜனாதிபதியின் பதவி காலத்தில் சில சில தவறான முடிவுகள் எடுத்தது போன்று, பல்வேறு சிறந்த தீர்மானங்களையும் எடுத்தார். ஊழலற்ற தலைவராக நாட்டை முன்னோக்கிக் கொண்டுச்செல்ல முற்பட்டார். இவ்வாறான தலைவர் பதவி விலகியதையடுத்து, ரணில் விக்ரமசிங்க, டலஸ் அலகப்பெரும மற்றும் அநுரகுமார திசாநாயக்க ஆகியோர் ஜனாதிபதி பதவிக்காக நாடாளுமன்றத்தினுள் போட்டியிடுகின்றனர்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவிலிருந்து தனியொரு வேட்பாளர் போட்டியிட வேண்டும். அதற்கு பொருத்தமானவர் டலஸ் அலகப்பெரும என நான் இதற்கு முன்னர் கட்சிக் கூட்டத்தில் கூறியுள்ளேன். கட்சிக்குள் இருக்கும் தவறுகளை திருத்திக்கொண்டு, பாரிய போராட்டத்தை முன்னெடுத்து கட்சியை சரியான வழியில் கொண்டுச் செல்ல வேண்டும் என டலஸ் அலகப்பெரும கூறினார். கட்சிக்குள் இருந்த தவறுகளை நிவர்த்தி செய்ய வேண்டும் என்பதால் அவர் கூறியதை ஏற்றுக்கொண்டோம்.

முன்னாள் ஜனாதிபதி பிரேமதாச காலத்தில் உருவாகிய இளைஞர் போராட்டத்தில் பலரை கொலை செய்தார். இதற்கு எதிராகவே டலஸ் அலகப்பெருமவின் போராட்டமும் ஆரம்பித்தது. தற்போது, சஜித் பிரேமதாச, தன்னுடைய தந்தையின் மிகுதியையே நான் செய்கின்றேன் எனக் கூறியுள்ளார்.

இந்த நிலையில், கட்சிக்குள் போராடி, கட்சியை சரியான திசைக்குக் கொண்டுச் செல்வதாகக் கூறி டலஸ் அலகப்பெரும, அந்த விடயத்தை தகர்த்தெறிந்து, சஜித் பிரேமதாசவுடன் இணைந்து ஆட்சியமைக்க தயாராகியுள்ளார்.

ஆனால், சஜித் பிரேமதாசவுடன் இணைந்து ஜனாதிபதி ஒருவரை உருவாக்க முடியாது. அவ்வாறு நடந்தால், சஜித் பிரேமதாச கூறுவதை நிறைவேற்றும் ஜனாதிபதியாக இருக்க வேண்டும். எனவே, சஜித் பிரேமதாச மற்றும் ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைந்து ஆட்சியமைக்க எங்களால் முடியாது.

எனவே, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவில் இருக்கும் தவறுகளை நிவர்த்தி செய்துகொண்டு, நாட்டை கட்டியெழுப்பும் ஆட்சியையே அமைக்க வேண்டும்.

இதற்காக, தினேஷ் குணவர்தனவை பிரதமராக நியமிப்பதற்கான நடவடிக்கைகளை எடுப்போம். எங்களுடைய வெற்றி உறுதியாகும். எனவே, டலஸ் அலகப்பெரும மற்றும் அவருக்கு ஆதரவளிக்கும் ஆளுந்தரப்பு உறுப்பினர்களும் இந்த பொய்களுக்கு ஏமாற வேண்டாம் - என்றார்.

### யாரின் ஆதரவு யாருக்கு...

தங்களுடைய ஆதரவு யாருக்கு என்பதை அறிவித்திருந்தன. அதன்படி, ஐக்கிய மக்கள் சக்தி, நாடாளுமன்ற உறுப்பினர் டலஸ் அலகப்பெருமவிற்கு ஆதரவளிப்பதற்கு தீர்மானித்துள்ளது. அக் கட்சியின் தலைவர் சஜித் பிரேமதாச ஜனாதிபதி பதவிக்கு போட்டியிட தீர்மானித்திருந்தபோதிலும், டலஸ் மற்றும் சஜித் தரப்புக்கிடையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற பேச்சுவார்த்தையின் இணக்கப்பாட்டுக்கு அமைய, சஜித் பிரேமதாச, போட்டியிலிருந்து விலகியதுடன், தங்களுடைய ஆதரவை டலஸ் அலகப்பெருமவிற்கு வழங்குவதாக அறிவித்தார்.

இதேவேளை, சுயாதீன குழுவினால் நடத்தப்பட்ட ஊடக சந்திப்பில் கலந்துகொண்டிருந்த விமல் வீரவங்ச கருத்து தெரிவிக்கையில்,

மக்களின் பாதுகாப்பற்ற மனநிலையை இல்லாதொழிக்கும் ஆட்சியே உருவாக்கப்படவுள்ளது. அதேபோன்று, காலிமுகத்திடலிலுள்ள இளைஞர்களின் கருத்துகளை கேட்கும் அவர்களுக்கு இடமளிக்கும் ஆட்சியே உருவாக்கப்படுகின்றன. முரண்பாடுகளை தாண்டி, ஒற்றுமையுடனும் ஒருமித்த நிலைப்பாட்டுடனும் முன்னோக்கிச் செல்லும் ஆட்சியே உருவாக்கப்படுகின்றன.

எனவே, நாடாளுமன்றத்திலுள்ள 225 உறுப்பினர்களின் அவப்பெயரை இல்லாதொழிக்கும் தினமாக இன்றைய தினம் இருக்கும். சர்வகட்சி அரசாங்கத்தை அமைத்து, அந்த அவப்பெயரை நீக்குவதற்காக ஒத்துழைப்பு வழங்குமாறு அழைப்புவிடுக்கின்றேன். எனவே, எங்களுடைய 10 கட்சிகளின் 16 உறுப்பினர்களும் ஜனாதிபதி வேட்பாளராகவுள்ள டலஸ் அலகப்பெருமவுக்கு வாக்களிப்பதற்கு தீர்மானித்துள்ளோம். அதற்கமைய அவர் வெற்றி பெறுவார் - என்றார்.

இதேவேளை, ஆளுந்தரப்பு முக்கிய கட்சியாகவுள்ள ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன, ரணில் விக்ரமசிங்கவுக்கே ஆதரவளிப்பதாக ஏற்கனவே அறிவித்துள்ளது. எனினும், அதன் தவிசாளர் ஜீ.எல். பீரிஸ், டலஸ் அலகப்பெருமவுக்கு ஆதரவளிப்பதாக அறிவித்துள்ளார். இந்த நிலையில், கட்சியின் இளைஞர் அமைப்பு, முன்னர் டலஸ் அலகப்பெருமவுக்கு ஆதரவளிக்க தீர்மானித்திருந்ததாக அறிய முடிந்தது. எனினும், நேற்று மாலை அவர்களும் ரணில் விக்ரமசிங்கவுக்கு ஆதரவளிப்பதற்கு தீர்மானித்துள்ளதாக அறிவித்துள்ளனர்.

மேலும், இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் இரு உறுப்பினர்களும் ரணில் விக்ரமசிங்கவுக்கு ஆதரவளிக்க தீர்மானித்துள்ளதாக நேற்று மாலை அறிய கிடைத்தது.

இதேவேளை, தமிழ்த் தரப்பில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி மற்றும் சி.வி. விக்னேஸ்வரன் ஆகியோர் நடுநிலை வகிப்பதாக அறிவித்துள்ளனர். அதேபோன்று, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு யாருக்கு ஆதரவளிப்பது என்பதை நேற்று மாலை வரை உத்தியோகபூர்வமாக அறிவிக்கவில்லை. தமிழ் முற்போக்கு கூட்டணி மற்றும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் ஆகியன டலஸ் அலகப்பெருமவுக்கு ஆதரவளிக்க தீர்மானித்துள்ளன.

இதற்கமைய, நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை பலமுள்ள ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன முழு ஆதரவையும் ரணில் விக்ரமசிங்கவுக்கு வழங்க தீர்மானித்துள்ளதாலும் எதிர்க்கட்சியில் சில உறுப்பினர்களும் அவருக்கு ஆதரவளிக்க தீர்மானித்துள்ளதாலும், இன்றைய வாக்கெடுப்பில் ரணில் விக்ரமசிங்கவுக்கே வெற்றி வாய்ப்புகள் அதிகமாக காணப்படுகின்றன. எனினும், எதிர்க்கட்சிகள், சுயாதீனக் குழுக்கள் போன்றவற்றின் ஆதரவை பெற்றுக்கொண்டுள்ள டலஸ் அலகப்பெருமவுக்கான வெற்றிவாய்ப்புகள் குறைவாகவே காணப்படுவதாகவும் ஒருவேளை, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் உறுப்பினர்கள் சிலர் அவருக்கு ஆதரவளித்தால் அவருக்கான வெற்றி வாய்ப்பும் காணப்படுவதாக அரசியல் வட்டாரத் தகவல்கள் தெரிவித்தன.

இதனிடையே, தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமாரவுக்கு அக்கட்சியின் உறுப்பினர்கள் மாத்திரம் வாக்களிப்பதால் வெற்றி வாய்ப்புகள் இல்லை எனவும் அரசியல் வட்டாரத் தகவல்கள் தெரிவித்தன.

### 44,000 மெட்ரிக் தொன்...

கடந்த மூன்று போகங்களுக்கு யூரியா உரம் வழங்கப்படாததால், நெல் விளைச்சல் வேகமாக குறைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

வருடாந்தம் பெரும் போகத்தில் சுமார் மூன்று மில்லியன் மெட்ரிக் தொன் நெல் அறுவடை கிடைத்தாலும், 2021/2022 பெரும் போகத்தில் யூரியா உரம் பயன்படுத்தாமல் செய்கை செய்ததால், நெல் விளைச்சல் 38-40 சதவீதம் குறைந்து 1.6 மில்லியனாக உள்ளது என விவசாய திணைக்களம் அறிவித்துள்ளது.

அடுத்த இரண்டு வாரங்களுக்குள் 21,000 மெட்ரிக் தொன் யூரியாவை ஏற்றிய மற்றுமொரு கப்பல் இலங்கைக்கு வரவுள்ளதாக முன்னாள் அமைச்சர் அமரவீர தெரிவித்துள்ளார்.




### ஒன்லைன் பதிவினூடாக...

அதற்கமைய, 0,1,2 ஆகிய இலக்கங்களுக்கு செவ்வாய் மற்றும் சனிக்கிழமைகளிலும், 3,4,5 ஆகிய இலக்கங்களுக்கு வியாழன் மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளிலும், 6,7,8,9 ஆகிய இலக்கங்களுக்கு திங்கள், புதன் மற்றும் வெள்ளி ஆகிய நாட்களிலும் எரிபொருள் விநியோகிக்கப்படவுள்ளது.

இதேவேளை, எதிர்வரும் 21 முதல் 24 வரையான திகதிகளில் கொழும்பின் பல இடங்களில் எரிபொருள் பெறுவதற்காக கிவ்ஆர் குறியீடு பரிசோதிக்கப்படுமென அமைச்சர் தெரிவித்துள்ளார். 25ஆம் திகதி முதல் நாடுமுழுவதும் இந்த திட்டம் அமுலாகும்.

### வாக்கெடுப்பை...

நாடாளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுக் கூட்டம் அவருடைய தலைமையில் நேற்று (19) நடைபெற்றபோதே இவ்வாறு தெரிவித்தார். அடுத்துவரும் ஜனாதிபதியை உரிய சட்ட விதிகளுக்கு அமையத் தேர்ந்தெடுப்பதற்கு இதுவரை அனைத்துத் தரப்பினரும் வழங்கிவரும் ஒத்துழைப்புக்கு நன்றி தெரிவிப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

வாக்களிப்பு ஆரம்பமாவதற்கு முன்னர் 1981ஆம் ஆண்டு 02ஆம் இலக்க ஜனாதிபதித் தேர்தல்கள் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்துக்கு அமைய வாக்களிப்புத் தொடர்பான வழிகாட்டல்களை நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கவிருப்பதாக இன்று நடத்தப்படும் இரகசிய வாக்கெடுப்பின்போது தெரிவத்தாட்சி அலுவலராகப் பணியாற்றும் நாடாளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக்க தசநாயக்க தெரிவித்தார்.

அதேநேரம், நாடாளுமன்றத்தை மீண்டும் எதிர்வரும் 27ஆம் திகதி கூட்டுவதற்கு நாடாளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. பொதுமக்கள் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் பதில் ஜனாதிபதியினால் வெளியிடப்பட்டுள்ள அவசர கால நிலைமை பிரகடனத்தை அன்றையதினம் அனுமதிக்காக சமர்ப்பிக்கவும் இங்கு தீர்மானிக்கப்பட்டது.

### பாரம்பரிய அரசியலுக்கப்பால்...

இது குறித்து நாடாளுமன்ற உறுப்பினர் டலஸ் அலகப்பெரும தெரிவிக்கையில்,

சுதந்திரத்துக்கு பின்னர் பெரும்பாலான அரசியல் கட்சிகள் கொள்கைத் திட்டத்தை கட்டியெழுப்பின. கொள்கைகளுக்கு அப்பால், ஒற்றுமையை கட்டியெழுப்புவதற்கு நடவடிக்கை எடுத்ததில்லை. எனினும், எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச மற்றும் ஆளுந்தரப்புக்கு இடையில் கொள்கைத்திட்டத்துக்கு அப்பால், ஒருமித்த வாதத்தை கட்டியெழுப்பியுள்ளோம். நாட்டு மக்களுக்கு கொள்கைத்திட்டத்தை விட ஒருமித்த வாதமே முக்கியமாகும். எனவே, இன்றைய நாளை ஒருமித்தவாத தினமாக அறிவிக்கின்றேன்.

பொருளாதாரம், அரசியல் என மக்கள் பாரிய நெருக்கடிகளுக்கு முகம் கொடுத்துள்ளனர். சிலவேளைகளில், தியவன்னா ஓயாவிற்கு நடுவிலுள்ள நாடாளுமன்றத்திலுள்ளவர்களுக்கு வெளியிலுள்ள மக்களின் குரல் கேட்காமல் போகலாம். பாரம்பரிய அரசியலை மாற்றியமைத்து, மக்களுக்காக இணையுமாறே மக்கள் அழைப்புவிடுத்தனர். இந்த இணைவே தற்போது இங்கு நடந்துள்ளது.

நேற்று (நேற்றுமுன்தினம்) வரை ஜனாதிபதி பதவிக்கான போட்டியில் போட்டியிடுவதற்கே எதிர்க்கட்சித் தலைவரும் அவருடைய கட்சியும் தீர்மானித்திருந்தனர். எனினும், சஜித் பிரேமதாச, பாரிய தியாகத்தை செய்துள்ளதால் இன்று நாங்கள் ஒன்றாக இணைந்துள்ளோம். இன ரீதியாக, கட்சி ரீதியாக, வெவ்வேறு நிகழ்ச்சி நிரல்களில் பிளவுப்படாத என்ற நாடாளுமன்றத்தின் எடுத்துக்காட்டை நாட்டின் எடுத்துக்காட்டாக மாற்றுவதே எங்களுடைய நோக்கமாகும்.

ஒரு கட்சிக்கோ அல்லது கட்சியின் தலைவருக்கோ இந்த நெருக்கடியிலிருந்து நாட்டை மீட்க முடியாது என்ற விடயத்துக்கே நாங்கள் தலை சாய்த்தோம். புதிய இலங்கையர்களாக, நாட்டின் பிரச்சினையிலிருந்து மக்களை மீட்க வேண்டும் என்பதை முன்னிலையாக கொண்டுள்ளோம். எனவே, வேட்புமனுத் தாக்கல் செய்தோரையும் எங்களுடன் இணைந்து, ஒருமித்த நிலைப்பாட்டை வெற்றியடையச் செய்வோம் என்பதை கேட்டுக்கொள்கின்றோம் - என்றார்.

**எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச**

பாரிய நெருக்கடிகளுக்கு மக்கள் முகம் கொடுத்து, நடுவீதியில் இருக்கும்போது, நாட்டை இரத்த ஆறாக மாற்றாது, ஒருமித்த நிலைப்பாட்டில் வீழ்ச்சியடைந்துள்ள நாட்டை மீட்பதற்காக நாங்கள் தியாகத்தின் வழியில் சென்றோம். மக்கள் எதிர்பார்க்கும் பொருளாதார, அரசியல், சமூக மற்றும் மறுசீரமைப்பு போன்ற எதிர்பார்ப்புகளை நிறைவேற்றுவதற்காக நாங்கள் கடமைப்பட்டுள்ளோம்.

அடிமட்டத்திலுள்ள குரல்களுக்கு செவிசாய்த்து, பொருளாதார, அரசியல், சமூக, கலாசாரம் மற்றும் இன உரிமைகளை பாதுகாப்பதற்கு நாங்கள் அர்ப்பணிப்புடன் செயற்படுவோம். இந்த நாட்டிலுள்ள மக்கள் எந்த இன, மதத்திற்கு உரிமையாக இருந்தாலும், நாங்கள் இலங்கையர்கள் என்ற பெயரில் மக்களுக்கு சுபீட்சத்தை ஏற்படுத்துவதற்கான சவாலான காலத்திற்குள் இருக்கின்றோம்.

மக்களுக்காகவே நாங்கள் இந்த தியாகத்தை செய்தோம். தனிப்பட்ட, அரசியல் வெற்றிகள் நாட்டின் வெற்றியாக மாற்றப்பட வேண்டும். மக்கள் எதிர்பார்க்கும் அரசியலமைப்பு சீர்திருத்தம், 19ஆவது திருத்தத்தை உள்ளடக்கிய, சிறந்த அரச நிர்வாகம், தனியானதொரு அரச சபையை உருவாக்கி ஆட்சி அதிகாரத்தில் சிவில் அமைப்புகளின் தலையீடுகளுக்கு இடமளித்தல் போன்றவற்றுக்காக நாங்கள் ஒன்றிணைந்துள்ளோம்.

நாடாளுமன்றத்திலுள்ள பல கட்சிகள் எங்களுடன் இணைந்துள்ளன. இந்த கப்பலின் புதிய பயணத்தில் அவர்கள் இணைந்துள்ளனர். நாட்டை பலப்படுத்தி, மக்களை வாழ வைப்பதே எங்கள் நோக்கமாகும். தற்போதுள்ள நெருக்கடியிலிருந்து மீள்வது கடினமானது. எனினும், கட்டம்கட்டமாக நாட்டை மீட்கும் திட்டங்கள் எங்களிடமுள்ளன. அந்தத் திட்டத்தை அடிமட்டத்தில் வெற்றிப் பெறச் செய்வதே எங்களுக்கான நோக்கமாகும். திட்டங்களை உரிய நேரத்தில் நிறைவேற்றும் பொறுப்பை நாங்கள் ஏற்றுக்கொள்கின்றோம் - என்றார்.

### ஜனாதிபதி யார்? இன்று முடிவு!...

இந்த நிலையில், ஜனாதிபதி பதவிக்கான வேட்புமனுத் தாக்கல் செய்வதற்கு நேற்று (19) நாடாளுமன்றம் கூடுவதற்கு முன்னர், எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, தான் ஜனாதிபதி பதவிக்கான போட்டியிலிருந்து விலகுவதுடன், டலஸ் அலகப்பெருமவின் வெற்றிக்காக செயற்படுவோம் என ட்விட்டர் பதிவில் தெரிவித்திருந்தார்.

இதனைத் தொடர்ந்து, சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் நேற்றுக் காலை 10 மணிக்கு நாடாளுமன்ற அமர்வு கூடிய போது, நாடாளுமன்ற செயலாளர் நாயகத்தினால் ஜனாதிபதி பதவிக்கான வேட்புமனுக்களை தாக்கல் செய்யுமாறு அழைப்பு விடுக்கப்பட்டது.

இது குறித்து நாடாளுமன்ற செயலாளர் நாயகம் அறிவிக்கையில்,

1981ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க ஜனாதிபதியை தெரிவு செய்யும் விசேட ஏற்பாட்டுக்கமைய எந்தவொரு உறுப்பினரும் தான் இருக்கும் ஆசனத்திலிருந்து எழுந்து, நாடாளுமன்ற செயலாளரை அழைத்து, வெற்றிடமாகவுள்ள ஜனாதிபதி பதவிக்காக, தற்போது நாடாளுமன்றத்திற்கு வருகை தந்துள்ள யாரேனும் ஒரு உறுப்பினரின் பெயரை முன்மொழிய வேண்டும் என்பதோடு, மற்றொரு உறுப்பினரினால் அப்பெயர் உறுதிப்படுத்தப்பட வேண்டும். அது குறித்து விவாதம் நடத்துவதற்கு அனுமதியில்லை.

பெயர் முன்வைக்கப்படும் உறுப்பினர் ஒருவேளை தெரிவு செய்யப்பட்டால், தான் ஜனாதிபதி சேவையை ஆற்றுவதற்கான விருப்பத்தை எழுத்து மூலமாக, முன்னரே அறிவிக்க வேண்டும் என்பதோடு, அதன் பிரதியை நாடாளுமன்ற செயலாளர் நாயகமான என்னிடம் கையளிக்க வேண்டும்.

எனவே, தற்போது ஜனாதிபதி பதவிக்கு போட்டியிடுவதற்கான பெயர்களை முன்வைக்க வாய்ப்பளிக்கப்படுகின்றது என அறிவித்தார்.

இந்த அறிவிப்பையடுத்து, ஆசனத்திலிருந்து எழுந்த எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, ஜனாதிபதி பதவிக்காக டலஸ் அலகப்பெருமவின் பெயரை முன்மொழிவதாக அறிவித்தார். இதனையடுத்து, ஆளுந்தரப்பு உறுப்பினர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ், அதனை வழிமொழிந்தார்.

இதனையடுத்து, எழுந்த சபை முதல்வர் தினேஸ் குணவர்தன, ஜனாதிபதி பதவிக்காக, ரணில் விக்ரமசிங்கவின் பெயரை முன்மொழிவதாக அறிவித்தார். அதனை, முன்னாள் அமைச்சர் மனுச நாணயக்கார வழிமொழிந்தார்.

இதேவேளை, தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திசாநாயக்கவின் பெயரை அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் முன்மொழிந்ததுடன் அதனை அக்கட்சியின் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் ஹரிணி அமரசூரிய வழிமொழிந்தார்.

இதனைத் தொடர்ந்து சபைக்கு விளக்கமளித்த, செயலாளர் நாயகம்,

இதற்கமைய, வேறெந்த பெயரும் முன்வைக்கப்படாதமையினால், 1981ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க, ஜனாதிபதி தெரிவு செய்வதற்கான விசேட ஏற்பாடுகளுக்கு அமைய, குறிப்பிடப்பட்டுள்ள சட்டத்திட்டங்களுக்கு அமைய, வெற்றிடத்துக்கான ஜனாதிபதி ஒருவரை தெரிவு செய்வதற்கான வேட்புமனுத் தாக்கல் ஏற்றுக்கொள்வது நிறைவடைந்துள்ளது.

அதன்படி, நாடாளுமன்ற உறுப்பினர்களான டலஸ் அலகப்பெரும, ரணில் விக்ரமசிங்க மற்றும் அநுரகுமார திசாநாயக்க ஆகிய உறுப்பினர்களின் வேட்புமனுக்கள் எனக்கு கிடைக்கப்பெற்றுள்ளது என்பதையும் சபைக்கு அறிவிக்கின்றேன். குறித்த வேட்புமனுக்கள் என்னால் ஏற்றுக்கொள்ளப்பட்டது என்பதையும் சபைக்கு அறிவிக்கின்றேன்.

1981ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க ஜனாதிபதி தெரிவு செய்யும் விசேட ஏற்பாட்டின் 6, 4 உறுப்புரைகளுக்கு அமைய, வெற்றிடமாகவுள்ள ஜனாதிபதி பதவிக்கு ஒரு உறுப்பினருக்கு பதிலாக மூவரின் பெயர்கள் முன்வைக்கப்பட்டு உறுதி செய்யப்பட்டுள்ளதால், வாக்கெடுப்புக்கான தினம் மற்றும் நேரம் நாடாளுமன்றத்தினால் ஒதுக்க வேண்டும் என்பதால், கடந்த 11ஆம் திகதி கட்சித் தலைவர்கள் மற்றும் நாடாளுமன்ற செயற்பாடுகளுக்கான குழுக் கூட்டத்தில் இணக்கப்பாட்டுக்கு அமைய, 20ஆம் திகதி காலை 10 மணிக்கு நாடாளுமன்றம் கூடி, வாக்கெடுப்பை நடத்த வேண்டும் - என்றார்.

அதன்படி, இடைக்கால ஜனாதிபதி பதவிக்கான இரகசிய வாக்கெடுப்பு இன்று (20) காலை 10 மணிக்கு நாடாளுமன்றத்தில் இடம்பெறும்.

# "ராஜபக்ஷக்களின் கைக்கூலியான ரணிலை விரட்டியடிப்போம்"

## ஹட்டனில் மக்கள் போராட்டம்






(க.கிஷாந்தன்)

"ராஜபக்ஷக்களின் கைக்கூலியான ரணிலை விரட்டியடிப்போம்" என்ற தொனிப்பொருளில் ஹட்டனில் தொழிற்சங்கங்கள் மற்றும் வெகுசன அமைப்புகளின் கூட்டமைப்பின் ஏற்பாட்டில் போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

இந்தப் போராட்டத்தில் சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகள், சமூக செயற்பாட்டாளர்கள், இளைஞர்கள் என பெருமளவானோர் பங்கேற்றனர். ஹட்டன் மணிக்கூட்டு கோபுரத்திற்கு முன்பாக நேற்று (19) மதியம் இப்போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

"இடைநிறுத்தாது முடிவுகட்டுவோம் மக்களை வெற்றிபெறச் செய்வோம், இடைநிறுத்தாது நிறைவுசெய்வோம் திருடர்களை விரட்டியடிப்போம், ராஜபக்ஷக்களின் கைக்கூலியான ரணிலை விரட்டியடிப்போம்" என்ற பதாகைகளை ஏந்தியவண்ணம், கோஷங்களை எழுப்பியவாறு குறித்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

"பதில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க பதவி விலக வேண்டும், மீண்டும் ஜனாதிபதியாக வரக் கூடாது" என போராட்டக்காரர்கள் வலியுறுத்தியதுடன், அவ்வாறு இல்லாவிட்டால் போராட்டம் தொடரும் எனவும் சூளுரைத்தனர்.

அத்துடன், கொழும்பு காலிமுகத்திடல் போராட்டக்களத்தில் இடம்பெறும் போராட்டத்துக்கு தமது முழு ஆதரவையும், மலையக மக்கள் சார்பில் வெளிப்படுத்தினர்.

# பயணிகளின் எண்ணிக்கை அதிகரிப்பால் ரயில் ரிக்கெட்டுகளை வழங்குவதில் சிக்கல்

நாட்டில் எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக பஸ் போக்குவரத்து குறைவடைந்துள்ள நிலையில் ரயில்களில் பயணிப்போரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. இதன் காரணமாக ரயில் பயணிகளுக்கான ரிக்கெட்டுகளை வழங்க முடியாத சூழ்நிலை உருவாகியுள்ளதாக புகையிரத நிலைய அதிபர்கள் தெரிவித்துள்ளனர்.

கொழும்பு கோட்டை, மருதானை, கம்பஹா, வேயங்கொடை, ராகம போன்ற ரயில் நிலையங்களிலும் உப நிலையங்களிலும் சாதாரண பயணச்சீட்டுகள் தீர்ந்துள்ளதாகவும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

ஏற்கனவே பயன்படுத்திய ரிக்கெட்டுகளை மீண்டும் பயன்படுத்தும் முறைமையை அறிமுகப்படுத்துவது குறித்து அவதானம் செலுத்துமாறு அதிகாரிகளிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

எரிபொருள் பற்றாக்குறையால் அரச, தனியார் பஸ் சேவைகள் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே சேவையில் ஈடுபடுகின்றன. குறிப்பாக தூர பஸ் சேவைகளும் மிகக் குறைந்தளவிலேயே ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

இதனால், நாளாந்த தொழில்களில் ஈடுபடுவோர் மற்றும் தேவைகருதி பயணங்களை மேற்கொள்வோர் ரயில்களில் பயணிக்கின்றனர். அவர்களுக்குரிய ரிக்கெட்டுகளை வழங்குவதற்கு மாற்று நடவடிக்கைகள் அவசியம் என கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

# ஜூலை மாதம் 18 நாட்களில் 25,547 சுற்றுலாப் பயணிகள் வருகை

நாட்டில் 18 நாட்களில் மாத்திரம் 25ஆயிரத்து 547 வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் வருகை தந்துள்ளதாக சுற்றுலாத்துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

இது கடந்த ஜூன் மற்றும் மே மாதத்தை விட சற்று அதிகமான எண்ணிக்கையாகும் என சுற்றுலாத்துறை அமைச்சு தெரிவித்துள்ளது. இதேவேளை, இந்த வருடத்தின் நேற்றுமுன்தினம் வரையான காலப்பகுதியில் 04இலட்சத்து 36ஆயிரத்து 921 சுற்றுலாப் பயணிகள் நாட்டிற்கு வருகைதந்துள்ளனர். எதிர்வரும் மாதங்களில் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கும் என சுற்றுலாத்துறை அமைச்சு நம்பிக்கை வெளியிட்டுள்ளது.

# அத்தியாவசிய சேவையென கூறி டீசல் பெற்ற நபர் கைது




(நடராஜா மலர்வேந்தன்)

பதுளை, எரிபொருள் நிரப்பும் நிலையத்தில் இருந்து அத்தியாவசிய சேவை எனக்கூறி லொறி ஒன்றில் ஆயிரத்து 40லீற்றர் எரிபொருளை பெற்றுக்கொண்ட நபரொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

படல்கும்பர பகுதியைச் சேர்ந்த 27 வயதுடைய நபரொருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இதுதொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

குறித்த நபர் டீசலை பெற்றுக்கொண்டு வெளியே வரும்போது நுகர்வோர் அதிகாரசபையினரால் சோதனைக்குட்படுத்தப்பட்டபோது, அத்தியாவசிய சேவைகள் என போலியான முறையில் டீசல் பெற்றுக்கொண்டுள்ளமை தெரியவந்துள்ளது. சந்தேகநபரினால் பெற்றுக் கொள்ளப்பட்ட ஆயிரத்து 40லீற்றர் டீசலும் கைப்பற்றப்பட்டுள்ளது.



இலங்கை போக்குவரத்து சபையில் அமைந்துள்ள எரிபொருள் நிலையத்திலும் விசாரணைகளை மேற்கொண்டுவரும் நுகர்வோர் அதிகாரசபையினர், கைது செய்யப்பட்ட நபருக்கு எதிராக வழக்கு தொடர்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# கலவரத்தை ஏற்படுத்தும் வகையிலான கருத்துகளை பரப்புபவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்

## பொலிஸ் திணைக்களம் அறிவிப்பு

மக்களை பயமுறுத்தும், இடையூறு விளைவிக்கும் அல்லது வகுப்புவாத கலவரத்தை ஏற்படுத்தும் வகையில் எந்த ஒரு அறிக்கையும் வெளியிட முடியாது என பொலிஸ் திணைக்களம் தெரிவித்துள்ளது.

ஒரு வதந்தி, தவறான அறிக்கை அல்லது படத்தை டிஜிட்டல் முறைகள் அல்லது சமூக ஊடகங்கள் உட்பட வேறு எந்த வழிகளிலும் தொடர்பு கொள்ளவோ அல்லது பரப்பவோ கூடாது என்றும் இவ்வாறான தவறுகளை செய்யும் நபர்களுக்கு எதிராக கணினி குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் ஏற்கனவே விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதுதொடர்பில் விளக்கமளித்து நேற்று பொலிஸ் திணைக்களத்தினால் அறிக்கையொன்று வெளியிடப்பட்டுள்ளது. அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

பொதுமக்கள் பாதுகாப்பு கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் பதில் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய ஜூலை 18ஆம் திகதி 2289/07 என்ற இலக்கம் கொண்ட விசேட வர்த்தமானியினூடாக அவசரகால சட்ட விதிமுறைகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

அந்த வர்த்தமானி அறிக்கையின் 15ஆவது உறுப்புரையினூடாக, பொதுமக்கள் மிரட்டக் கூடிய அல்லது பொதுமக்கள் குழப்பமடையக்கூடிய அல்லது இன வன்முறைகளுக்கு காரணமான அல்லது தவறு செய்யும் வகையிலான எந்தவொரு வாய்வார்த்தைகள் அல்லது பொய்ப்பிரசாரம் அல்லது தகவல்கள் அல்லது புகைப்படம் உள்ளிட்ட வாய்வார்த்தைகளை டிஜிட்டல் முறை மற்றும் சாதாரண ஊடகங்கள் உள்ளிட்ட வேறு ஏதேனும் முறையில் பரப்ப முடியாது என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

டிஜிட்டல் முறை அல்லது சமூக ஊடகங்களை பயன்படுத்தி மேற்குறிப்பிட்ட தவறுகளை செய்யும் நபர்களுக்கு எதிராக கணிணி குற்ற விசாரணை பிரிவினூடாக அல்லது ஒழுங்குபடுத்தி மேற்குறிப்பிட்ட தவறுகளை செய்யும் நபர்களுக்கு எதிரான நாட்டின் எந்தவொரு பொலிஸ் நிலையத்தினூடாகவோ அல்லது விசாரணை பிரிவுகளினூடாகவோ விசாரணைகள் முன்னெடுக்கப்படும் என்பதுடன் அவ்வாறான நபர்களுக்கு எதிராக வேறு சட்டத்தினூடாக வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

# உயர்ஸ்தானிகர்கள், தூதுவர்கள் சபாநாயகருடன் சந்திப்பு





இலங்கையிலுள்ள வெளிநாடுகளின் உயர்ஸ்தானிகர்கள் மற்றும் தூதுவர்கள் சிலர் நேற்று முன்தினம் (18) சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவைச் சந்தித்தனர்.

நாடாளுமன்ற கட்டடத் தொகுதியில் நடைபெற்ற இக்கூட்டத்தில் இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலீ சங், ஐரோப்பிய ஒன்றியத்தின் தூதுவர் டெனிஸ் சைபி, நியூசிலாந்து உயர்ஸ்தானிகர் மிஷேல் அப்லடன், பிரித்தானிய உயர்ஸ்தானிகர் சாரா ஹோல்டன், அவுஸ்திரேலியாவுக்கான உயர்ஸ்தானிகர் டேவிட் ஹொலி, கனேடிய உயர்ஸ்தானிகர் டேவிட் மெகினன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

பாதுகாப்பான நாடாளுமன்ற ஜனநாயகத்தை கொண்ட ஆசியாவின் பழமையான நாடு என்ற வகையில் அடுத்துவரும் ஜனாதிபதியைத் தெரிவுசெய்யும் நாடாளுமன்ற செயற்பாடுகளை வெளிப்படைத் தன்மையுடன் முன்னெடுப்பதற்கு சகல ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருப்பதாக சபாநாயகர் இதன்போது குறிப்பிட்டார்.

அடுத்த ஜனாதிபதியைத் தேர்ந்தெடுக்கும் நடைமுறை குறித்து நாடாளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக்க தசநாயக்க, இங்கு வருகை தந்திருந்த தூதுக் குழுவினருக்கு விளக்கமளித்தார். நாட்டின் ஜனநாயகத்தை உறுதிப்படுத்துவதற்கு எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகளை அவர்கள் பாராட்டியிருந்தனர்.



**யாழ்ப்பாணம் அரியாலை கிழக்கு பகுதியில் நேற்று (19) நட்சத்திர ஆமை ஒன்று மீட்கப்பட்டுள்ளது. குறித்த ஆமை அரிய இனம் என்றும், அதனை பாதுகாப்பாக வன ஜீவராசிகள் திணைக்களத்திடம் ஒப்படைக்கவுள்ளதாகவும் ஊர்வாசிகள் தெரிவித்தனர்.**

# சுகாதார சேவைப்பிரிவினரின் வேலைநிறுத்தத்தால் மாத்தறை பொது வைத்தியசாலை ஸ்தம்பிதம்

எரிபொருள் இல்லாமையின் காரணமாக மாத்தறை பொது வைத்தியசாலையின் சுகாதார சேவை பிரிவினர் நேற்று (19) காலையிலிருந்து ஆரம்பிக்கப்பட்ட வேலைநிறுத்த போராட்டத்தின் காரணமாக நோயாளர்கள் பெரும் நெருக்கடிக்குள்ளாகியுள்ளனர்.

தங்கி சிகிச்சைப் பெறும் நோயாளர்களுக்கு வழங்கப்பட வேண்டிய உரிய நேரம் கடந்திருந்துடன், நோயாளர்கள் உணவின்றி இருக்கவும் நேர்ந்துள்ளது.

வைத்தியர்கள் தவிர்ந்த ஏனைய சேவைப் பிரிவினர் இந்த வேலைநிறுத்தப் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்துள்ளனர். இதன் காரணமாக அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சைப் பெறும் நோயாளர்கள் உயிர் அச்சுறுத்தலை சந்திக்கும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

அவர்களை, வேறு வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்வதற்கு அம்பியூலன்ஸ்களுக்கு தேவையானளவு டீசல் இல்லாத நிலை ஏற்பட்டுள்ளது.

வெளிநோயாளர் பிரிவு மற்றும் சிகிச்சை வழங்கும் நடவடிக்கைகள் ஆகியன கைவிடப்பட்டிருந்ததுடன் சிகிச்சைப் பெறுவதற்கு வெளி பிரதேசங்களிலிருந்து வந்த நோயாளர்கள் மீளச் சென்றுள்ளனர்.

சுகாதார சேவையாளர்களுக்காக நேற்று முன்தினம் எரிபொருள் பெற்றுக்கொள்வதற்காக ஒதுக்கப்பட்ட எரிபொருள் நிரப்பு நிலையங்களில், எரிபொருள் பெற்றுக்கொடுக்காமையினால் தொழிலுக்கு வர எரிபொருள் இல்லை எனவும் சுகாதார சேவைப் பிரிவினர் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

இந்த வேலைநிறுத்தப் போராட்டத்தின் காரணமாக மாத்தறை பொது வைத்தியசாலையின் சிகிச்சை பிரிவு முழுமையாக ஸ்தம்பிதமடைந்திருந்தது.




**காலிமுகத்திடல் "அரகலய" போராட்டக்குழு சார்பில் வருகைதந்தவர்கள் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீமை இரண்டாவது தடவையாகவும் நேற்று முன்தினம்(18) கட்சியின் தாருஸ்ஸலாம் தலைமையகத்தில் சந்தித்து கலந்துரையாடினர்.**

எரிபொருள் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தினால் இணையவழி அனுமதிப்பத்திரம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

நாட்டில் தொடர்ச்சியாக எரிபொருள் நெருக்கடி நிலவிவரும் நிலையில், அரசாங்கத்தினால் அறிமுகப்படுத்தப்பட்ட டோக்கன் முறைமை தோல்வியடைந்தது. இதனையடுத்து எரிபொருளை பெற்றுக்கொள்வதற்காக இணையத்தளம் வாயிலாக பதிவுசெய்துகொள்ளுமாறு அமைச்சர் காஞ்சன விஜேசேகர அறிவித்தார்.

அத்துடன் நிறுவனங்களின் தேவைகளுக்கு அமைய நடமாடும் எரிபொருள் நிரப்பு நிலையங்களை அமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எரிபொருள் விநியோகம் ஆரம்பிக்கப்படும் வரை சிபெட்கோ எரிபொருள் நிரப்பு நிலையங்களில் வரிசைகளில் காத்திருக்க வேண்டாம் என்று கூறப்பட்ட போதிலும், மக்கள் எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு அருகில் காத்துக் கொண்டிருப்பதை காணக்கூடியதாக உள்ளது.

இதேவேளை, வரிசையில் நிற்கும் வாகனங்கள் அகற்றப்பட்டதன் பின்னரே, அந்த எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு எரிபொருள் விநியோகம் செய்யப்படும் என்று எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

எதிர்கால எரிபொருள் விநியோகத்தில் தேசிய எரிபொருள் அனுமதி அட்டை மற்றும் வாகன இலக்கத் தகட்டின் கடைசி இலக்கம் ஆகிய இரண்டும் கட்டாயமாக்கப்படும்.

அத்துடன், புதிய முறை நடைமுறைப்படுத்தப்படும் திகதி விரைவில் அறிவிக்கப்படும். புதிய முறையை நடைமுறைப்படுத்துவது இலகுவான காரியமல்ல என்றும் அவர் கூறினார்.

எதிர்வரும் சில மாதங்களில் இந்த எரிபொருள் விநியோக திட்டம் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். அனைவருக்கும் வாராந்த எரிபொருள் ஒதுக்கீட்டை உறுதிப்படுத்துவது முக்கியம். இதனை சுமுகமாக நடைமுறைப்படுத்த பொதுமக்களின் ஆதரவு தேவை என்றும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, மக்களுக்கு எரிபொருளை வழங்குவதற்காக தேசிய எரிபொருள் அட்டை நேற்று அறிமுகப்படுத்தப்பட்டது. அத்துடன், 10 இலட்சத்துக்கும் அதிகமானோர் அதனைப் பெற்றுள்ளார்கள் என்றும் அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.


தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42,
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com

2022, ஜூலை 20ஆம் திகதி, புதன்கிழமை


# எரிபொருள் விநியோகத்தில் ஒழுங்குமுறை அவசியம்

இதேவேளை, இன்று 20 ஆம் திகதி முதல் தேசிய எரிபொருள் அனுமதிப்பத்திரத்துக்கு அமைவாக மாத்திரமே எரிபொருள் விநியோகிக்கப்படும் என அகில இலங்கை எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் எம்.பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தினால் இணையவழி எரிபொருள் அனுமதி அட்டை அறிமுகப்படுத்தப்பட்டுள்ள போதிலும், அதனைப் பதிவு செய்வதற்கான ஸ்மார்ட் தொலைபேசிகள் இல்லாதவர்கள் அசௌகரியங்களை எதிர்நோக்கியுள்ளதாகத் தெரிவித்துள்ளனர்.

குறைந்த வருமானத்தைப் பெற்று மிகச் சிறிய கையடக்கத் தொலைபேசியை வைத்திருக்கும் தங்களால் எரிபொருளுக்காக பதிவுசெய்ய முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளதாக விவசாயிகள் கவலை வெளியிட்டுள்ளனர்.

அரசாங்கம் விவசாயிகளுக்கே அதிக முக்கியத்துவம் வழங்க வேண்டும் என்பதால், இந்த விடயத்தை கவனத்திற்கொள்ளுமாறு அமைச்சர் காஞ்சன விஜேசேகரவிடம் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதேவேளை, விவசாயிகளின் கோரிக்கை போலவே மீனவர்களும் தாங்கள் எதிர்நோக்கியுள்ள இக்கட்டான சூழ்நிலை குறித்து ஆதங்கத்தை வெளிப்படுத்தியுள்ளனர்.

நாடு முழுவதும் நாளைய தினம் (21) முதல் எரிபொருள் விநியோகம் சீராக இடம்பெறும் எனத் தெரிவித்துள்ள பெற்றோலிய கூட்டுத்தாபனம் வரிசைகளில் காத்திருக்க வேண்டாம் என்றும், எரிபொருள் அனுமதி அட்டையின் பிரகாரமே பெற்றோல், டீசல் என்பன வழங்கப்படும் எனவும் அறிவித்துள்ளது. அவ்வாறாயின், எரிபொருளுக்காக இத்தனை நாட்கள் காத்திருந்ததன் விரயம் தொடர்பில் வரிசைகளில் உள்ளவர்கள் விரக்தியடைந்துள்ளனர்.

எரிபொருளை பெற்றுக்கொள்வதற்காக ஏற்கனவே பல நாட்கள் காத்துக்கிடக்கின்ற நிலையில், இவ்வாறானதொரு அறிவிப்பானது தமக்கு மேலும் பாதிப்பாக அமையும் என அவர்கள் தெரிவித்துள்ளனர்.

எரிபொருள் வரிசைகளில் காத்திருக்க வேண்டாம் என ஏற்கனவே அரசாங்கத்தால் பல தடவைகள் அறிவிக்கப்பட்டபோதிலும் எரிபொருள் வழங்கப்பட்டது. ஆதலால், எப்போதாவது எரிபொருள் கிடைக்கும் என்ற எதிர்பார்ப்பில் பொதுமக்கள் காத்திருக்கிறார்கள்.

இந்நிலையில், அரசாங்கத்தினால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள திட்டமானது சகலருக்கும் சமமான வகையில் சேவைகள் சென்றடையக்கூடியதை உறுதிப்படுத்துவதாக அமைய வேண்டும். எரிபொருள் தேவை என்பது ஒரு குறிப்பிட்ட வர்க்கத்தினருக்கு மாத்திரமேயன்றி சகலருக்குமானதாகும்.

ஆதலால், புதிய திட்டமானது சகலரையும் பாகுபாடின்றி உள்வாங்க வேண்டியது அவசியமானதாகும். இல்லாவிடின், நெருக்கடி நிலைமை மேலும் அதிகரிக்குமே தவிர அவை பிரச்சினைகளுக்குத் தீர்வாக அமையாது என்பதை கருத்திற்கொள்ள வேண்டும்.

# நன்மையும் தீமையும் நாடி...



இன்றைக்கு, உலகத்தையே தனது உள்ளங்கையில் வைத்து ரசிக்க ஆரம்பித்துவிட்டான் மனிதன். இன்றைய தகவல் தொழில்நுட்ப வளர்ச்சி, நாம் கற்பனை செய்து பார்க்க முடியாத தொலைவைக் கடந்து பயணித்துக் கொண்டிருக்கிறது.

இந்த தொழில்நுட்பங்களை இணையத்தள வாயிலாக நமக்கு அளிக்கும் சேவகர்களாக பேஸ்புக், வட்ஸ்அப், யூ டியூப், இன்ஸ்டாகிராம் போன்ற பல செயலிகள் விளங்குகின்றன. இன்றைக்கு மனிதனின் அத்தியாவசியத் தேவைகள் உணவு, உடை, உறைவிடம் என்று வரிசையாக சொல்லி வருவோமாயின் அந்த வரிசையில் நான்காவதாக இடம் பிடிப்பது தகவல் தொழில்நுட்ப சாதனங்கள்தாம்.

அனைத்து தொழில்நுட்பங்களையும் ஒருங்கே அளிப்பது நவீன கைபேசிகள். அவற்றின் அபாரமான தொழில்நுட்பம் பல வகைகளிலும் மனிதர்களுக்கு உதவியாக இருக்கிறது.

வெளிமாநிலத்திலும், வெளிநாட்டிலும் உள்ள உறவுகளிடம் நேருக்கு நேர் முகம் பார்த்துப் பேச முடிகிறது. உள்ளூர் செய்திகளிலிருந்து உலகச் செய்திகள் வரை உடனுக்குடன் அறிந்து கொள்ள முடிகிறது. வணிக நிறுவன உரிமையாளர்கள் பணி காரணமாக வெளியூர் சென்றாலும் அங்கிருந்தோ, பயணத்தின்போதோ வர்த்தகம் செய்ய முடிகிறது. தங்களுக்குப் பிடித்த இனிமையான இசையை உடனே கேட்க முடிகிறது. எழுத்தாளர்கள், இலக்கியவாதிகள் கருத்துப் பரிமாற்றம் செய்து கொள்ள இயலுகிறது.

புத்தகங்கள் எல்லாம் மின்நூல்களாகக் கிடைக்கின்றன. வார, மாத இதழ்களும் அவ்வாறே கிடைக்கின்றன. கையில் பணமில்லாமலே பயணம் செய்தபடி ஆங்காங்கே பணப்பரிமாற்றம் செய்து கொள்ள முடிகிறது. கண்கவர் காட்சிகளை உடனே படம் பிடிக்க முடிகிறது. நாம் சொல்லச் சொல்ல எழுதக்கூடிய செயலிகளைப் பயன்படுத்த முடிகிறது.

இப்படி எண்ணிலடங்கா வசதிகள் ஒருங்கே அமைந்த ஒரு தொழில்நுட்பத்தை நாம் கைகளிலே வைத்திருக்கிறோம். புராண காலங்களில் சிலர் கடுந்தவம் செய்து இறைவனிடமிருந்து பல ஆற்றல்களைப் பெற்று அதன் மூலம் பல ஆச்சரியங்களை நிகழ்த்துவார்கள்.

ஆனால், இன்று எல்லோருமே இது போன்ற அதிசயங்களை நிகழ்த்தக்கூடிய ஆற்றலை இந்த தொழில்நுட்பம் நமக்கு அளித்திருக்கிறது. எது கேட்டாலும் உடனே தரக்கூடிய கற்பக விருட்சங்களாக இந்த கையடக்க கருவிகள் விளங்குகின்றன. மாயாஜாலம் என்கிற வார்த்தைக்கு இணையான பல செயல்களை இவை செய்கின்றன.

ஏழை–பணக்காரர் இருவருமே இதனால் சமமான சந்தோஷத்தை அனுபவிக்கிறார்கள். கல்வி அறிவு இல்லாதவரும் கூட இந்த தொழில்நுட்பத்தைப் பயன்படுத்த பழகிவிட்டார்கள். இப்படிப்பட்ட தொழில்நுட்பம் நம் காலத்தில் நமக்குக் கிடைத்த வரம் என்றே சொல்லாம்.

ஆனால், இது வரமல்ல சாபம். இதனால் சமூகம் சீர்கெடுகிறது என்கின்றனர் சிலர். இது படிக்கின்ற மாணவர்கள் மனதை மாசுபடுத்துகிறது. பலருடைய வங்கிக் கணக்கிலிருந்து பணம் திருடப்படுகிறது. ஆதாரமற்ற வதந்திகளைப் பரப்ப இது பயன்படுத்தப்படுகிறது. பலரின் அந்தரங்கங்களை திருடுகிறது. பாலியல் வன்கொடுமைகளுக்குக்கூட இது வழிவகுக்கிறது – இப்படி ஏராளமான குற்றச்சாட்டுகள்.

இவையெல்லாம் உண்மைதான், மறுப்பதிற்கில்லை. அந்ததந்த காலங்களில் கண்டுபிடிக்கப்படும் புதிய தொழில்நுட்பங்களை இப்படித்தான் நாம் குறை சொல்லிக் கொண்டே வருவோம். அப்புறம் அதையே தீவிரமாக பயன்படுத்தத் தொடங்கிவிடுவோம்.

உலகம் தோன்றியதிலிருந்தே இயற்கையாக படைக்கப்பட்ட அனைத்திலுமே நல்லவை, தீயவை என இரண்டும் கலந்தே வந்திருக்கின்றன. நாம் உண்ணுகிற உணவுகூட அளவுக்கு மிஞ்சினால் நஞ்சுதான். இயற்கையே நமக்கு எல்லாவற்றையும் கலந்துதான் தருகிறது. நமக்கு அதில் எது நன்மை அளிக்குமோ அதை மட்டும் எடுத்துக்கொள்ள வேண்டும்.

பயிர்கள் முளைக்கும்போதே களைகளும் முளைப்பதில்லையா? களைகள் முளைத்துவிட்டதே என்று அவற்றையும் சேர்த்தா வளர்க்கிறோம்? உணவு சமைப்பதற்காக பயன்படுத்தப்படும் நெருப்பு தவறி, வீட்டுக் கூரையில் விழுமாயின் வீடே எரிந்துவிடும். அதற்காக நாம் நெருப்பை பயன்படுத்தமல் இருக்க முடியுமா?

அந்தந்த தட்பவெப்ப நிலைக்கேற்ப நாம் நமது வாழ்க்கை முறைகளை, உணவுகளை மாற்றிக்கொள்வதில்லையா? கடலின் அலைகளைக்கண்டு அச்சப்படுபவர்களால் கடலில் நீராட இயலாது. நம் அன்றாட பயணத்தில் எத்தனையோ சாலை விபத்துகள் நடந்து கொண்டிருக்கின்றன. அதனால் நாம் பயணம் செய்யாமல் இருக்க முடியுமா? அதுபோன்ற நேரத்தில் நாம் பாதுகாப்பான கவசங்களைப் பயன்படுத்தி எச்சரிக்கையாக செயற்படுவதுதானே சிறந்தது!

ஒரு நன்மையைப் பெறுகிறபோது அதன் கூடவே ஒரு தீமையும் வரத்தான் செய்யும். அன்று பாற்கடலைக் கடைந்தபோது முதலில் விஷம்தானே வந்தது. அதன் பின்னர்தானே அமிர்தம் வந்தது. இவையெல்லாம் நமக்கு இயற்கை மறைமுகமாக உணர்த்தும் பாடங்களே.

இந்த அடிப்படையில் விஞ்ஞான வளர்ச்சியில் நாம் ஒரு எல்லையை அடைகிறபோது ஒரு தொல்லை வரத்தான் செய்யும். ஒரு பழத்தை சாப்பிடுகிறபோது அதில் இருக்கிற தேவையில்லாத தோல், விதை இவற்றை நீக்கிவிட்டு சாப்பிடுவதைப்போல், நாம் தொழில்நுட்ப சாதனங்களைப் பயன்படுத்துகிறபோது தேவையானவற்றை எடுத்துக்கொண்டு தேவையில்லாதவற்றை விலக்கப் பழக வேண்டும்.

நாம் வாழும் நகரில் குடிநீர்க் குழாய்கள் ஒரு பக்கம் இருந்தாலும், சாக்கடைகளும் இருக்கத்தானே செய்கின்றன. அவற்றின் அருகில் போகிறபோது நாம் நம் மூக்கைப் பிடித்துக்கொண்டு அவற்றைக் கடப்பதில்லையா?

அறிவியலால் ஆயிரம் நன்மைகளை நாம் பெறுகிறபோது சில தீமைகளும் வரத்தான் செய்யும். அவற்றிலிருந்து நம்மை விலக்கிக்கொண்டு பயணிப்பதுதான் அறிவுடைமை ஆகும். 'நன்மையும் தீமையுமாகிய இரண்டையும் ஆராய்ந்து நன்மை தருகின்றவற்றையே விரும்புகின்ற இயல்புடையவன் (செயலுக்கு உரியவனாக) ஆளப்படுவான்' என்கிறார் திருவள்ளுவர்.

**- இரா.பொன்னாண்டான் -**

## இன்றைய நாளில்...

- 1951 – ஜோர்தான் மன்னர் முதலாம் அப்துல்லா எருசலேமில் வெள்ளிக்கிழமைத் தொழுகையின் போது சுட்டுக் கொல்லப்பட்டார்.
- 1960 – சிறிமாவோ பண்டாரநாயக்க இலங்கையின் பிரதமராகத் தெரிவானார். இவரே உலகில் தெரிவுசெய்யப்பட்ட முதலாவது பெண் அரசுத்தலைவர் ஆவார்.
- 1969 – அப்பல்லோ திட்டம்: நாசாவின் அப்பல்லோ-11 சந்திரனில் இறங்கியது. நீல் ஆம்ஸ்ட்ரோங், எட்வின் ஆல்ட்ரின் ஆகியோர் முதல் மனிதர்களாக சந்திரனில் காலடி வைத்தனர்.
- 1976 – அமெரிக்காவின் வைக்கிங்-1 விண்கலம் செவ்வாயில் வெற்றிகரமாகத் தரையிறங்கியது.
- 1979 – இலங்கையில் பயங்கரவாத தடைச்சட்டம் கொண்டுவரப்பட்டது.
- 1989 – பர்மாவின் எதிர்க்கட்சித் தலைவி ஆங் சான் சூச்சி இராணுவ ஆட்சியாளர்களால் வீட்டுக் காவலில் வைக்கப்பட்டார்.
- 1997 – இலங்கையின் மூதூர் தொகுதியின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஈ.எச்.மஹ்ரூப் மற்றும் ஐவர் கண்ணிவெடித் தாக்குதலில் கொல்லப்பட்டனர்.
- 2005 – கனடாவில் ஒருபால் திருமணம் சட்டபூர்வமாக்கப்பட்டது.

## நக்கல் நமசிவாயம்

*எரிபொருள் கட்டணங்கள் மற்றும் பஸ் கட்டணங்களைக் குறைச்சிருக்கிறத பார்த்தாலே தெரியுது அரசாங்கம் படுற பாடு..!*



# உணவில் உப்பு அதிகம் சேர்த்தால் என்னவாகும்?




உங்கள் உணவில் உப்பு அதிகம் சேர்க்க விரும்புகிறீர்களா? அப்படியெனில் உங்கள் மரணத்தை நீங்களே முன்கூட்டியே அழைக்கிறீர்கள் என்று அர்த்தம்.

உப்பு அதிகம் சேர்ப்பது மரண அபாயத்தை அதிகரிக்கலாம் என 5 இலட்சத்துக்கும் மேற்பட்டவர்களிடம் நடத்தப்பட்ட சமீபத்திய ஆராய்ச்சி எச்சரிக்கை விடுக்கிறது.

"யூரோப்பியன் ஹார்ட் ஜர்னல்" என்ற இதழில் இந்த ஆய்வின் முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

அமெரிக்காவில் உள்ள துலேன் பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்கள், உப்பை அதிகம் உணவில் சேர்த்துக்கொள்பவர்களுக்கு அகால மரணம் ஏற்படும் அபாயம் 28 சதவீதம் அதிகமாக இருப்பதாகக் கண்டறிந்துள்ளனர்.

சாதாரணமாக 40 முதல் 69 வயதுக்குட்பட்ட ஒவ்வொரு நூறு பேரில் மூன்று பேர் முன்கூட்டியே இறக்கின்றனர். இதில் உப்பு அதிகம் எடுத்துக்கொள்வதால் இந்த வயதினரில் நூறில் கூடுதலாக ஒருவர் இறப்பதாக ஆய்வு கூறுகிறது. உணவில் உப்பு அதிகம் சேர்க்காதவர்களுடன் ஒப்பிடும்போது உப்பு சேர்க்கும் நபர்களிடையே ஆயுட்காலம் குறைவது ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது.

உணவில் எப்போதும் உப்பு சேர்க்கும் பழக்கம் உள்ள ஆண்களும், பெண்களும் முறையே தங்கள் ஆயுளில் 1.5 ஆண்டுகள், 2.28 ஆண்டுகள் என குறைத்துக்கொள்கின்றனர்.

உடல்நலத்தை மேம்படுத்துவதற்கான உணவுப்பழக்கவழக்கங்களை மற்றும் பரிந்துரைகளை இந்த ஆய்வு வழங்குவதாக அமெரிக்காவில் உள்ள பொதுச் சுகாதார மருத்துவப் பள்ளியைச் சேர்ந்த பேராசிரியர் லு குய் தெரிவித்தார்.

உணவில் உப்பு சேர்ப்பதை கொஞ்சமாக குறைத்தால்கூட, கணிசமான ஆரோக்கிய நன்மைகள் கிடைக்கும் என்றும் குறிப்பிட்டார்.

அதிக அளவு பழங்கள் மற்றும் காய்கறிகளை உட்கொள்பவர்களில் உப்பின் பாதிப்பு இயல்பாகவே சற்று குறைவதாக ஆய்வாளர்கள் கூறுகின்றனர். எனினும், இதுகுறித்த ஆதாரங்கள் இல்லை. பழங்கள் மற்றும் காய்கறிகள், பொட்டாசியத்தின் முக்கிய ஆதாரங்கள் என்பதால் இந்த கண்டுபிடிப்பு குறித்து ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை என்று குய் கூறினார்.

ஆனால், இந்த ஆய்வுக்கு தொடர்பில்லாத, ஸ்வீடனின் கோதன்பர்க் பல்கலைக்கழக மூத்த ஆராய்ச்சியாளரும், மருத்துவப் பேராசிரியருமான பேராசிரியை அன்னிகா ரோசெங்ரென், உப்பை அதிகம் குறைத்தாலும் பாதிப்பு என்கிறார். எனவே, உப்பு எடுத்துக்கொள்வது என்பது முடிவில்லாத சர்ச்சையாகவே தொடர்கிறது. எனினும், அளவோடு எடுத்துக்கொள்வது நல்லது. அளவுக்கு மீறினால் அமுதும் நஞ்சாகும்.

# இந்தியாவினால் வழங்கப்பட்ட உரத்தை பயிர்ச்செய்கைகளுக்கு பயன்படுத்தலாம்

## இரசாயன ஆய்வில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக தேசிய உரச் செயலகம் அறிவிப்பு

இந்திய அரசாங்கத்தினால் பெற்றுக்கொடுக்கப்பட்ட உரத் தொகையை விவசாயத்துக்கு பயன்படுத்திக்கொள்ள முடியுமென தேசிய உரச் செயலாளர் காரியாலயம் தெரிவித்துள்ளது.

இந்திய அரசாங்கத்தினால் இலங்கைக்கு பெற்றுக்கொடுக்கப்பட்ட உரம் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனை அறிக்கையின் பிரகாரம், 0.9 சதவீதம் பையூரெட் காணப்படுவதாக தேசிய உர செயலகம் நேற்று முன்தினம் (11) அறிவித்துள்ளது.





இந்த உர தொகை தொடர்பில் தேசிய உர செயலக காரியாலயம் இந்நாட்டு இரசாயன ஆய்வுக்கூடத்தினூடாக தர அறிக்கையொன்றை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுத்துள்ளது.

இதற்கு முன்னர், இந்த உரத் தொகை தொடர்பில் 03 சர்வதேச இரசாயன ஆய்வு அறிக்கை பெற்றுக்கொள்ளப்பட்டிருந்ததுடன், அந்த ஆய்வு அறிக்கைகளில் 0.65 சதவீதம் பையூரெட் காணப்படுவதாக குறிப்பிடப்பட்டிருந்தது.

பொதுவாக இலங்கையில் பயன்படுத்தப்படும் யூரியாவில் 1 சதவீத பையூரெட் காணப்படும். இந்தியாவினால் வழங்கப்பட்டுள்ள யூரியாவில் இலங்கையில் மேற்கொள்ளப்படும் நெல் உள்ளிட்ட பயிர்ச்செய்கைகளுக்கு பயன்படுத்துவதில் பிரச்சினை எதுவும் இல்லை எனவும் தேசிய உரச் செயலக காரியாலயம் விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீரவுக்கு அறிவித்துள்ளது.

இந்திய கடனுதவி வேலைத்திட்டத்துக்கமைய 65 ஆயிரம் மெட்ரிக் தொன் யூரியா உரத் தொகையின் முதல் கட்டமாக 44 ஆயிரம் மெட்ரிக் தொன் உரம் கடந்த 09ஆம் திகதி கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்திருந்தது.

இந்த உரத்தொகை கடந்த 10ஆம் திகதி கொழும்பிலுள்ள இந்திய உயர்ஸ்தானிகரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் வைத்து இலங்கைக்கு கையளிக்கப்பட்டது. இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லேவினால் இந்த உரத்தொகைக்கான ஆவணங்கள் விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீரவிடம் ஒப்படைக்கப்பட்டது.

இதன்போது கருத்து தெரிவித்த விவசாய அமைச்சர்,

நெருக்கடி நிலைமையை சந்தித்துள்ள இவ்வாறானதொரு சந்தர்ப்பத்தில் இந்திய அரசாங்கத்தினால் யூரியா உரம் பெற்றுக்கொடுக்க எடுக்கப்பட்ட தீர்மானம் தொடர்பில் இந்திய அரசாங்கத்துக்கு நன்றி தெரிவிப்பதாக குறிப்பிட்டுள்ளார்.

## ஜனாதிபதி கோட்டா விமானப்படை தளபதிக்குரிய வீட்டிலிருப்பதாக வெளியாகும் தகவல் போலியானது

### ஊடகப்பிரிவு விளக்கம்

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, விமானப்படை தளபதி எயார் மார்ஷல் சுதர்ஷன பத்திரணவுக்கு செரந்தமான பிரத்தியேக இல்லமொன்றில் தங்கியிருப்பதாக சமூக ஊடகங்களில் வெளியாகும் தகவல்களில் எந்த உண்மைத் தன்மையும் இல்லை எனவும், அதனை முற்றாக மறுப்பதாகவும் விமானப்படை ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

இதுதொடர்பில் விளக்கமளித்து நேற்று அறிக்கையொன்றை வெளியிட்டுள்ள விமானப் படை ஊடகப்பிரிவு, அதில் இந்த விடயத்தை சுட்டிக்காட்டியுள்ளது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தற்போது விமானப்படை தளபதி எயார் மார்ஷல் சுதர்ஷன பத்திரணவுக்கு சொந்தமான பிரத்தியேக இல்லமொன்றில் தங்கியிருப்பதாக முன்னாள் பொலிஸ் அதிகாரியான அஜித் தர்மபாலவினால் வெளியிடப்பட்ட குரல் பதிவொன்று சமூக ஊடகங்களில் பகிரப்பட்டு வருகிறது.

இந்த குரல் பதிவில் குறிப்பிடப்படும் எந்தவொரு விடயமும் உண்மையில்லை.

இது விமானப்படை மற்றும் விமானப்படை தளபதிக்கு இழிவை ஏற்படுத்தும் வகையிலான செயலாகும்.

விமானப்படைக்கு எதிராக பொது மக்கள் மத்தியில் வைராக்கியத்தையும் குரோதத்தையும் ஏற்படுத்தும் சந்தர்ப்பவாத நோக்கிலான செயற்பாடு எனவும் விமானப் படை ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

## முந்தல் ஸ்ரீ திரௌபதி அம்மன் ஆலய தீ மிதிப்பு நிகழ்வு இன்று



(உடப்பு நிருபர்)

வரலாற்றுச் சிறப்புமிக்க முந்தல் ஸ்ரீ திரௌபதி அம்மன் ஆலய மகோற்சவத்தின் தீ மிதிப்பு நிகழ்வு இன்று (13) இரவு 8.00 மணிக்கு இடம்பெறவுள்ளது.

கடந்த 26ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமான நிகழ்வுகள், தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. 18 நாட்களாக இடம்பெற்றுவரும் இவ்விழா முழுக்க முழுக்க மகா பாரதக் கதையை நினைவுபடுத்தும் ஒரு விழாவாக இடம்பெறுவது குறிப்பிடத்தக்கதாகும்.

இரவு 8 மணியளவில் இடம்பெறும் தீமிதிப்பில் முதலில் பூசகர் குழந்தைவேல் சுரேந்திரன் தனது அக்கினிக் கரகத்துடன் முதற்பாதத்தை வைத்து தீ மிதிப்பார். அதன் பின்னர் பக்த அடியார்கள் ஒவ்வொருவராக தீ மிதிப்பில் கலந்துகொண்டு தீ மிதிப்பார்கள். இந்நிகழ்வு சுமார் 40 நிமிடங்கள் இடம்பெறும்.

## ஆழ்கடலில் விபத்துக்குள்ளான மீனவர்கள் மூவர் மீட்பு





மஹா இராவணன் கலங்கரை விளக்கத்திலிருந்து 174 கடல் மைல்கல் தொலைவில் இலங்கைக்கு தென் கிழக்கு திசையின் ஆழ்கடல் பகுதியில் விபத்துக்குள்ளான மீன்பிடி படகில் உயிர் அச்சுறுத்தலுக்குள்ளான மீனவர்கள் மூவர், கடற்படை தலைமையகத்திலுள்ள கொழும்பு கடல்சார் தேடல் மற்றும் மீட்பு ஒருங்கிணைப்பு மைய அதிகாரிகள் ஒருங்கிணைந்து, பாதுகாப்பாக நேற்று முன்தினம் (11) மீட்கப்பட்டுள்ளனர்.

கடந்த 02ஆம் திகதி வாழைச்சேனை மீன்பிடி துறைமுகத்தில் 03 மீனவர்களுடன் மீன்பிடி நடவடிக்கைக்கு வெளியேறிய IMUL – A-0301 MTR என்ற மீன்பிடிப் படகே இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளதாக மீன்பிடி மற்றும் நீர்வள பாதுகாப்பு திணைக்களத்தினால் கடற்படை தலைமையகத்திலுள்ள கொழும்பு, கடல்சார் தேடல் மற்றும் மீட்பு ஒருங்கிணைப்பு மையத்துக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிவுறுத்தலுக்கு உடனடியாக செயற்பட்ட கடல்சார் தேடல் மற்றும் மீட்பு ஒருங்கிணைப்பு மைய அதிகாரிகள் அவர்களை மீட்க நடவடிக்கை எடுத்துள்ளனர். இந்த விபத்திலிருந்து மீட்கப்பட்ட மூவரையும் காலி துறைமுகத்துக்கு அழைத்து வருவதற்கான நடவடிக்கையை எடுத்துள்ளனர்.

## குருநாகல் வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவுக்கு பூட்டு

எரிபொருள் பிரச்சினையின் காரணமாக குருநாகல் போதனா வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவை மூடுவதற்கு அந்த வைத்தியசாலையின் நிர்வாகம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இதேவேளை, தங்கி சிகிச்சை பெறும் நோயாளர்களுக்கு மாத்திரம் சிகிச்சை வழங்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதாக வைத்தியசாலையில் நிர்வாக அதிகாரி தெரிவித்துள்ளார்.

அந்த வைத்தியசாலையின் விசேட வைத்தியர் தயாநந்த பண்டார கருத்து தெரிவிக்கையில்,

வைத்தியசாலையின் நடவடிக்கைகள் தற்போது வரையறுக்கப்பட்டுள்ளன. தங்கி சிகிச்சைப்பெற்று வரும் நோயாளர்களுக்கு மாத்திரமே சிகிச்சை வழங்கப்படுகிறது. எரிபொருள் பிரச்சினை பாரதூரமான சிக்கலை ஏற்படுத்தியுள்ளது.

இந்த வைத்தியசாலையில் கடமையாற்றும் 90 சதவீதமான விசேட வைத்திய நிபுணர்கள் இந்த மாகாணத்தைச் சேரந்தவர்கள் அல்ல.

அநேகமானவர்கள் கண்டி மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள். அவ்வாறு இல்லாவிட்டால் கொழும்பிலிருந்தும் கடமைக்காக வைத்தியர்கள் இங்கு வருகிறார்கள்.

நாங்கள் கடமைகளுக்கு பஸ் அல்லது புகையிரதத்திலேயே கடமைக்கு வருகிறோம். கடமைக்கு வந்து ஒரு வாரத்துக்கு மேலாக எங்களால் வீட்டுக்கு மீண்டும் செல்ல முடியாத நிலை காணப்படுகின்றது.

நாட்டிலுள்ள நிலைமையின் காரணமாக சுகாதார அமைச்சுடன் கலந்துரையாடி, வியாழன் அல்லது வெள்ளிக்கிழமைகளில் எரிபொருள் பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்பு இல்லாத நிலை நிலவுகிறது என்று சுட்டிக்காட்டியுள்ளார்.

## ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட பொலிஸ் அதிகாரி கைது!

நாட்டில் கடந்த 09ஆம் திகதி மஹரகமவில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களுடன் இணைந்துகொண்ட பொலிஸ் அதிகாரி கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த பொலிஸ் உத்தியோகத்தர் நேற்று முன்தினம் (11) அதிகாலை காலிமுகத்திடல் போராட்டப் பகுதியில் வைத்தே கோட்டை பொலிஸ் அதிகாரிகளினால் கைதுசெய்யப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த அதிகாரி பொலிஸ் போக்குவரத்து பிரிவில் பணிபுரியும் கான்ஸ்டபிள் ஒருவர் ஆவார். அதிகாரி பொலிஸ் சீருடையுடன் காலணிகளை அணிந்து சந்தேகத்திற்கிடமான வகையில் அங்கு தங்கியிருந்தமையினால் கைது செய்யப்பட்டுள்ளதாக கோட்டை பொலிஸ் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

அவருக்கு பொலிஸார் பிணை வழங்கி விடுவிக்கப்படுவார் என்றும் அந்த உயர் அதிகாரி குறிப்பிட்டுள்ளார்.


எனினும், பொலிஸ் தலைமையகம் அவருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கவுள்ளது என்றும் அவர் மேலும் அறிவித்துள்ளார்.

## பிரதமர் ஊடகப்பிரிவிலிருந்த உபகரணங்கள் திருட்டு









அலரிமாளிகையின் ஊடகப்பிரிவிலிருந்த உபகரணங்கள் திருடப்பட்டுள்ளதாக பிரதமர் ஊடகப் பிரிவு கொள்ளுப்பிட்டி பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஊடகப் பிரிவிலிருந்த இரு மடிக்கணினிகள், ஒளிப்பதிவு கெமரா மற்றும் மேலுமொரு கெமரா என்பன இவ்வாறு திருடப்பட்டுள்ளதாக பிரதமர் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

ரணில் விக்ரமசிங்க பிரதமராக நியமிக்கப்பட்டதன் பின்னர் அலரிமாளிகைக்கு செல்லவில்லை என்பதுடன், பிரதமர் ஊடகப்பிரிவில் மாத்திரம் அலரிமாளிகையின் வளாகத்தில் தனியாக கட்டடமொன்று நிர்மானிக்கப்பட்டுள்ளது.

கடந்த 09ஆம் திகதி ஆர்ப்பாட்டக்காரர்கள் அலரிமாளிகைக்குள் நுழைந்ததன் பின்னரே இந்த உபகரணங்கள் காணாமல்போயுள்ளதாக பிரதமர் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

அலரிமாளிகையின் சுவர், கதவு என்பவற்றை உடைத்து, அங்கிருந்த ஆவணங்கள் அழிக்கப்பட்டுள்ளதாக பிரதமர் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.







கடந்த 9ஆம் திகதிய மக்கள் எழுச்சிப் போராட்டத்தினால் ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ இல்லம், ஜனாதிபதியின் அலுவலகம் மற்றும் பிரதமரின் அலரிமாளிகை என்பன மக்கள் கட்டுப்பாட்டில் இருந்து வருகின்றன. அந்த வகையில் நேற்றும் (12) அலரிமாளிகையை மக்கள் பார்வையிடுவதற்காக வந்ததை அவதானிக்க கூடியதாக இருந்தது. இதேவேளை இளைஞர்கள் உணவு சமைப்பதையும் அவதானிக்க கூடியதாக இருந்தது. (படங்கள் - ஏ.எஸ்.எம்.ஜாவித்)

## 12.07.2022 நாணய மாற்று வீதம்

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

| நாணயம் | கொள்வனவு வீதம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் | 127 15 8 | 138 6 01 |
| கனேடியன் டொலர் | 161 76 3 | 174 251 |
| சீன யுவான் (ரென்மின்பி) | 41 0703 | 44 1514 |
| யூரோ | 245 0234 | 26 6 46 |
| ஜப்பான் யென் | 1 477 | 1 5861 |
| சிங்கப்பூர் டொலர் | 141 3602 | 152 381 |
| ஸ்ரேலிங் பவுன் | 311 414 | 328 818 |
| சுவிஸ் பிரான்ங் | 250 3843 | 266 4343 |
| ஐ.அ.டொலர் | 245 8447 | 257 2 00 |

| நாடு | நாணயம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| பஹ்ரைன் | பஹ்ரைன் தினார் | 846 1580 |
| குவைட் | குவைட் தினார் | 0,061 3810 |
| ஓமான் | ஓமான் றியால் | 826 3 18 |
| கட்டார் | கட்டார் றியால் | 87 1732 |
| சவூதி அரேபியா | சவூதி அரேபிய றியால் | 85 0276 |
| ஐக்கிய அரபு இராச்சியம் | ஐக்கிய அரபு இராச்சிய திர்ஹம் | 87 1451 |

# உரிமையாளர் இன்றி பீதியை ஏற்படுத்திய பயணப்பொதியால் ஹட்டன் நகரில் பதற்றம்

## சோதனையில் ஆடைகள் இருந்தமையால் வழமைக்கு திரும்பியது







(க.கிஷாந்தன்)

சந்தேகத்திற்கிடமான பயணப்பொதியால் ஹட்டன் பஸ் நிலையத்தில் நேற்றுமுன்தினம்(18) மாலை சில மணி நேரம் பதற்றமான நிலைமை ஒன்று ஏற்பட்டிருந்தது.

ஹட்டன் பிரதான பஸ் நிலையத்தில் இலங்கை போக்குவரத்துக்கு சொந்தமான பஸ்கள் நிறுத்தி வைக்குமிடப்பகுதியில் உரிமையாளர் இல்லாத நிலையில் கிடந்த பயணப்பொதியால் இந்த பதற்றமான நிலைமை ஏற்பட்டிருந்தது.

நீண்ட நேரமாக குறித்த பயணப்பொதி அப்பகுதியில் இருந்துள்ளது. எனினும், யாரும் உரிமை கோர முன்வராததாலேயே இந்த பதற்ற நிலை ஏற்பட்டது. பின்னர், பயணிகளாலும், கடைத்தொகுதி உரிமையாளர்களாலும் ஹட்டன் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டுள்ளதையடுத்து, அவ்விடத்திற்கு விரைந்த பொலிஸார் அந்த இடத்திலிருந்து மக்களையும், பஸ்களையும் துரிதமாக அப்புறப்படுத்தி மக்கள் அற்ற இடமாக மாற்றினர்.

அதையடுத்து, வெடிபொருட்களை தேடும் பணியில் ஈடுபடும் பொலிஸ் நாய் வரவழைக்கப்பட்டு, சோதனை செய்ததில், பயணி ஒருவர் குறித்த பயணப்பொதியை விட்டுச் சென்றுள்ளதாகவும், குறித்த பொதியில் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கான ஆடைகள் இருந்துள்ளது.

மேலதிக விசாரணைகளுக்காக மேற்படி பயணப்பொதி பொலிஸ் நிலையத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து ஹட்டன் நகரம் வழமைக்கு திரும்பியமை குறிப்பிடத்தக்கது.







பதுளை மாவட்ட அரச செயலக நிர்வாக உத்தியோகத்தர்கள் மற்றும் பாடசாலை அதிபர், ஆசிரியர்கள் ஆகியோருக்கான 'பன்மைத்துவம்' தொடர்பான செயலமர்வு, பதுளை ரிவர் சைட் கிராண்ட் விடுதியில் தேசிய சமாதான பேரவையின் பிரதான இணைப்பாளர் இராமச்சந்திரன் ஸ்ரீகாந்தன் தலைமையிலான நேற்று(19) நடைபெற்றது. இதன்போதான படங்களை காணலாம். (பதுளை நிருபர்)

# கூரைத் தகடுகள் களவு; பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு



(மஸ்கெலியா நிருபர்)

மஸ்கெலியா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட – சாமிமலை டீசைட் தோட்டத்தில் அமைக்கப்பட்டுவரும் தனி வீட்டுத் திட்டத்தின் கூரைத் தகடுகள் களவாடப்பட்டுள்ளதாக மஸ்கெலியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம்(18) காலை அவ்வழியே தொழிலுக்குச் சென்ற தொழிலாளர்கள் குறித்த வீட்டின் கூரை கழற்றப்பட்டுள்ளதை கண்டு, தோட்ட நிர்வாகத்திற்கு தகவல் வழங்கினர். இதனைத் தொடர்ந்து தோட்ட நிர்வாகத்தால் மஸ்கெலியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறு தொடர்ந்து கவனிப்பாரற்று இருக்குமேயானால் அங்குள்ள அனைத்து பொருட்களும் சூறையாடப் பட்டுவிடும். எனவே, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடன் நடவடிக்கை எடுத்து இந்த குடியிருப்புகளை முழுமையாக அமைத்து உரியவர்களிடம் ஒப்படைக்க வேண்டும் என அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

மத்திய மலைநாட்டில் பல பகுதிகளில் இவ்வாறு கட்டிடங்கள் காணக்கூடியதாக உள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கதிர்காமத்துக்கான பாதயாத்திரை சாமிமலை நகரிலிருந்து ஆரம்பம்



(செ.தி.பெருமாள்)

வரலாற்று பிரசித்திபெற்ற கதிர்காமம் கொடியேற்றவிழா எதிர்வரும் 29ஆம் திகதி ஆரம்பிக்கவுள்ளது. இந்நிலையில், மலையகப் பகுதிகளில் இருந்தும் பக்தர்கள் பாதயாத்திரை செல்ல ஆரம்பித்துள்ளனர்.

குறித்த பாதயாத்திரையானது நேற்றுமுன்தினம்(18) காலை சாமிமலை நகரிலிருந்து ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந்த பாதயாத்திரையானது மஸ்கெலியா, நோர்வூட், டிக்கோயா, ஹட்டன், கொட்டகலை, தலவாக்கலை, லிந்துலை, நானுஓயா, நுவரெலியா, பொரகஸ், ஹப்புத்தளை, பண்டாரவளை, வெள்ளவாய வழியாக கதிர்காமத்தை சென்றடைய உள்ளது.

தொடர்ந்து பத்து நாட்களுக்குள்ளான இந்த பாத யாத்திரையானது, ஆங்காங்கே அமைந்துள்ள ஆலயங்களில் தங்கிச் செல்ல ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.



இதன்போது இடைவழியே உள்ள பாதயாத்திரிகர்கள் இணைந்து கொள்ள முடியும் என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.



மனித உரிமைகள் பாதுகாப்பு மற்றும் நலன்புரி அங்கத்தவராக கம்பளை ஊடகவியலாளர் எஸ். லோகேஸ்வரன் நியமிக்கப்பட்டிருந்தார். அவருக்கு மனித உரிமை பாதுகாப்பு மற்றும் நலன்புரி நிலையத்தின் தலைவர் எம்.எஸ்.எம். நஸாரினால் நேற்றுமுன்தினம்(18) மனித உரிமைகள் பாதுகாப்பு அடையாள அட்டை கம்பளையில் வைத்து வழங்கப்பட்டது. (கம்பளை யோகா)

# இன்றைய ஜனாதிபதித் தெரிவில் தமிழ் மக்களின் அபிலாஷைகளை கருத்திலெடுத்து முடிவெடுங்கள்

## யாழ். பல்கலை கலைப்பீட மாணவர் ஒன்றியத் தலைவர் வேண்டுகோள்

(யாழ். நிருபர்)




ஜனாதிபதித் தெரிவின்போது பொருளாதாரத்தை உயர்த்துவதற்கும் தமிழ் மக்களின் அபிலாஷைகளை கருத்திற்கொண்டும் தமிழ்க் கட்சிகளும் நாடாளுமன்ற உறுப்பினர்களும் செயல்பட வேண்டும் – என யாழ். பல்கலைக்கழக கலைப்பீட மாணவர் ஒன்றியத் தலைவர் ஜெல்சின் தெரிவித்தார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நேற்று (19) இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கருத்து தெரிவிக்கும்போதே கலைப்பீட மாணவர் ஒன்றியத் தலைவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடக்கு, கிழக்கு தமிழ்த் தரப்புகளுக்கு இது ஒரு முக்கியமான தருணம். இன்றைய காலகட்டத்தில் பொருளாதாரத்தை உயர்த்துவதற்கும் தமிழ் மக்களின் அபிலாஷைகளை கருத்திற்கொண்டும் தமிழ்க் கட்சிகள் செயல்பட வேண்டும். நீங்கள் ஆதரிக்கும் வேட்பாளர் எமது தமிழ் மக்களின் கோரிக்கைகளையும் அபிலாஷைகளையும் ஏற்கும் தருணத்தில் நடுநிலையாக செயல்படாமல் அந்த வேட்பாளருக்கு முழு ஆதரவை நீங்கள் வழங்கவேண்டுமென மாணவர் சமூகமாக நாங்கள் கேட்டுக்கொள்கின்றோம்.

தமிழ் மக்களால் தெரிவுசெய்யப்பட்ட நீங்கள் தமிழ் மக்களின் உண்மையான தேவைகளை புரிந்திருப்பீர்கள் என நம்புகிறோம். காலங்காலமாக தமிழ் மக்கள் உங்களுடைய வாக்குறுதிகளை நம்பி ஏமாற்றமடைந்து இருக்கின்ற வேளையில், இந்த சந்தர்ப்பத்தை நீங்கள் சரியான முறையில் பயன்படுத்தி பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்கும் தமிழ் மக்களின் அபிலாஷைகளை நிறைவேற்றவும் செயலாற்றவேண்டும்.

தென்னிலங்கையில் மக்கள் அனைவரும் இக்கட்டான சூழலிற்கு தள்ளப்பட்ட வேளையில் அவர்களின் தலைவர்களுக்கு எதிராக மக்கள் போராடும் நிலைமைக்கு ஆளாக்கப்பட்டுள்ளார்கள். அதே நிலைமையை கருத்திற்கொண்டு உங்களுக்கு எதிராகவும் தமிழ் மக்கள் ஒரு காலகட்டத்தில் நம்பிக்கையை இழந்து செயல்படும் பட்சத்தில் மாணவர் சமூகமாக இருக்கின்ற நாங்கள் மக்களுடன் இணைந்து செயல்படுவோம் என இச்சந்தர்ப்பத்தில் கூறிக்கொள்ள விரும்புகிறோம் என்றார்.

தமிழ் அரசியல் கட்சிகள் இந்த விடயத்தில் கருத்து வேறுபாடுகளை விட்டு சிறந்த ஜனாதிபதியை தெரிவுசெய்ய வேண்டும் என யாழ். பல்கலைக்கழக கலைப்பீட மாணவர் ஒன்றிய செயலாளர் அபிராஜ் தெரிவித்தார்.

# யாழில் ஆவா குழுத் தலைவர்மீது தாக்குதல்; ஒருவர் படுகாயம்

யாழில் ஆவா குழுவின் தலைவர் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் படுகாயமடைந்த நபர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இச்சம்பவமானது தெல்லிப்பழை ஆதார மருத்துவமனைக்கு அருகில் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

தெல்லிப்பழை ஆதார மருத்துவமனைக்கு சென்றுவிட்டு திரும்பும்போது குறித்த நபர் மீது வாள்வெட்டுத் தாக்குதல் இடம்பெற்றுள்ளது.

இந்த தாக்குதலை நடத்திய 05பேர் கொண்ட குழுவினரை பொலிஸார் கைதுசெய்ததாகவும் வாள் ஒன்று மீட்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தத் தாக்குதலானது கனி குழுவிற்கும் ஆவா குழுவிற்கும் இடம்பெற்ற மோதலின் காரணமாக இடம்பெற்றுள்ளதாக தெரியவந்துள்ளது.

இத்தாக்குதலில் படுகாயமடைந்த நபர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

# பேரம் பேசாமல் நடுநிலை வகிக்கும் தீர்மானம் யாரையோ வெல்ல வைக்கும் நிகழ்ச்சி நிரலின் ஒரு பாகமாகும்

## யாழ். மாநகர முதல்வர் மணிவண்ணன் தெரிவிப்பு



பேரம் பேசாமல் நடுநிலை வகிக்கும் தீர்மானம் யாரையோ வெல்ல வைக்கும் நிகழ்ச்சி நிரலின் ஒரு பாகமாகும். அவ்வாறான நிலைப்பாட்டினை எடுக்கும் தமிழ்த் தரப்புகள் விடயத்தில் தமிழ் மக்கள் தெளிவாக இருக்கவேண்டும் – என யாழ்.மாநகர சபை முதல்வர் வி.மணிவண்ணன் தெரிவித்துள்ளார்.

சமகால நிலைமைகள் தொடர்பாக நேற்று முன்தினம் (18) ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

இதன்போது மேலும் அவர் கூறியிருப்பதாவது,

தமிழ் மக்களின் அபிலாஷைகளை வென்றெடுக்கக்கூடிய சந்தர்ப்பம் தற்போது ஏற்பட்டிருக்கின்றது. தென்னிலங்கையில் போராடுகின்ற சக்திகள் கூட தமிழ் மக்கள் தொடர்பான விடயங்கள் மீது மெல்ல மெல்ல அக்கறை செலுத்துவதை அவதானிக்கக்கூடியதாக இருக்கின்றது.

இலங்கையின் இனப்பிரச்சினைக்கு முற்றுமுழுதாக ஒரு தீர்வைக் காண்பதே தற்போதைய பொருளாதாரப் பிரச்சினைக்குத் தீர்வாக இருக்கும். தற்போது உருவாகியுள்ள சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்க் கட்சிகள் முடிவெடுக்கவேண்டும்.

தமிழ்க் கட்சிகள் குறுகிய நோக்கங்களை கைவிட்டு தமிழ் மக்களுக்காக சிந்திக்க வேண்டும். தமிழ்த் தேசியம் என்று சொல்கின்ற நபர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், கட்சிகள் ஒன்றிணைந்து தமிழ் மக்களின் நன்மைக்காக ஒரு முடிவை எடுத்து ஓரணியாக செயலாற்றுவது கட்டாயம்.

இந்த ஜனாதிபதித் தேர்தலில் என்ன நிலைப்பாட்டை தமிழ் மக்கள் சார்பாக எடுக்கவேண்டும் என்பதை நாடாளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகள் பொது அமைப்புகளுடன் இணைந்து ஆலோசனை செய்யவேண்டியது கட்டாயமாகும்.

தமிழ் சிவில் சமூகத்தில் அரசியல் சார்ந்து சிந்திக்கக்கூடிய கல்வியலாளர்களுடன் ஆலோசனைகளை மேற்கொண்டு கட்டாயம் இதனை செய்யவேண்டும். அவ்வாறு ஆலோசனையை செய்யமாட்டோம் என சொன்னால் தனிப்பட்ட நிகழ்ச்சிநிரலே அவர்களுக்கு இருக்கக்கூடும்.

தமிழர்களின் தலைவிதியை தீர்மானிக்கும் விடயத்துக்காக ஒற்றுமைப்பட மாட்டோம், ஒன்றாக முடிவெடுக்க மாட்டோம் என்று யாராவது சொன்னால் கூட அவர்கள் மீது சந்தேகப்படவேண்டிய நிலையே காணப் படுகின்றது. பேரம் பேசுவதற்கான வாய்ப்புகள் அதிகரித்திருக்கின்றன.

ஜனாதிபதியாக வரக்கூடியவர்களிடமிருந்து தமிழ் மக்களுக்கான குறுகியகால பிரச்சினைகள் மற்றும் நீண்டகால பிரச்சினைகள் என்ற அடிப்படையில் வாக்குறுதிகளை பெற்றுக் கொள்ளவேண்டியது கட்டாயம். ஆகக் குறைந்தது அரசியல் கைதிகளின் விடுதலை, ஆக்கிரமிக்கப்பட்டிருக்கின்ற காணிகளை விடுவித்தல், காணாமலாக்கப்பட்டோர் பிரச்சினைக்கான தீர்வை வழங்குவதற்கான உத்தரவாதம் போன்றவற்றுக்கு வாக்குறுதியை பெற வேண்டும்.

பாதிக்கப்பட்ட வடக்கு, கிழக்கை அபிவிருத்தி செய்வதற்காக வடக்கு, கிழக்கை மையப்படுத்திய பொருளாதார அதிகார சபையை நிறுவுவதற்கு வரப்போகும் ஆட்சியாளர்களுடன் சம்மதித்து அதை நிறுவ வலியுறுத்த வேண்டும். அரசியல் தீர்வு தொடர்பாக காத்திரமானதோர் உத்தரவாதத்தை வழங்க வேண்டும் என வலியுறுத்த வேண்டும்.

இதை எங்கள் கட்சிகள் செய்யத் தவறி வார்த்தைஜாலங்களை அள்ளி வீசினால் அந்த அரசியல் கட்சிகளுக்கு தென்னிலங்கையில் ஏற்பட்டது போன்ற சூறாவளியை வடக்கு, கிழக்கில் தமிழ் மக்கள் ஏற்படுத்துவார்கள் என்பதை நாம் கூறிக்கொள்ள விரும்புகிறோம்.

எதிர்வரும் காலங்களில் தென்னிலங்கை அரசியல் பரப்பில் மாத்திரமல்ல, தமிழ் அரசியல் தலைவர்களுக்கும் மறக்க முடியாத அனுபவங்களை கொடுக்கக்கூடிய காலமாக மாறிவிடும்.

இந்த சந்தர்ப்பத்தை வெறுமென கைவிடுவார்களாக இருந்தால் தமிழ் மக்கள் தகுந்த பாடத்தைக் கொடுப்பார்கள். யாரிடமும் பேரம் பேசாமல் நடுநிலை வகிப்பதென்பது யாரையோ வெல்ல வைப்பதற்கான நிகழ்ச்சி நிரலாகும்.

அவ்வாறு செயற்படும் தமிழ்த் தரப்புகளை இனங்கண்டு தமிழ் அரசியல் தரப்பிலிருந்து அகற்ற வேண்டியது காலத்தின் கட்டாயம் என்றார்.

# மன்னாரிலிருந்து வெளிநாடு செல்பவர்களுக்கு விசேட அதிசொகுசு பஸ் சேவை ஏற்பாடு



(மன்னார் நகர் நிருபர்)

மன்னார் மாவட்டத்திலிருந்து வெளிநாடுகளுக்கு செல்பவர்களுக்கும், வெளிநாடுகளிலிருந்து கொழும்பு ஊடாக மன்னாருக்கு வருகின்றவர்களுக்குமான விசேட போக்குவரத்து சேவையை மன்னார் அரசாங்க அதிபர் திருமதி ஏ.ஸ்ரான்லி டிமெல் ஏற்பாடு செய்துள்ளார்.

மன்னார் மாவட்டத்தில் தற்போது எரிபொருள் தட்டுப்பாடு நிலவுகின்ற நிலையில் வெளிநாடுகளிலிருந்து அதிகமானோர் மன்னார் மாவட்டத்திற்கு வருகை தருகின்றனர்.

இவ்வாறு கொழும்பிலிருந்து மன்னார் மாவட்டத்திற்கு வருவதற்கு அல்லது மன்னார் மாவட்டத்திலிருந்து கொழும்பிற்கு செல்வதற்கு சராசரியாக 70 லீற்றர் எரிபொருள் தேவைப்படுகிறது.

இதுவரையில் வெளிநாடு செல்பவர்களுக்கு உதவிகள் செய்யப்பட்டிருந்தன. ஆனால், இனிவரும் காலங்களில் அவ்வளவு தொகை ஒரு தனிநபருக்கு செலவிட முடியாத சூழ்நிலை ஏற்பட்டிருப்பதால் அரசாங்க அதிபர் திருமதி ஸ்டான்லி டிமெல், சொகுசு பஸ் முகாமையாளரிடம் தொடர்புகொண்டு இவ்வாறு வெளிநாடு செல்பவர்களுக்கு அல்லது வெளிநாடுகளிலிருந்து வந்தவர்கள் கொழும்பிலிருந்து மன்னாருக்கு வருவதற்கு அதிசொகுசு பஸ் சேவையொன்றை ஏற்பாடு செய்துள்ளார்.

அந்த வகையில் திங்கள், புதன், வெள்ளி ஆகிய தினங்களில் கொழும்பிலிருந்து மன்னார் மாவட்டத்திற்கும், ஞாயிறு, செவ்வாய், வியாழன் ஆகிய தினங்களில் மன்னாரிலிருந்து கொழும்புக்கு செல்வதற்காக ஆயத்தம் செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறு செல்பவர்கள் 0774902440 என்ற தொலைபேசியின் ஊடாக தொடர்புகொண்டு ஆசனங்களை பதிவுசெய்துகொள்ள முடியும்.

அண்மைக்காலமாக மன்னாரிலிருந்து கொழும்புக்கு ஒரு இலட்சம் ரூபாவும், பேசாலையிலிருந்து கொழும்புக்கு ஒரு இலட்சத்து 20ஆயிரம் ரூபாவும் கூலியாக அறவிடப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# இடைக்கால ஜனாதிபதி தெரிவு - இன்று நாடாளுமன்றத்தில் நடைபெறப்போவது என்ன?



இந்நாட்டின் நாடாளுமன்றத்தினூடாக ஜனாதிபதியை தெரிவுசெய்வது தொடர்பில் இதற்கு முன்னர் ஒருமுறை அனுபவம் இருக்கின்றபோதும் இம்முறை இது விசேடமாகக் காணப்படுகிறது. இதற்கு முன்னர் 1993ஆம் ஆண்டு முன்னாள் ஜனாதிபதி ஆர்.பிரேமதாச மறைந்ததைத் தொடர்ந்து அப்போதைய பதில் ஜனாதிபதி டி.பி.விஜேதுங்க, பிரேமதாசவின் எஞ்சிய காலத்துக்காக வாக்கெடுப்பின்றி ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்டார். ஆனால், இம்முறை வேட்பாளர்கள் சிலர் போட்டியிட இருப்பதாக ஏற்கனவே கூறப்பட்டிருப்பதால் வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டியிருக்கும். அப்படியாயின், அது எமது நாட்டின் வரலாற்றில் புதிய அனுபவமாக இருக்கும்.

பதவிக்காலம் முடிவடைவதற்கு முன்னர் ஜனாதிபதி பதவி வெற்றிடமாயின் நாடாளுமன்றத்தின் மூலம் புதிய ஜனாதிபதியைத் தெரிவுசெய்யும் நடைமுறை அரசியலமைப்பு மற்றும் 1981ஆம் ஆண்டு 02ஆம் இலக்க ஜனாதிபதித் தேர்தல்கள் (சிறப்பு ஏற்பாடுகள்) சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன. இதற்கமைய இங்கு குறிப்பிடப்பட்டுள்ள சகல விடயங்களும் குறித்த சட்டத்தில் படிப்படியாக வழங்கப்பட்டுள்ளன.

அதற்கமைய, நேற்று (19) 10.00 மணிக்கு நாடாளுமன்றம் கூடி வேட்புமனுக்களை சமர்ப்பித்திருந்தனர். இந்த அறிவிப்புக்கமைய வெற்றிடமாகியுள்ள ஜனாதிபதி பதவிக்காக வேட்புமனுக்களைப் பெற்றுக்கொள்வது மாத்திரமே 19ஆம் திகதி இடம்பெறும்.

**இன்று (20ஆம் திகதி) நடைபெறுவது என்ன?**

ஒன்றுக்கு மேற்பட்ட உறுப்பினர்களின் பெயர்கள் முன்மொழியப்பட்டு வழிமொழியப்பட்டால், வேட்புமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்ட நேரத்திலிருந்து இரண்டு நாட்கள் பிந்தாத ஒரு தினத்தில் வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும். அதற்கமைய, 19ஆம் திகதி இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட பெயர்கள் முன்மொழியப்பட்டிருந்ததால், இன்று ஜனாதிபதிக்கான வாக்கெடுப்புக்காக ஒதுக்கப்படும். இதன்போது நாடாளுமன்ற செயலாளர் நாயகம் தெரிவத்தாட்சி அலுவலராக செயற்படுவார்.

**வாக்கெடுப்பு எவ்வாறு நடக்கும்?**

வாக்களிப்பு ஆரம்பமாவதற்கு முன்னர் தெரிவத்தாட்சி அலுவலர் வெற்று வாக்குச்சீட்டுப் பெட்டியை அல்லது வெற்று வாக்குச்சீட்டுப் பெட்டிகளை உறுப்பினர்களுக்குக் காண்பித்து பின்னர் அதனை முத்திரையிடுவார். இந்த வாக்களிப்பில் சபாநாயகருக்கு வாக்களிக்கும் உரிமை காணப்படுவது விசேட அம்சமாகும்.

அதற்கமைய, வாக்களிப்புத் தொடங்கும்போது தெரிவத்தாட்சி அலுவலராக செயற்படும் நாடாளுமன்ற செயலாளர் நாயகம் வாக்குச்சீட்டைப் பெறுவதற்காக சபாநாயகர் உட்பட ஒவ்வொரு உறுப்பினரினதும் பெயரை அழைப்பார். பெயர் அழைக்கப்படும்போது உரிய உறுப்பினர் தெரிவத்தாட்சி அலுவலரின் மேசைக்கு அருகில் சென்று வாக்குச்சீட்டை பெற்றுக்கொள்ள வேண்டும். அதன்போது தெரிவத்தாட்சி அலுவலர் உறுப்பினர் முன்னிலையில் வாக்குச்சீட்டின் பின்புறத்தில் தனது முதல் எழுத்துகளைக் கொண்ட கையொப்பத்தை இடுவார்.

அதனையடுத்து, வாக்குச் சீட்டைப் பெற்றுக்கொண்ட உறுப்பினர் ஏற்பாடு செய்யப்பட்ட கூண்டிற்குச்சென்று வாக்கைப் பதிவு செய்து தெரிவத்தாட்சி அலுவலரின் கையொப்பம் தெரியும் வகையில் மடித்து தெரிவத்தாட்சி அலுவலரின் மேசையின் மீதுள்ள பெட்டியில் இட வேண்டும்.

**எவ்வாறு வாக்குச்சீட்டை பதிவு செய்வது?**

ஒரு உறுப்பினருக்கு ஒரு வாக்கு வீதம் கிடைக்கப்பெறுவதுடன், வேட்பாளரின் பெயருக்கு எதிரேயுள்ள கட்டத்தில் '1' எனும் இலக்கத்தை இடுவதன் மூலம் வாக்கைப் பதிவுசெய்ய வேண்டும். பல வேட்பாளர்கள் காணப்படும்போது விருப்பு வாக்குகளை வழங்குவதற்கு சந்தர்ப்பம் உள்ளது. அதன்படி, வேட்பாளர்களின் எண்ணிக்கைக்கு அமைய, ஏனைய வேட்பாளர்களின் பெயர்களுக்கு எதிரேயுள்ள கட்டங்களில் 2, 3 எனும் வகையில் விருப்பு வாக்குகளை பதிவுசெய்ய முடியும்.

வாக்கைக் குறிப்பிடும்போது உறுப்பினர் ஒருவரினால் வாக்குச் சீட்டில் தவறு ஏற்பட்டிருந்தால் (வாக்குச்சீட்டு பழுதாக்கப்பட்டால் என சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள) இதனை தெரிவத்தாட்சி அலுவலரிடம் மீண்டும் கையளிக்க முடியும் என்பதுடன், இது தொடர்பில் தெரிவத்தாட்சி அலுவலர் திருப்தியடையும் பட்சத்தில் வேறு வாக்குச்சீட்டை வழங்க முடியும். அத்துடன், பழுதடைந்த வாக்குச்சீட்டு தெரிவத்தாட்சி அதிகாரியினால் செல்லுபடியற்றதாக்கப்பட வேண்டும்.

பெயர் அழைக்கப்படும்போது வாக்களிக்காத உறுப்பினர்களின் பெயர்கள் வாக்கெடுப்பு முடிவடைய முன்னர் இரண்டாவது தடவையாகவும் அழைக்கப்பட வேண்டும். அவ்வாறு அழைக்கப்படும்போதும் குறித்த உறுப்பினர்கள் வாக்களிக்காதிருந்தால், அவர்கள் வாக்கெடுப்பிலிருந்து விலகிக் கொண்டார்கள் எனக் கருதப்படுவர்.

**வாக்குகள் எண்ணப்பட்டு வெற்றிபெற்றவர் அறிவிக்கப்படுவது எவ்வாறு?**

வாக்களிப்பு நிறைவடைந்ததும் ஒவ்வொரு வேட்பாளர்களுக்கும் அளிக்கப்பட்ட விருப்பு வாக்குகள் எண்ணப்படும். வாக்கு எண்ணப்படும் இடத்துக்கு யாராவது வேட்பாளர் செல்வதற்கு விரும்பினால் இதற்கு சந்தர்ப்பம் வழங்கப்படும். இல்லாவிட்டால் அவருடைய பிரதிநிதியாக பிறிதொரு உறுப்பினரை இதற்காக நியமிப்பதற்கான சந்தர்ப்பமும் வேட்பாளருக்கு உள்ளது.

அளிக்கப்பட்ட வாக்குகளில் செல்லுபடியான வாக்குகளின் எண்ணிக்கையில் அரைவாசிக்கு மேலான வாக்குகள் யாராவது ஒரு வேட்பாளருக்குக் கிடைக்குமாயின் குறித்த வேட்பாளர் ஜனாதிபதி பதவிக்கு தெரிவுசெய்யப்பட்டுள்ளார் என்பதை தெரிவத்தாட்சி அலுவலர் அதாவது நாடாளுமன்ற செயலாளர் நாயகம் உடனடியாக அறிவிப்பார்.

அளிக்கப்பட்ட செல்லுபடியான வாக்குகளில் அரைவாசிக்கு மேலான வாக்குகள் எந்தவொரு வேட்பாளருக்கும் வழங்கப்படாத சந்தர்ப்பத்தில் இந்த நடைமுறை சற்று நீளமானதாக இருக்கும். அதன்போது குறைவான வாக்குகளைப் பெற்ற வேட்பாளர் போட்டியிலிருந்து நீக்கப்படுவார். அவ்வாறு நீக்கப்படும் உறுப்பினருக்கு முதலாவது விருப்பைத் தெரிவித்த உறுப்பினர்களின் இரண்டாவது விருப்பத் தெரிவு உரிய வேட்பாளர்களின் வாக்குகளுடன் இணைக்கப்படும்.

அவ்வாறு செய்தும் எந்தவொரு வேட்பாளருக்கும் செல்லுபடியான வாக்குகளில் அரைவாசிக்கும் அதிகமான வாக்குகள் கிடைக்கவில்லையாயின், ஒவ்வொரு கணக்கெடுப்பின்போதும் குறைந்த விருப்பு வாக்குகளைப் பெற்ற உறுப்பினர்கள் போட்டியிலிருந்து நீக்கப்பட்டு அவர்களுக்கு வழங்கப்பட்ட விருப்பு வாக்குகள் இரண்டாவது, மூன்றாவது விருப்பு வாக்குகளைப் பெற்ற வேட்பாளர்களுடன் சேர்க்கப்படும்.

இவ்வாறு செய்தும் எந்தவொரு வேட்பாளரும் அளிக்கப்பட்ட செல்லுபடியான வாக்குகளில் அரைவாசிக்கும் அதிகமான எண்ணிக்கையான வாக்குகளைப் பெற்றுக்கொள்ளவில்லையாயின், மேலே குறிப்பிடப்பட்டது போன்று வாக்கு எண்ணும்போது அதிக வாக்குகளைப் பெற்ற வேட்பாளர் ஜனாதிபதி பதவிக்குத் தெரிவுசெய்யப்பட்டார் என்பது தெரிவத்தாட்சி அலுவலரினால் சபைக்கு அறிவிக்கப்படும்.

மேலும், இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட வேட்பாளர்களுக்கு இடையே வாக்குகள் சமமாக இருந்தால், தெரிவத்தாட்சி அலுவலரின் தற்றுணிபின் பேரில் திருவுளச்சீட்டு போடப்படும். அத்துடன், ஜனாதிபதி தெரிவுசெய்யப்பட்ட நாளிலிருந்து மூன்று நாட்களுக்குள் வேட்பாளரின் பெயரை செயலாளர் நாயகம் வர்த்தமானி அறிவித்தலில் வெளியிட வேண்டும்.

# எரிபொருள் நிரப்பு நிலையத்தில் மோதல்; காயமடைந்த நபர் வைத்தியசாலையில்

## மாதம்பையில் சம்பவம்

(ஜூட் சமந்த)

மாதம்பை எரிபொருள் நிரப்பு நிலையத்தில் இரு தரப்பினருக்கிடையில் ஏற்பட்ட மோதலில் கடும் காயங்களுக்குள்ளான நபர் ஒருவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு 08 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

மாதம்பை, பழைய நகரத்தில் வசிக்கும் மொஹமட் நுஸ்ரி என்ற 26 வயதுடைய நபர் ஒருவரே காயமுற்ற நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

எரிபொருள் பெற்றுக்கொள்வதற்காக வரிசையில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த வாகனங்களுக்கிடையில் மேலும் ஒரு வாகனத்தை நிறுத்த முற்பட்டபோது இரு தரப்பினருக்கிடையில் முறுகல் ஏற்பட்டுள்ளது. இதனால் இரு தரப்பினரும் தாக்குதலில் ஈடுபட்டுள்ளனர். இச்சம்பவத்தில் காயமடைந்த நபர் மீது தாக்குதல் நடத்தியோரை தேடி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

# துளிச் செய்திகள்

கொழும்பு கோட்டை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ரெலிகொம் நிறுவனத்துக்கு அருகில் வைத்து கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு நேற்றுமுன்தினம் இரவு ஒருவர் கொலைசெய்யப்பட்டுள்ளார். இருவருக்கிடையில் ஏற்பட்ட வாய்த்தர்க்கமே இந்தக் கொலைக்குக் காரணம் என ஆரம்பகட்ட விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

நீர்கொழும்பு தெல்வத்த பகுதியைச் சேர்ந்த 37 வயதான நபர் ஒருவரே கொலைசெய்யப்பட்டுள்ளார். இந்தக் கொலையுடன் தொடர்புடைய சந்தேக நபர் தப்பிச்சென்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

★★★★★

அயகம பிரதேச சபைக்குச் சொந்தமான வாகனம் ஒன்றை வழிமறித்து ஊழியர்கள் மீது தாக்குதல் நடத்திய குற்றச்சாட்டில் மூவர் நேற்றுமுன்தினம் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர். எரிபொருள் ஏற்றிச்செல்வதாகக் கூறியே இந்த நபர்கள் தாக்குதல் மேற்கொண்டுள்ளதாக பொலிஸ் முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

★★★★★

இரத்தினபுரி நகரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தின்போது பஸ் ஒன்றை வீதிக்குக் குறுக்காக நிறுத்தி போக்குவரத்துக்கு இடையூறு செய்த குற்றத்திற்காக இருவர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

★★★★★

கொழும்பு - கண்டி பிரதான வீதியில் பயணித்த இலங்கை போக்குவரத்து சபைக்குச் சொந்தமான பஸ்ஸிலிருந்து தவறி விழுந்த நபர் ஒருவர் நேற்றுமுன்தினம் உயிரிழந்துள்ளார். நிட்டம்புவ பகுதியில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் கடவத்தையைச் சேர்ந்த 36 வயதுடைய நபர் ஒருவரே உயிரிழந்துள்ளார்.

★★★★★

கல்கிஸை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இரத்மலானையில் 15 கிராம் 100 மில்லிகிராம் ஹெரோயின் வைத்திருந்த 64 வயதுடைய நபர் ஒருவரை பொலிஸார் நேற்றுமுன்தினம் கைதுசெய்துள்ளனர்.

★★★★★

கல்கிஸை ஜனதா மாவத்தையில் 10 கிராம் 400 மில்லிகிராம் ஹெரோயின் வைத்திருந்த 20 வயதான அத்திடிய பகுதியைச் சேர்ந்த இளைஞர் ஒருவரை பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

★★★★★

தலங்கமவில் 05 கிராம் 400 மில்லிகிராம் ஹெரோயின் வைத்திருந்த 35 வயதுடைய நபர் ஒருவரை நேற்றுமுன்தினம் கைதுசெய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

★★★★★

வேயங்கொடை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தடகமுவ பகுதியில் 05 கிராம் 300 மில்லி கிராம் ஹெரோயினுடன் 30 வயதான இளைஞர் ஒருவர் நேற்றுமுன்தினம் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

★★★★★

தம்புளையில் மோட்டார் சைக்கிள் ஒன்றை திருடிய குற்றத்துக்காக மூவர் நேற்றுமுன்தினம் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இவர்கள் 22, 36 வயதுடையவர்கள் என பொலிஸார் தெரிவித்தனர்.

# மறைந்தும் மக்கள் மனதில் வாழும் தலைவர் மர்ஹூம் மஹரூப்



**முன்னாள் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், துறைமுகங்கள் கப்பல்துறை இராஜாங்க அமைச்சருமான எம்.இ.எச். மஹரூப் மறைந்து இன்றுடன் (20) 25 வருடங்கள் பூர்த்தியை முன்னிட்டு இந்த ஞாபகார்த்த கட்டுரை பிரசுரிக்கப்படுகின்றது.**



(எஸ். சினீஸ்கான்)

கிண்ணியாவிலிருந்து முதலாவது மாவட்ட அமைச்சர் நியமனம் பெற்றவர் மர்ஹூம் எம்.ஈ.எச்.மஹரூப்.

இவர் 1939.01.05ஆம் திகதி மர்ஹூம்களான எகுத்தார் ஹாஜியார் - ஜொஹறா உம்மா தம்பதிகளின் மூன்றாவது புதல்வராக பெரிய கிண்ணியாவில் பிறந்தார்.

தனது ஆரம்பக் கல்வியை பெரிய கிண்ணியா ஆண்கள் வித்தியாலயத்தில் கற்றார். இடைநிலை கல்வியை மாத்தளை சாஹிராக் கல்லூரியிலும் உயர்கல்வியை கண்டி சென். அந்தனீஸ் கல்லூரியிலும் கற்றார்.

தனது 25ஆவது வயதில் அரசியலுக்குள் நுழைந்த இவர் 1964ஆம் ஆண்டு ஐக்கிய தேசியக் கட்சி சார்பாக கிண்ணியா பட்டின சபைத் தேர்தலில் போட்டியிட்டு அதன் தவிசாளராகத் தெரிவானார். 1977ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் மூதூர் தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்றார்.

1980ஆம் ஆண்டு மன்னார் மாவட்ட அமைச்சராக நியமனம் பெற்றார். அந்த வகையில், கிண்ணியாவிலிருந்து ஒரு மாவட்ட அமைச்சராக நியமனம் பெற்ற முதலாமவர் என்ற பெருமையை இவர் பெறுகிறார்.

1989ஆம் ஆண்டு துறைமுகங்கள், கப்பல்துறை இராஜாங்க அமைச்சராக நியமனம் பெற்றார். இதன் மூலம் கிண்ணியாவில் கட்டங்கட்டமாக அரசியலில் உயர்வு பெற்ற முதலாமவர் என்ற பெருமையும் இவருக்கு உண்டு.

இவரது காலத்தில் எல்லாத் துறைகளிலும் பல்வேறு அபிவிருத்திப் பணிகள் இவரால் முன்னெடுக்கப்பட்டுள்ளன. எனினும், இவரது ஆரவாரமற்ற அமைதியான போக்கு காரணமாக அவை பெரிதாக ஜனரஞ்சகப்படுத்தப்படவில்லை.

கல்வித்துறையைப் பொருத்தவரை, மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் 22 புதிய பாடசாலைகள் இவரால் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இவற்றுள் 03 பாடசாலைகள் பெண்கள் பாடசாலைகளாகும். 03 பாடசாலைகள் இவர்களது சொந்தக் காணியில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

14 பாடசாலைகள் இவரால் தரமுயர்த்தப்பட்டுள்ளன. 32க்கும் மேற்பட்ட பாடசாலைகளுக்கு கட்டட வசதிகள் வழங்கப்பட்டுள்ளன.

இதனைத் தவிர, பல பாடசாலைக்கு ஏனைய கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன. அப்போது எம்.பிமார் பட்டியலில் நியமனங்கள் வழங்கப்பட்டதால் பலருக்கு இவரால் ஆசிரியர் நியமனம் உட்பட பல்வேறு நியமனங்கள் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளன.

ஒன்றுகூடல் மண்டபம், மாணவர் விடுதிகள், நிர்வாகக் கட்டடம், விஞ்ஞான ஆய்வு கூடம். பெவிலியன் போன்ற வசதிகளும் பாடசாலைகளுக்கு இவரால் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளன.

சகல அதிகாரிகளும் கொண்ட கிண்ணியாக் கோட்டக் கல்வி அலுவலகம் 1991ஆம் ஆண்டு இவரால் ஆரம்பிக்கப்பட்டது. 1988ஆம் ஆண்டு திருகோணமலை மாவட்டத்தில் நியமனம் பெற்ற சுமார் 400 ஆசிரியர்களுக்கு அப்போதைய சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு கிண்ணியாவிலும், திருகோணமலையிலும் சேவை முன்பயிற்சிகள் நடத்த இவர் ஏற்பாடு செய்தார்.

கிண்ணியாவில் இலங்கை மின்சார சபை உப அலுவலகத்தை ஸ்தாபித்தமை, உப பஸ் டிப்போவை ஸ்தாபித்தமை, குறிஞ்சாக்கேணி மற்றும் மகருகிராமம் உப தபால் அலுவலகங்களை ஸ்தாபித்தமை, கிண்ணியாவுக்கு குழாய் நீர் வசதியை ஏற்படுத்தியமை, பல கிராமங்களில் மின்சார விஸ்தரிப்புச் செய்தமை போன்ற பல சேவைகள் இவரால் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

கிண்ணியா பாலத்திற்கான செலவு மதிப்பீடு தயாரிப்பதற்காக கடலுக்கடியில் தூண்கள் வரவேண்டிய இடங்கள் தொடர்பான மண் பரிசோதனை இவரது முயற்சியினாலேயே 1993- 1994 காலப்பகுதியில் முன்னெடுக்கப்பட்டது.

1977ஆம் ஆண்டு முதல் 1997இல் கொல்லப்படும் வரை தொடர்ந்து 20வருடங்கள் இவர் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்துள்ளார். அந்த வகையில் கிண்ணியாவில் கூடுதல் காலம் எம். பியாக இருந்தவர், மரணிக்கும் வரை எம்.பியாக இருந்தவர் என்ற வகைக்குள்ளும் இவர் வருகிறார்.

மிகவும் அமைதியான போக்கு, பொறுமை, நிதானம் போன்றன இவரிடமிருந்த மிகப் பெரிய மூலதனங்களாகும். தனது வேலைகளுக்காக அடுத்தவர்களை நம்பியிருக்காது தானே செய்து கொள்ளும் வழக்கமும் இவரிடம் இருந்தது. சில அவசரக் கடிதங்களை இவரே தட்டச்சு செய்து கொள்வார்.

ஆங்கிலத்தில் புலமை பெற்றிருந்த இவர் அலுவலகக் கடிதங்களை தயாரிப்பதில் கண்ணுங்கருத்துமாக இருப்பார்.

எழுத்துப் பிழைகளை அவதானித்தபின் அதில் கையொப்பமிடும் வழக்கம் இவரிடம் இருந்தது. ஆவணப்படுத்தும் ஆர்வமும் இவரிடம் அதிகமாகக் காணப்பட்டது. இதனால் பல விடயங்களை இவர் சேகரித்து வைத்திருப்பார்.

யாருடனும் முரண்பட்டுக் கொள்ளும் பண்பு இவரிடம் இருக்காததால் எல்லா அரசியல்வாதிகளும் இவர் மீது அபிமானங் கொண்டிருந்தனர்.

இலங்கை அரசியல் வரலாற்றில் "கனவான் அரசியல்வாதி" (Gentleman Politician) என மக்களாலும் ஏனைய அரசியல் தலைவர்களாலும் போற்றப்படுபவர்.

சஹாப்தீன் கதிஜம்புவை இவர் வாழ்க்கைத் துணைவியாகக் கொண்டிருந்தார். ஹலினா, ரோஹினா, இம்ரான் மஹ்ரூப் (MP) ஆகியோர் இவரது பிள்ளைகளாவர்.


திகதி 18.07.2022 திங்கட்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk NLB

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம்: 4820
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 6,697,880.00
ஆங்கில எழுத்து B வெற்றி இலக்கங்கள் 9 7 1 9 7 2
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 20,679,356.80

கொவிசெத Govisetha
சீட்டிழுப்பு இலக்கம் 3062
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 3,473,520.00
ஆங்கில எழுத்து K வெற்றி இலக்கங்கள் 10 35 61 65
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 64,495,433.20

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு இலக்கம்: 1298
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 1,442,860.00
வெற்றி இலக்கினம் தனுசு வெற்றி இலக்கங்கள் 9 0 8 7 8 2
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 10,334,207.20

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம்: 850
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 1,774,680.00
வெற்றி இலக்கினம் T வெற்றி இலக்கங்கள் 01 19 22 35
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 118,359,962.00

ராசி சுப பலன் Handahana
சீட்டிழுப்பு இலக்கம்: 129
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 4,043,520.00
இலக்கினம் மேஷம் வெற்றி இலக்கங்கள் 11 12 16 46
விசேட இலக்கினம் மேஷம்
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 3,207,363.20

கோடி 26+ Mega POWER மெகா பவர்
சீட்டிழுப்பு இலக்கம் 1168
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,293,000.00
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 261,330,002.00
X 07 17 36 52 70
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

தேசிய லொத்தர் சபை National Lotteries Board
தொலைபேசி: 011-4607000, 011 - 4607001 - 2 Email : info@nlb.lk
பெக்ஸ்: 011-4669475 Web : www.nlb.lk

# சம்மாந்துறை ஆதார வைத்தியசாலை ஊழியர்கள் எரிபொருள் வேண்டி வீதியை மறித்துப் போராட்டம்





(சம்மாந்துறை நிருபர்)

சம்மாந்துறை ஆதார வைத்தியசாலையின் ஊழியர்கள் நேற்றுக் காலை சம்மாந்துறையில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையம் ஒன்றுக்கு தாங்கள் பெற்றோல் பெற்றுக்கொள்வதற்கு சென்றபோது, தங்களுக்கு எரிபொருள் வழங்கப்படவில்லை என்றும் நேற்று முன்தினம் (18) அத்தியாவசிய சேவைக்கு என்று அறிவிக்கப்பட்டதால் அதனைப் பெற்றுக்கொள்வதற்கு சென்றபோதே தங்களுக்கு மறுக்கப்பட்டது என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

இதனைத் தொடர்ந்து சம்மாந்துறை ஆதார வைத்தியசாலையின் ஊழியர்கள் எரிபொருள் வேண்டி நேற்று (19) சாலைமறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனால் சுமார் 05 மணித்தியாலங்கள் வைத்தியசாலையில் எந்தவொரு சிகிச்சையும் நடைபெறவில்லை. இதனால் வைத்தியசேவைக்கு வந்த பொதுமக்கள் அசௌகரியங்களை எதிர்கொண்டனர்.

எரிபொருளை பெற்றுக்கொள்வதற்கு மூன்று டோக்கன் வழங்கப்பட்டுள்ளது. ஆயினும் இதுவரை அந்த டோக்கன்களுக்கு எரிபொருள் வழங்கப்படவில்லை என்று வைத்தியசாலையின் ஊழியர்கள் தெரிவிக்கின்றனர்.

ஆதலால் தங்களுக்கு எரிபொருள் வழங்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தி சம்மாந்துறை ஆதார வைத்தியசாலையின் ஊழியர்கள் பிரதான வீதியை மறித்து ஆதார வைத்தியசாலைக்கு முன்பாக வீதி மறியல் போராட்டத்தில் நேற்று (19) ஈடுபட்டுள்ளனர்.

நேற்றுக் காலை 8 மணிமுதல் இந்தப் போராட்டம் நடைபெற்றது. தங்களுக்கு எரிபொருள் வழங்குவதற்கான உத்தரவாதம் வழங்கப்பட்டால் மட்டுமே போராட்டத்தினை கைவிடுவோம் என்று வைத்தியசாலையின் ஊழியர்கள் தெரிவித்தனர்.

ஆயினும் இவர்களின் கோரிக்கை தொடர்பில் பேசுவதற்கு எந்தவொரு அதிகாரியும் வராத நிலையில் நேற்று பிற்பகல் ஒரு மணிக்கு போராட்டத்தை கைவிட்டனர். பொதுமக்களுக்காக தமது போராட்டத்தை கைவிட்டுள்ளதாகவும் தமது கோரிக்கை நிறைவேறும்வரை உயிர் காக்கும் அத்தியாவசிய வைத்திய சேவையில் மாத்திரம் ஈடுபடுவதற்கு தீர்மானித்துள்ளதாகவும் தெரிவிக்கின்றனர். இந்த சாலைமறியல் போராட்டத்தில் வைத்தியர்களும் பங்குகொண்டனர்.

மேலும் பிற்பகல் ஒரு மணிக்குப் பின்னர் அதாவது சாலைமறியல் போராட்டம் கைவிடப்பட்டதன் பின்னர் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர், சம்மாந்துறை ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர், சம்மாந்துறை பிரதேச செயலாளர், சம்மாந்துறை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி உள்ளிட்டவர்கள் வைத்தியசாலையின் ஊழியர்களுடன் மூடிய அறைக்குள் பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டனர். இதற்கு ஊடகவியலாளர்களை அனுமதிக்கவில்லை.

இந்த உயர் அதிகாரிகள் சாலைமறியல் போராட்டம் நடைபெற்றவுடன் வருகை தந்திருந்தால் வைத்திய சேவைக்கு வந்த பொதுமக்களுக்கு வைத்திய சேவை வழங்கியிருக்க முடியும். இவர்களின் வருகையில் ஏற்பட்ட காலதாமதம் சுமார் ஐந்து மணித்தியாலங்கள் வைத்திய சேவை தடைப்பட்டமை விசனத்துக்குரியது என்று பொதுமக்கள் பலரும் தெரிவித்தார்கள்.

பொதுமக்களின் நலன்களில் அதிகாரிகள் அக்கறை கொள்ளும்போது மாத்திரமே நாடு முன்னேறும். வெறுமனே அரசியல்வாதிகளை மாத்திரம் குறை கூறிக்கொண்டிருக்கும் மனநிலையும் மாற வேண்டும். அதிகாரிகள் தமது கடமையை சரியாக செய்யும்போது அரசியல்வாதிகளும் மாறவேண்டிய நிலை ஏற்படும்.

# பாலமுனையில் எரிவாயு விநியோகம்

(பாலமுனை நிருபர்)

நீண்டகால இடைவெளிக்குப் பின்னர் பாலமுனை பிரதேசத்துக்கான எரிவாயு விநியோகம் நேற்று முன்தினம் (18) பாலமுனை பொது விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது.

இந்த எரிவாயு விநியோகத்தை சிரமமின்றி பொதுமக்களுக்கு இலகுவாக பெற்றுக்கொடுக்கும் நோக்கில் பாலமுனை பொதுமக்கள் சார்பாக கே.நிசார்தீன் தலைமையிலான இளைஞர் குழுவினர் செயற்பட்டு எவ்விதமான இடையூறுகளும் இன்றி எரிவாயு விநியோகம் இடம்பெற்றது.

மேலும் 2022 மே மாத மின்சார பட்டியலின் அடிப்படையில் இந்த எரிவாயு விநியோகம் இடம்பெற்றதுடன், சுமார் 500இற்கும் மேற்பட்ட பொதுமக்கள் எரிவாயு சிலிண்டரை பெற்றுக்கொள்வதற்காக வந்திருந்தனர். ஆனாலும் 300 பேருக்கு மாத்திரமே எரிவாயு சிலிண்டர் விநியோகம் இடம்பெற்றதனால் ஏனையோர் பெரும் ஏமாற்றத்துடன் திரும்பிச்சென்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

# வாழைச்சேனை அந்நூர் பாடசாலையில் சுகாதார விழிப்புணர்வு கருத்தரங்கு




(மீராவோடை நிருபர்)

வாழைச்சேனை ஆயிஷா மகளிர் மகா வித்தியாலய மாணவிகளுக்கு சுகாதார விழிப்புணர்வு கருத்தரங்கு நேற்று (19) வாழைச்சேனை அந்நூர் தேசிய பாடசாலை பிரதான மண்டபத்தில் இடம்பெற்றது.

ஆயிஷா வித்தியாலய அபிவிருத்திச் சங்க ஏற்பாட்டில் மட்டக்களப்பு சுகாதார சேவை நிலையத்தின் அனுசரணையில் இந்நிகழ்வு ஆயிஷா மகளிர் மகா வித்தியாலய அதிபர் என்.சஹாப்தீன் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில், வளவாளர்களாக கோறளைப்பற்று மத்தி சுகாதார வைத்திய அதிகாரி எஸ்.ரீ.எம்.நஜீப் கான், சுகாதார சேவை நிலையத்தின் மாவட்ட இணைப்பாளர் எஸ்.எச்.இம்தியாஸ் ஆகியோர் கலந்துகொண்டு விரிவுரைகளை நடத்தினர்.

இந்நிகழ்வுக்கு அதிதிகளாக கோறளைப்பற்று மேற்கு ஓட்டமாவடி கோட்டக் கல்விப் பணிப்பாளர் வீ.ரீ.அஜ்மீர், பாடசாலை பிரதி அதிபர் ஏ.ஆர்.முகைதீன் பாவா, ஆசிரியர் கே.ஆர்.எம்.இர்ஸாத், பாடசாலை அபிவிருத்தி சங்க செயலாளர் எஸ்.ஐ.எம்.பஸீல், உறுப்பினர் எம்.எம்.சாதாத் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இதில், மாணவ சமூகம் உடல் ரீதியாகவும் உள ரீதியாகவும் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக பேசப்பட்டதுடன், அதை எவ்வாறு கையாள வேண்டும் என்பன பற்றி விளக்கங்களும் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில், தரம் 9 தொடக்கம் 13 வரையான மாணவிகள் கலந்துகொண்டு பயன்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

# அட்டப்பள்ளம் ஐ.ஓ.சியில் முன்னுரிமை அடிப்படையில் எரிபொருள் விநியோகம்




(கோணாவத்தை நிருபர்)

நிந்தவூர், அட்டப்பள்ளம் லங்கா (ஐ.ஓ.சீ.) எரிபொருள் நிரப்பு நிலையத்தினால் அத்தியாவசிய சேவைகள் மற்றும் பொதுமக்களின் அவசர தேவைகளை நிறைவேற்றுவதற்கேற்ற வகையில் முன்னுரிமை அடிப்படையில் பெற்றோல் விநியோகிக்கப்பட்டு வருகிறது.

முதலில் வரும் பெற்றோல் 2500 ரூபா வீதம் மோட்டார்சைக்கிள்களுக்கு மாத்திரம் வழங்கப்படவுள்ளதுடன், அதற்கடுத்ததாக வரும் பெற்றோல் 3000 ரூபா வீதம் முச்சக்கரவண்டிகளுக்கும், அடுத்ததாக வரும் பெற்றோல் பத்தாயிரம் ரூபா வீதம் கார்களுக்கும், 4000 ரூபா வீதம் கலன்களுக்கும், அதற்கடுத்ததாக வரும் பெற்றோல் அரச ஊழியர்களுக்கு 2500 ரூபா வீதமாக விநியோகிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அவசர வைத்திய சேவைகளுக்கு செல்லவுள்ள பொதுமக்களின் வாகனங்கள், வைத்தியசாலை அம்பியூலன்ஸ்கள், மத குருமார்கள், வணக்கஸ்தலங்கள், பல்கலைக்கழகம், மாற்றுத்திறனாளிகள் மற்றும் அவசர தேவைகளுக்காக நெடுந்தூர பயணம் மேற்கொள்வோர் போன்றவர்களுக்கு முன்னுரிமை கொடுத்து பெற்றோல் விநியோகிக்கப்பட்டு வருவதாக பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

நாட்டில் ஏற்பட்டுள்ள பாரிய எரிபொருள் தட்டுப்பாட்டுக்கு மத்தியில் பொதுமக்களுக்கு சேவை நோக்கில் இந்நிறுவனமானது செயற்பட்டு வருவதையிட்டு பொதுமக்கள் பாராட்டுத் தெரிவிக்கின்றனர்.

அண்மையில் எரிபொருளுக்கான விலையேற்றம் மேற்கொள்ளப்பட்டபோதும் கையிருப்பிலிருந்த பெற்றோல் முழுமையாக தீரும்வரை முந்தைய விலையிலேயே மக்களுக்கு பெற்றோல் வழங்கியதை அவதானிக்க முடிந்தது.

கடந்த பல வருடங்களாக எரிபொருள் விநியோகம் மற்றும் லிட்ரோ எரிவாயு விநியோகம் ஆகிய சேவைகளை பொதுமக்களுக்கு வழங்கி வருகின்ற இந்நிறுவனத்தில் கடமையாற்றும் ஊழியர்களும் இரவு, பகல் பாராது பொதுமக்களின் தேவை உணர்ந்து அவர்களது கஷ்டங்களையும், அவலங்களையும் மதித்தவர்களாக சிறந்த தலைமைத்துவத்தின் கீழ் பணியாற்றி வருவது பாராட்டத்தக்கது.

வரிசையில் பாகுபாடு காட்டாது அறிந்தவர்கள், அறியாதவர்கள் என வேறுபாடுயின்றி ஒழுங்கு முறைப்படி எரிபொருள், எரிவாயு என்பவற்றை வழங்கி வருவதனால் பரவலாக எல்லோரும் தங்களுக்கான எரிபொருளை பெற்றுக்கொள்கின்றனர்.

நிந்தவூர் பிரதேச மக்களுக்கு மாத்திரமல்ல, அம்பாறை மாவட்டத்திலுள்ள அனைத்து பிரதேச மக்களும் இந்நிறுவனத்தின் சேவையை பெற்றுக்கொள்கின்றனர். நிறுவனத்தின் உரிமையாளர்களான ஏ.அலிக்கான், ஏ.அஸ்வத்கான் ஆகியோருடன் முகாமையாளரான ஏ.எம்.றஜீப்வும் எரிபொருளை பெற்றுக்கொள்ளவேண்டுமென்ற எதிர்பார்ப்போடு தமது ஒலங்கா (ஐஓசீ) நிறுவனத்தை நாடி வரும் மக்களுக்கு தளத்தில் நின்று எரிபொருள் தட்டுப்பாட்டு நிலைமைகளை விளக்குவதோடு, தமது நிறுவனத்திலுள்ள எரிபொருள் மற்றும் எரிவாயுவை சிறந்த முறையில் பங்கிட்டு வருவதை பொதுமக்கள் பாராட்டுகின்றனர்.

அம்பாறை மாவட்டத்திலுள்ள துறைநீலாவணைமுதல் பொத்துவில்வரையான பிரதேசங்களிலுள்ள ஆயிரக்கணக்கான பொதுமக்கள் இந்நிறுவனத்திலிருந்து எரிவாயு சேவையினைப் பெற்றுவருவது குறிப்பிடத்தக்கது.

கிழக்கு செய்திகள்
easttamilan@gmail.com

# திருமலையில் முன்பள்ளி மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு



(கந்தளாய் நிருபர்)

மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்தி அமைச்சின்கீழ் இயங்கும் முன்பிள்ளை அபிவிருத்திக்கான தேசிய செயலகத்தின் அனுசரணையில் திருகோணமலை மாவட்டத்தைச் சேர்ந்த தெரிவுசெய்யப்பட்ட முன்பிள்ளைகளுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் (18) மாவட்ட செயலகத்தில் அரசாங்க அதிபர் பி.எச்.என்.ஜயவிக்ரம தலைமையில் நடைபெற்றது.

இம்மாதம் 14ஆம் திகதி தொடக்கம் 20ஆம் திகதிவரை முன்பிள்ளை தேசிய வாரமாக அனுஷ்டிக்கப்படுவதுடன், அதனை முன்னிட்டே இந்த உபகரணங்கள் வழங்கப்பட்டன.

அதனடிப்படையில் 2023ஆம் ஆண்டு முன்பள்ளிகளுக்கு அனுமதிக்கப்படவிருக்கின்ற வறுமைக்கோட்டிற்குட்பட்ட மற்றும் பெற்றோர்களை இழந்த சிறுவர்கள் இதன்போது முன்னுரிமை அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்டார்கள்.

மொத்தமாக 77 முன்பள்ளி மாணவர்களுக்கு இந்த கற்றல் உபகரணங்கள் வழங்கப்படவுள்ளன. நாட்டில் தற்போது நிகழ்கின்ற போக்குவரத்து நிலைமையை கருத்திற்கொண்டு திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட 14 மாணவர்கள் மாவட்ட செயலகத்திற்கு அழைக்கப்பட்டு, அவர்களுக்கான இந்த கற்றல் உபகரணங்கள் இதன்போது வழங்கப்பட்டதுடன், ஏனைய மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் அந்தந்த பிரதேச செயலகம் மூலம் வழங்கப்படவுள்ளன.

இந்நிகழ்வில் மேலதிக அரசாங்க அதிபர் ஜே.எஸ்.அருள்ராஜ், மேலதிக அரசாங்க அதிபர் (காணி) எஸ்.சுதாகரன், மாவட்ட செயலக நிர்வாக உத்தியோகத்தர் எஸ்.ஆர்.கே.எஸ்.குருகுலசூரிய, மாவட்ட செயலக முன்பிள்ளை அபிவிருத்தி உத்தியோகத்தர் கே.நப்ரத் உள்ளிட்டோரும் கலந்துகொண்டனர்.

# முஸ்லிம்களின் பிரச்சினையைத் தீர்க்க சிறந்த வாய்ப்பாக ஜனாதிபதியை தேர்ந்தெடுப்பதை பயன்படுத்துங்கள்

## முஸ்லிம் எம்.பிக்களுக்கு அல் - மீஸான் பௌண்டேஷன் கோரிக்கை

(மாளிகைக்காடு நிருபர்)

இலங்கை நாடாளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன, ஐக்கிய மக்கள் சக்தி, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ், தேசிய காங்கிரஸ், முஸ்லிம் தேசிய கூட்டமைப்பு ஆகிய கட்சிகளைச் சேர்ந்த எல்லா முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்களும் தமது கட்சிகளின் விருப்புவெறுப்புகளுக்கு அப்பால் சமூகத்தின் பிரச்சினைகளை தீர்த்துவைத்தும் சக்தியும், ஆளுமையும், எண்ணமும்கொண்ட ஜனாதிபதி வேட்பாளரை ஆதரிக்க முன்வர வேண்டுமென சகல முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் அல்-மீஸான் பௌண்டேஷன் ஸ்ரீலங்கா சார்பில் பொதுச் செயலாளர் முஹம்மட் நாஸிக் பதுர்தீன் வேண்டுகோளொன்றை விடுத்துள்ளார்.

அல்-மீஸான் பௌண்டேஷன் ஸ்ரீலங்கா பொதுச் செயலாளர் விடுத்துள்ள அறிக்கையில்

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழ் முற்போக்கு கூட்டணி போன்ற தமிழ் மக்களின் சக்திமிக்க அரசியல் கட்சிகள் தமிழ் மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் வேட்பாளர்களுடன் பேச்சுவார்த்தைகள் செய்துவரும் நிலையில், முஸ்லிம் கட்சிகள் வழமைபோன்று கண்களை மூடிக்கொண்டு வாசிக்கு வலைவீசாமல் நிதானித்து முஸ்லிம் சமூகத்தின் பிரச்சினைகளை தீர ஆராய்ந்து முடிவெடுக்க சிறந்த வாய்ப்பு கிட்டியுள்ளதாக இந்த சூழ்நிலையை அடிக்கோடிட்டு காட்ட விரும்புகிறோம்.

முஸ்லிம் சமூகத்தின் காணி மற்றும் நிலப்பிரச்சினைகள், பிராந்திய பிரச்சினைகள், உரிமை சார்ந்த விடயங்கள் என இலங்கையின் சகல பாகங்களிலும் பிரச்சினைகள் அதிகமாக இருக்கின்றன. அவற்றைப் பட்டியலிட்டு அந்த பிரச்சினைகளை எழுத்து மூலம் ஒப்பந்தம் செய்து வெற்றிபெறுவதற்கு வாய்ப்பிருக்கின்ற, முஸ்லிம்களின் பிரச்சினைகளை தீர்த்துவைக்கும் ஆற்றலும், எண்ணமும் உள்ள வேட்பாளர்களை அணுகி மேலதிக நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் கடந்த காலங்களில் விட்ட தவறுகளை முன்னுதாரணமாகக்கொண்டு இந்த வாய்ப்பை பயன்படுத்த வேண்டும் என்றும் வேண்டுகோள் விடுக்கிறோம் என தெரிவித்துள்ளார்.

# திருமலை மாவட்ட செயலக வளாகத்தில் உற்பத்தியான தக்காளி கன்றுகள் உத்தியோகத்தர்களுக்கு விநியோகம்






(கிண்ணியா நிருபர்)

திருகோணமலை மாவட்ட செயலக வளாகத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ள நாற்று மேடையில் உற்பத்திசெய்யப்பட்ட தக்காளி கன்றுகள் நேற்று (19) அரசாங்க அதிபர் பி.எச்.என்.ஜயவிக்ரமவினால் உத்தியோகத்தர்களுக்கு விநியோகிக்கப்பட்டன.

மாவட்ட செயலக வளாகத்தில் சேதனப் பசளைகளைப் பயன்படுத்தி, நாற்றுமேடை உற்பத்தி மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், அவை உத்தியோகத்தர்களுக்கு வீடுகளில் வீட்டுத் தோட்டப் பயிர்ச்செய்கை மேற்கொள்வதற்காக விநியோகிக்கப்பட்டும் வருகின்றன. மாவட்ட விவசாயப் பிரிவு இந்நாற்று மேடையை பராமரித்து வருகின்றன.

இந் நிகழ்வில் மாவட்ட விவசாயப் பணிப்பாளர் எம்.குகதாசன், திட்டமிடல் பணிப்பாளர் கே.விஜயதாசன் ஆகியோரும் சக உத்தியோகத்தர்களும் கலந்துகொண்டனர்.





ஸாவியத்துல் ஹல்லாஜிய்யா குத்புனா கௌஸுனா அஸ்-செய்யித் அஷ்-ஷேக் ஹல்லாஜுல் மன்சூர் நாயகம் காதிரி ஜிஷ்தி றிபாயி நக்ஷபந்தி ஐதுரூஸி றழியள்ளாஹு அன்ஹு அன்னவர்களின் 18ஆவது வருட நினைவாக உலமாக்கள், நிர்வாகிகள் மற்றும் பொதுமக்களின் பங்குபற்றலுடன் அக்கரைப்பற்று ஸாவியத்துல் ஹல்லாஜிய்யா பள்ளிவாசலில் கொடியேற்றம் இடம்பெற்றது. (படங்கள் - நூருல் ஹுதா உமர்)

# கறுப்புச் சந்தையை இல்லாதொழிப்பது தொடர்பாக சாய்ந்தமருதில் ஆராய்வு



(மாளிகைக்காடு நிருபர்)

பெற்றோல் விநியோகத்திலான முறைகேடுகளை இல்லாதொழிப்பது சம்பந்தமான கலந்துரையாடலொன்று சாய்ந்தமருது பிரதேச செயலக ஏற்பாட்டில் சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.எம்.ஆஷிக் தலைமையில் நேற்று (19) நடைபெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் சாய்ந்தமருது பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சிரேஷ்ட பொலிஸ் பரிசோதகர் எஸ்.எல்.எம்.சம்சுதீன், சாய்ந்தமருது பொலிஸ் நிலையப் பொலிஸ் அதிகாரிகள், சாய்ந்தமருது லங்கா ஐ.ஓ.சி. எரிபொருள் நிலைய நடத்துனர், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் மற்றும் சாய்ந்தமருது பிரதேச செயலகத்தினால் அறிமுகம் செய்யப்பட்ட செயலியை செயல்படுத்தும் உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

இதில் நடைமுறைச் சாத்தியமான பல முடிவுகள் நீண்டநேர கலந்துரையாடலின் பின்னர் எடுக்கப்பட்டதுடன், முடியுமானளவு கறுப்புச் சந்தையை குறைப்பதற்கான உடன்பாடுகள் எட்டப்பட்டுள்ளன.

''அரசாங்கத்தினால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள தேசிய எரிபொருள் விநியோக செயற்றிட்டம் நடைமுறைக்கு வரும்வரை சாய்ந்தமருது பிரதேச செயலகத்தினால் அறிமுகப்படுத்தப்பட்ட செயலி நடைமுறையில் இருக்கும்'' - என சாய்ந்தமருது பிரதேசசெயலாளர் எம்.எம்.ஆஷிக் இதன்போது தெரிவித்தார்.



# தமிழ், முஸ்லிம் கட்சிகள் ரணிலை ஆதரிக்க வேண்டும்; ஹக்கீமுக்கும், சஜித்துக்கும் இடையில் இரகசிய டீல்!

## தமிழ் பேசும் மூன்று பங்காளிக் கட்சிகள் கூட்டாக அறிவிப்பு

(மாளிகைக்காடு நிருபர்)

கோட்டாபய ராஜபக்ஷ மக்களை ஏமாற்றி, நாட்டை நாசமாக்கிச் சென்றுள்ளார், கோட்டாபயவால் நாசமாக்கப்பட்ட நாட்டை மீண்டும் கட்டியெழுப்பி, மக்களின் வாழ்க்கையை மீட்டுத் தர தற்போதைய பதில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவால் மாத்திரமே முடியுமென்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுடன் ஒப்பந்தம் செய்திருந்த தமிழ் பேசும் மூன்று பங்காளிக் கட்சிகள் கூட்டாக நேற்று முன்தினம் (18) அறிவித்தன.

என்.விஷ்ணுகாந்தனை செயலாளர் நாயகமாகக்கொண்ட இலங்கை மக்கள் தேசிய கட்சி, முபாரக் அப்துல் மஜீத் மௌலவியை தலைவராகக்கொண்ட ஐக்கிய காங்கிரஸ் கட்சி, நடராஜா ரவிக்குமாரை தலைவராகக்கொண்ட புதிய ஜனநாயக மக்கள் முன்னணி ஆகியன ஸ்ரீகொத்தாவில் ஊடக மாநாடு நடத்தின.

என்.விஷ்ணுகாந்தன் இங்கு உரையாற்றியபோது,

கோட்டாபய மக்களை ஏமாற்றி, நாட்டை நாசமாக்கிச் சென்றுள்ளார், மாபெரும் அரசியல் பிரளயம் இடம்பெற்று முடிந்துள்ளது, கோட்டாபய தப்பி ஓடிய நிலையில், பதில் ஜனாதிபதியாக பதவியேற்று சரியாக நாட்டையும், மக்களையும் வழிநடத்திக்கொண்டிருப்பவர் ரணில் விக்ரமசிங்கவேதான், எல்லோருக்கும் பதவி ஆசை இருக்கின்றது, ஆனால், பிரதமர் பதவியைப் பொறுப்பெடுக்க மற்ற எல்லோரும் அஞ்சிய நேரத்தில் பிரதமர் பதவியை பொறுப்பெடுத்தவரும் ரணில் விக்ரமசிங்கவே, இவர் இடைக்கால ஜனாதிபதியாக வருகின்ற பட்சத்தில் நிச்சயமாக



ஒரு மீட்பராக தொடர்ந்தும் ஒளிர்வார் என்பதில் மாற்றம் கிடையாது, தமிழ், முஸ்லிம் கட்சிகள் அனைத்தும் ரணிலை ஆதரித்து அவரை இடைக்கால ஜனாதிபதியாக்கவேண்டும் - என்றார்.

முபாரக் அப்துல் மஜீத் மௌலவி பேசியபோது,

2005, 2010, 2015 காலப்பகுதியில் மு.கா. தலைவர் ரவூப் ஹக்கீமுக்கு ரணில் நல்லவராக தெரிந்தார். அவர் காட்டிய வழியில் ஹக்கீம் நடந்தார். ஆனால், இப்போது சஜித்துடன் நிற்கின்றார். எனவே, ஹக்கீமுக்கும், சஜித்துக்கும் இடையில் இரகசிய டீல் ஒன்று இருப்பது தெரிகின்றது. மக்களால் நிராகரிக்கப்பட்ட ரணில் ஜனாதிபதியாவது ஜனநாயகம் இல்லை என்றால் ஏன் 69 இலட்சம் மக்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டவரை மக்கள் விரட்ட வேண்டும்? சஜித் கூட ஜனாதிபதித் தேர்தலில் மக்களால் நிராகரிக்கப்பட்டவர்தான். அநுரகுமார திஸாநாயக்கவும் ஜனாதிபதித் தேர்தலில் மிக மோசமாக நிராகரிக்கப்பட்டவர்தான். அவர் போட்டியிடுவது ஜனநாயகம் இல்லை என கூற முடியுமா? எத்தனை வாக்குகள் ஆயினும் அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் ஜனநாயக உரிமை உண்டு.

பெருவாரி மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர் திறமையற்றவராக இருந்தால் கொஞ்ச பேர் வாக்குகளால் எம்.பியான திறமையான ஒருவரை ஜனாதிபதியாக்குவதில் என்ன பிரச்சினை? 69 இலட்சத்தை விட ஒரு இலட்சம் பேரால் தெரிவு செய்யப்பட்டவரை வைத்தாவது நாட்டை கட்டியெழுப்புவதே இன்றைய தேவை - என்று தெரிவித்தார்.

# களுவாஞ்சிக்குடியில் நீண்ட நாட்களாக வீடுகளில் கொள்ளையில் ஈடுபட்ட இளைஞன் ஒருவர் கைது

## எரிவாயு சிலிண்டர், தங்க ஆபரணங்கள், பணம் உள்ளிட்ட ஆயுதங்கள் மீட்பு




(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு, களுவாஞ்சிக்குடி பொலிஸ் பிரிவிலுள்ள பிரதேசங்களில் நீண்ட நாட்களாக வீடுகளை உடைத்து, கொள்ளையடித்துவந்த திருடனை நேற்று முன்தினம் (18) இரவு கைதுசெய்ததுடன், அவரிடமிருந்து கொள்ளையிடப்பட்ட எரிவாயு வெற்றுச்சிலிண்டர் 6, தங்க ஆபரணங்கள், சிடி பிளேயர், பணம் மற்றும் திருட்டுக்குப் பயன்படுத்திய ஆயுதங்களை மீட்டுள்ளதாக களுவாஞ்சிக்குடி பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த பொலிஸ் பிரிவில் நீண்ட நாட்களாக வீடுகள் உடைத்து கொள்ளையிடப்பட்ட சம்பவங்கள் தொடர்பாக பல முறைப்பாடுகள் பொலிஸ் நிலையத்தில் செய்யப்பட்டன. இதனையடுத்து இந்தக் கொள்ளைச் சம்பவங்கள் தொடர்பாக உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ஜெயந்த விக்ரமவின் ஆலோசனையில், பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பிரதான பொலிஸ் பரிசோதகர் அபேயவிக்ரமவின் வழிகாட்டலில் பொலிஸ் நிலையப் பெரும் குற்றத்தடுப்புப் பிரிவு பொறுப்பதிகாரி ஜே.பி.ஜோய் தலைமையிலான பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுவந்தனர்.

இதனையடுத்து தொடர் விசாரணையில் நேற்று முன்தினம் இரவு களுவாஞ்சிக்குடி பிரதேசத்தைச் சேர்ந்த 24 வயதுடைய இளைஞன் ஒருவரை கைதுசெய்ததுடன், கொள்ளையிடப்பட்ட 6 எரிவாயு சிலிண்டர்கள், ஒரு சிடி பிளேயர், தங்கத் தோடு இரண்டு சோடி, குழந்தைகளின் மோதிரங்கள், 6 ஆயிரத்து 500 ரூபா பணம் மற்றும் வீடுகளை உடைப்பதற்கு பயன்படுத்திய ஆயுதங்களையும் மீட்டுள்ளனர்.

இதில் கைதுசெய்யப்பட்டவரை இன்று நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். இது தொடர்பான மேலதிக விசாரணைகளை களுவாஞ்சிக்குடி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

## போடியார் புலம்பல்!



இண்டைக்கு தெரிவு செய்யப்படும் ஜனாதிபதி ஆராக இருந்தாலும் இலங்கையை சிங்கப்பூராக மாற்றமாட்டாங்க. சிங்கப்பூருல ஒளிந்திருக்கிற கோட்டபயாவை கூட்டித்து வந்து நாசமாக்கும் நரி ஒன்றுதான் தெரிவாகும் சந்தர்ப்பம் இருப்பதாக அநுராதபுரம் ஞானம் அக்கா சொல்லல்ல நம்மட மட்டக்களப்பு மந்திரவாதி ஒருவர் அஞ்சணம் போட்டு கண்டுபிடித்தாராம்..! மெய்யாத்தானா எண்டத பார்ப்பம்..! ஆனா, கூட்டமைப்பு ரெண்டும் கெட்டான் நிலையில குழம்பின மாதிரித்தான் இவங்கட முடிவு இருக்கு எலுவா.?

# உயிரிழந்த நபரை அடையாளம் காண உதவுங்கள்



(மண்டூர் நிருபர்)

மட்டக்களப்பு மாவட்ட செங்கலடி பஸ் தரிப்பிடமொன்றினுள் பல வருட காலமாக தங்கியிருந்து யாசகம் பெற்றுவந்த வயோதிபர் ஒருவர் கடந்த முதலாம் திகதி திடீர் சுகவீனமுற்று ஏறாவூர் மற்றும் மட்டக்களப்பு வைத்தியசாலையில் சிகிச்சைபெற்று வந்த நிலையில், நேற்று முன்தினம் (18) காலை ஏறாவூர் ஆதார வைத்தியசாலையில் உயிரிழந்துள்ளார்.

இவர் சுயநினைவோடு இருந்தபோது, தனது பெயர் ராஜா என்றும் வயது 72 என்றும் தெரிவித்திருப்பதோடு, உன்னிச்சை புதூர் எனது ஊர் என்றும் தெரிவித்திருக்கிறார்.

இவரது பிள்ளைகளும் குறித்த ஊரிலேயே இருப்பதாக தெரிவித்திருந்தும் இன்றுவரை எந்தவொரு உறவுகளும் இவரைத் தேடி வராத நிலையில், தற்போது இவரது பிரேதம் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

தயவுசெய்து இவரது உறவினர்கள் ஏறாவூர் பொலிஸ் நிலையத்தோடு தொடர்புகொண்டு, பிரேதத்தை அடையாளம் காண உதவுமாறு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# களுவாஞ்சிக்குடி பஸ் விபத்தில் முதியவர் பலி!

(மண்டூர் நிருபர்)

களுவாஞ்சிக்குடி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கல்முனை - மட்டக்களப்பு பிரதான வீதியில் நேற்று முன்தினம் (18) இடம்பெற்ற விபத்தில் முதியவர் ஒருவர் பலியானதாக களுவாஞ்சிகுடி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சக்தி இல்ல வீதி களுவாஞ்சிகுடியைச் சேர்ந்த ஆறு பிள்ளைகளின் தந்தையான கணபதிப்பிள்ளை செல்லத்துரை என்பவரே இவ்விபத்தில் பலியானவராவார்.

சம்பவ தினத்தன்று தனது வீட்டிலிருந்து தேவாலயத்திற்கு வழிபாட்டுக்காக சென்று கொண்டிருக்கும்போது குறித்த வீதியூடாக கல்முனையிலிருந்து மட்டக்களப்பை நோக்கி பயணித்த பஸ் மோதியதில் குறித்த நபர் சம்பவ இடத்தில் உயிரிழந்ததாக பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

களுவாஞ்சிகுடி நீதிமன்ற நீதிவானின் உத்தரவிற்கமைவாக சம்ப இடத்திற்கு சென்ற களுவாஞ்சிகுடி பிரதேச திடீர் மரண விசாரணை அதிகாரி சிதம்பரப்பிள்ளை ஜீவரெத்தினம் அவர்கள் சடலத்தினை பார்வையிட்ட பின்னர் பிரேத பிரிசோதனையின் பின்னர் சடலத்தினை உறவினர்களிடம் ஒப்படைக்குமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டார். சம்பவம் பற்றிய மேலதிக விசாரணைகளை களுவாஞ்சிகுடி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# தோப்பூர் பல்நோக்குக் கூட்டுறவு சங்கத்தினால் எரிபொருள் விநியோகம்




(மூதூர் நிருபர்)


தோப்பூர் பிரதேசத்தில் நேற்று முன்தினம் (18) பொதுமக்களுக்கு தோப்பூர் பல்நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினால் எரிபொருள் விநியோகிக் கப்பட்டது.


தோப்பூர் பிரதேசத்தில் தனியான ஒரு எரிபொருள் நிரப்பு நிலையம் காணப்படாமையானது அப்பிரதேச மக்களுக்கு பாரிய சவாலாக காணப்படுகிறது. எரிபொருளைப் பெற்றுக்கொள்ள வேண்டுமென்றால் சுமார் 12 கி.மீ. சென்று எரிபொருள் தேவையை நிறைவேற்றுவதாக காணப்படுகிறது. இதனால் மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்குகின்றனர்.

இவ்வாறான மக்களின் பிரச்சினைகளை கருத்திற்கொண்டு தோப்பூர் பல்நோக்குக் கூட்டுறவுச் சங்கமானது மூதூர் பிரதேச செயலாளர், மூதூர் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி மற்றும் மூதூர் பல்நோக்குச் கூட்டுறவுச் சங்கம் என்பவற்றுடன் கலந்துரையாடி தோப்பூர் பிரதேசத்திற்கு மூதூர் எரிபொருள் நிரப்பு நிலையத்திலிருந்து குறிப்பிட்ட தொகை எரிபொருளை வழங்கவேண்டும் என வாக்குறுதி பெற்றுக்கொண்டது. இதற்கமைய வழங்கப்பட்ட எரிபொருளை தோப்பூர் பிரதேச மக்களுக்கு பகிர்ந்தளித்தனர்.

# சுவாமி விபுலானந்தரின் 75ஆவது சமாதி தினம் மட்டு. இந்து இளைஞர் மன்றத்தினால் அனுஷ்டிப்பு







(வெல்லாவெளி நிருபர்)

சுவாமி விபுலானந்தரின் 75ஆவது சமாதி தினம் மட்டக்களப்பு இந்து இளைஞர் மன்றத்தினால் நேற்று (19) அனுஸ்டிக்கப்பட்டது.

சுவாமி விபுலானந்தரின் 75ஆவது சமாதி தினம் மட்டக்களப்பு நீருற்று பூங்காவில் அமைக்கப்பட்டுள்ள சுவாமி விபுலானந்தர் சிலைக்கு அருகாமையில், மட்டக்களப்பு இந்து இளைஞர் மன்றத்தின் ஏற்பாட்டில் மட்டக்களப்பு மாவட்ட இந்து இளைஞர் மன்றத்தின் தலைவரும், முன்னாள் வலயக்கல்விப் பணிப்பாளருமான மு.பவளகாந்தன் தலைமையில் அனுஸ்டிக்கப்பட்டது.

இந்நிகழ்வில் மட்டக்களப்பு மாநகர சபை முதல்வர் தி.சரவணபவன், மட்டக்களப்பு இந்து இளைஞர் மன்றத்தின் பொதுச் செயலாளர் சா.அருள்மொழி, பொருளாளர் அ.அருளானந்தம், உபதலைவரும், காந்தி சேவா சங்கத்தின் தலைவருமான அ.செல்வேந்திரன், உபசெயலாளர் ப.முருகதாஸ், சுவாமி விபுலானந்தர் நூற்றாண்டு சபையின் தலைவர் க.பாஸ்கரன், செயலாளர் சா.ஜெயராசா, பொருளாளர் த.யுவராசா மற்றும் இந்து இளைஞர் மன்றத்தின் உறுப்பினர்களும் கலந்துகொண்டார்கள்.

இந்த சமாதி தினத்தில் சுவாமி விபுலானந்தரின் பிறப்பு, இறப்பு, அவர் செய்த காத்திரமான சமூக, சமயப்பணி நினைவுகூரப்பட்டதுடன், அவருக்கு மௌன அஞ்சலி செலுத்தப்பட்டு, இங்கு வருகைதந்த அதிதிகளினால் சுவாமி விபுலானந்தரின் சிலைக்கு மாலை அணிவிக்கப்பட்டது.

'வெள்ளை நிற மல்லிகையோ...வேறெந்த மாமலரோ...' எனும் பாடல்பாடி மலரஞ்சலி செலுத்தப்பட்டது.

கல்லடி இராமகிருஷ்ணமிஷன் சுவாமிகளின் முன்னிலையில் நேற்றுக் காலை 7.45 மணியளவில் கல்லடி, சுவாமி விபுலானந்தர் சமாதியில் மலரஞ்சலி செலுத்தப்பட்டது.


# உலகில் உணவு நெருக்கடி இன்னும் கடுமையாகும்



''உலகில் தற்போது ஏற்பட்டுள்ள உணவு நெருக்கடியை விட அடுத்த ஆண்டு இன்னும் கடுமையாக இருக்கும்'' - என ஐ.நா. பொதுச் செயலாளர் அன்டோனியோ குட்டரெஸ் எச்சரித்துள்ளதுடன், ''அனைவரும் ஒன்றாக இணைந்து செயற்பட்டால் இந்தப் பேரழிவை தவிர்க்கலாம்'' எனவும் தெரிவித்துள்ளார்.

# உலக செய்திகள்

# அதீத தொற்றும் தன்மையுடைய மார்பர்க் வைரஸ் கண்டுபிடிப்பு



## வைரஸ் பாதிப்பால் கானாவில் இருவர் உயிரிழப்பு

## ''எபோலாவை போன்று ஆட்கொல்லி நோய்'' – என உலக சுகாதார ஸ்தாபனம் எச்சரிக்கை

கானாவில், அதீத தொற்றுத்தன்மையுடைய 'மார்பர்க் வைரஸ்' பாதிப்பால் இருவர் உயிரிழந்த நிலையில், தொற்று பரவலை தடுப்பதற்கான உடனடி நடவடிக்கைகளை எடுத்துவருவதாக அந்நாட்டு சுகாதாரத்துறை தெரிவித்துள்ளது.

எபோலா வைரஸை போன்ற தாக்கத்தை மார்பர்க் வைரஸ் ஏற்படுத்தக்கூடிய நிலையில், வைரஸ் பாதிப்பால் உயிரிழந்த இருவருடன் தொடர்பில் இருந்தவர்கள் தனிமைப்படுத்தபட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

**அதீத ஆபத்து**

2014ஆம் ஆண்டில் மத்திய மற்றும் மேற்கு ஆபிரிக்க நாடுகளில் வேகமாகப் பரவிய உயிர்கொல்லி நோய் எபோலா, காய்ச்சல், தலைவலி, வயிற்றுப் போக்கு, வாந்தி, பசியின்மை உள்ளிட்ட அறிகுறிகளுடன் பரவிய இந்த நோய், பாதிக்கப்பட்டவர்களில் 90% மக்களின் உயிருக்கு






ஆபத்தை ஏற்படுத்தியது. தற்போது அதேபோன்று 'மார்பர்க் வைரஸ்' என்ற நோய் கானாவில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

எபோலா போன்ற அறிகுறிகள் தென்பட்ட இருவரின் மாதிரிகளை செனகலிலுள்ள ஆய்வகத்திற்கு அனுப்பி பரிசோதனை மேற்கொண்டதில் இது மார்பர்க் தொற்று என கண்டறியப்பட்டுள்ளது. இதுவும் எபோலாவை போலவே ஆட்கொல்லி நோய் என உலக சுகாதார ஸ்தாபனம் எச்சரித்துள்ளது.

இதற்கு முன்னர் கினியாவில் கடந்த ஆண்டு ஒருவருக்கு மார்பர்க் தொற்று கண்டறியப்பட்டது. 1967ஆம் ஆண்டு முதல் தெற்கு மற்றும் கிழக்கு ஆபிரிக்க நாடுகளில் 10இற்கும் மேற்பட்ட முறை மார்பர்க் தொற்று பரவியுள்ளது. வௌவால்களிடமிருந்து மனிதருக்கு பரவி பிறகு நேரடியாக மனிதர்களிடமிருந்து மனிதர்களுக்கு பரவும் நோயாக மார்பர்க் உள்ளது.

நேரடியாக தொடுவதன் மூலமாகவும் பொருட்களை தொடுவதன் மூலமாகவும் பரவக்கூடும் என்பதால் எச்சரிக்கையாக இருக்க உலக சுகாதார அமைப்பு அறிவுறுத்தியுள்ளது.

# ஏலத்தில் விடப்படும் ஹிட்லரின் கடிகாரம்






சர்வதிகாரி ஹிட்லரின் கைக்கடிகாரம் ஏலம் விடப்படவுள்ளது.

ஜேர்மனியை ஆண்ட அடோல்ப் ஹிட்லருக்கு சொந்தமானது அண்ட்ரியாஸ் ஹூபர் கைக்கடிகாரம். இதை ஹிட்லர் 1933 ஏப்ரல் 20ஆம் திகதி தனது 44ஆவது பிறந்தநாளுக்காக தனக்குத்தானே பரிசாக வழங்கிக்கொண்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலையில், அமெரிக்காவின் மேரிலேண்டிலுள்ள பிரபல அலெக்சாண்டர் நிறுவனம் இந்த கைக்கடிகாரத்தை ஏலத்திற்கு விட்டுள்ளது. தங்கத்தால் செய்யப்பட்ட இந்தக் கடிகாரத்தில் ஜேர்மனியின் அரசு முத்திரை, ஹிட்லரின் பிறந்த நாள், ஹிட்லர் ஜனாதிபதியாகப் பதவியேற்ற நாள் போன்றவை பொறிக்கப்பட்டுள்ளன. இது 31 கோடி ரூபா வரை ஏலம் போகுமென எதிர்பார்க்கப்படுகிறது.

# ஒலியை விட ஐந்து மடங்கு வேகமாக செல்லக்கூடிய ஹைப்பர்சோனிக் ஏவுகணை சோதித்தது அமெரிக்கா



ஒலியை விட ஐந்து மடங்கு வேகமாக செல்லக்கூடிய ஹைபர்சோனிக் ஏவுகணையை சோதித்து பார்த்ததாக அமெரிக்கா தெரிவித்துள்ளது.

Raytheon தொழில்நுட்ப நிறுவனம் தயாரித்த ஏவுகணையை சோதித்து பார்த்ததாகவும், 2013 முதல் நடத்தப்பட்ட 3ஆவது ஹைபர்சோனிக் ஏவுகணை சோதனை வெற்றி என்றும் அமெரிக்க இராணுவத் தலைமையகமான பென்டகன் தெரிவித்துள்ளது.

HAWC வகை வான் சாதனங்களை தயாரிக்கும் முயற்சியில் அமெரிக்க பாதுகாப்பு மேம்பாட்டு ஆராய்ச்சி நிறுவனம் ஈடுபட்டுள்ளது. இவ்வகை ஹைப்பர்சோனிக் ஏவுகணைகள் வளிமண்டலத்திலுள்ள காற்றை உறிஞ்சி கூடுதல் உந்துசக்தியை பெருக்கும் ஆற்றல் கொண்டவை எனக் கூறப்படுகிறது.

# பூமியை தாக்கும் வீரியம் மிக்க சூரிய புயல்

## உலகம் முழுவதும் தகவல் தொடர்பு முற்றிலும் பாதிக்கப்படும் அபாயம்



பூமியை வீரியம் மிக்க சூரிய புயல் தாக்க வாய்ப்புள்ளதாக விண்வெளி ஆராய்ச்சியாளர்கள் எச்சரித்துள்ளனர்.

சில நாட்களுக்கு முன்பு சூரியனின் மேற்பரப்பில் ஏற்பட்ட கரும்புள்ளி சூரிய புயலாக உருவெடுத்துள்ளது. இந்தப் புயல் பாம்பு வடிவத்தில் நெளிந்த நிலையில், பூமியை நேரடியாக தாக்க வாய்ப்புள்ளதாக டொக்டர் தமிதா ஸ்கோவ் என்ற இயற்பியலாளர் கணித்துள்ளார்.

சூரிய புயல் தாக்கினால் தகவல் தொடர்பு முற்றிலும் பாதிக்கப்படலாம் என்று அஞ்சப்படுகிறது. செயற்கை கோள் மற்றும் தொலைபேசி இடையேயான ஜிபிஎஸ் எனப்படும் ரேடியோ அலைகள் பாதிக்கப்படும் என்றும் அதனால் ஜிபிஎஸ் சேவை பாதிக்கப்படலாம் என்றும் விஞ்ஞானிகள் கவலை அடைந்துள்ளனர்.


இந்த சூரிய புயல் பூமியை தாக்க வாய்ப்புள்ளதாக அமெரிக்காவின் விண்வெளி ஆராய்ச்சி நிலையமான நாசாவின் விஞ்ஞானிகள் கணித்துள்ளனர். சூரிய புயலை ஜி என்ற எழுத்தால் அளவிடப்படுகிறது. இதில் ஜி1 என்பது மிதமான புயல் என்பதும் ஜி5 மிகவும் ஆபத்தான சூரிய புயலாகவும் அளவிடப்படுகிறது. சில நாட்களுக்கு முன்பு கனடாவை சூரிய புயல் தாக்கிய நிலையில், நேரடியாக மிகப்பெரிய சூரிய புயல் தாக்கப்போவதாக விஞ்ஞானிகள் எச்சரிக்கின்றனர்.

## பிரிட்டனை வாட்டும் வெயில்

# லண்டனில் விமான ஓடுபாதையில் தார் உருகும் அளவுக்கு வெப்பம்

## விமான சேவைகள் இரத்து; சில பகுதிகளுக்கு ரெட் அலர்ட் எச்சரிக்கை

## ஸ்பெயின் - போர்த்துக்கலில் ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பலி





லண்டனில் விமான ஓடுபாதையின் தார் உருகும் அளவுக்கு உச்சபட்ச வெப்பம் நிலவியதால் லூடன் விமான நிலையத்தில் விமான சேவைகள் இரத்துசெய்யப்பட்டுள்ளன.

பல்வேறு பாதுகாப்பு அம்சங்களுக்கு பின் லூடன் விமான நிலையத்தில் விமானங்கள் புறப்படுவதற்கு மட்டும் அனுமதியளிக்கப்பட்டது.

மோசமான வெப்பநிலையால் ஓடுபாதை பழுதடைந்த நிலையில் நிலையத்தில் தரையிறங்க வேண்டிய விமானங்கள் பல்வேறு விமான நிலையங்களுக்கு திருப்பியனுப்பட்டுள்ளன.

**தவிக்கும் ஸ்பெயின் – போர்த்துக்கல்**

இதேவேளை, மேற்கு ஐரோப்பிய நாடுகளான ஸ்பெயின், போர்த்துக்கலில் மக்களை வாட்டி வதைக்கும் வெப்ப அலைகளால் ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர்.

ஸ்பெயினில் வெப்பநிலை தொடர்ச்சியாக 40 டிகிரி செல்சியஸ்க்கும் அதிகமாக பதிவாகிவரும் நிலையில், மலாகா மாகாணம், ஜெர்டே பள்ளத்தாக்கு உள்ளிட்ட பல்வேறு பகுதிகளிலும் காட்டுத்தீ வேகமாக பரவி வருகிறது.

இதே போன்று போர்த்துக்கலில் 47 டிகிரி செல்சியசுக்கு மேல் வெப்பம் வாட்டி வதைப்பதால், நான்கு வனப்பகுதிகளில் பற்றி எரியும் காட்டுத் தீயை அணைக்க 700 வீரர்கள் ஈடுபட்டுள்ளனர்.

**ரெட் அலர்ட் எச்சரிக்கை**

பிரித்தானியாவில் கடும் வெப்ப அலை வீசி வருவதன் எதிரொலியாக அங்குள்ள பிரைட்டன் பீச்சில் ஞாயிற்றுக்கிழமையன்று மக்கள் கூட்டம் அலைமோதியது.




தெற்கு பிரித்தானியாவில் வெப்ப நிலை 40 டிகிரி செல்சியஸை விட அதிகரிக்கக்கூடும் என கணித்துள்ள அந்நாட்டு வானிலை ஆய்வு மையம், சில பகுதிகளில் ரெட் அலெர்ட் எச்சரிக்கையும் விடுத்துள்ளது.

பொதுமக்களின் உயிருக்கு ஆபத்தை ஏற்படுத்தும் என்பதால் வீட்டை விட்டு வெளியே செல்வதை தவிர்க்குமாறும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. வானிலை மையத்தின் எச்சரிக்கையை தொடர்ந்து சில பாடசாலைகளுக்கு விடுமுறையும் வழங்கப்பட்டுள்ளது.





**வரலாற்றில் முதல் முறையாக 40 டிக்ரி வெயில்**

பிரித்தானியாவில் முன்னெப்போதும் இல்லாதளவுக்கு, கடந்த சில நாட்களாக வெயில் சுட்டெரிக்கிறது. வரலாற்றில் முதல் முறையாக நேற்று 40 டிக்ரி செல்யசிஸ் வெப்பம் பதிவானது. இந்த அதிகளவு வெப்பத்தினால் ஏராளமானோர் அதிலும் குறிப்பாக முதியோர் இறக்க வாய்ப்புள்ளதாக எச்சரிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து வானிலை ஆய்வு மையத்தின் தலைமை அதிகாரி பேராசிரியர் பென்னி என்டர்ஸ்பி தெரிவிக்கையில்,

''இதுவே பிரித்தானியாவில் வரலாற்றில் பதிவான மிகக் கொடூரமான வெயிலாகும். நேற்றுமுன்தினம் 40 டிகிரி செல்சியஸ் வெப்பம் பதிவாகியுள்ளது. இது இன்று 41 முதல் 43 டிகிரி செல்சியஸ் வரை பதிவாகும் என எதிர்பார்க்கப்படுகிறது. வானிலை மையத்தின் எச்சரிக்கையை கருத்திற்கொண்டு மக்கள் இந்த மோசமான தட்பவெப்ப நிலையிலிருந்து தங்களை பாதுகாத்துக்கொள்ள வேண்டும்'' என்றார்.

பிரித்தானியாவில் இதற்கு முன்னர் கடந்த 2019ஆம் ஆண்டு 38.7 டிக்ரி செல்சியஸ் வெப்பம் பதிவானதே அதிகபட்ச வெயிலாக இருந்தது.

# இயக்குநர் மணிரத்னத்துக்கு கொரோனா தொற்று



பிரபல திரைப்பட இயக்குநர் மணிரத்னத்துக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.


கொரோனா உறுதியானதையடுத்து இயக்குநர் மணிரத்னம் சென்னையிலுள்ள தனியார் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

மணிரத்னம் தற்போது பொன்னியின் செல்வன் படத்தை இயக்கியுள்ளார். இந்தப் படத்தில் ஜெயம் ரவி, கார்த்தி, விக்ரம், ஐஸ்வர்யா ராய், த்ரிஷா, ஜெயராம், பிரபு, ரகுமான், பாபு ஆண்டனி, கீர்த்தி சுரேஷ், ஐஸ்வர்யா லக்ஷ்மி என ஒரு பெரும் நட்சத்திர பட்டாளமே நடித்துள்ளனர்.

பொன்னியின் செல்வன் பட வெளியீட்டு பணிகளில் ஈடுபட்டிருந்த நிலையில், இயக்குநர் மணிரத்னத்துக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

## மலேஷியாவுக்கு கடத்தப்பட்ட....

# 144 கோடி ரூபா மதிப்பிலான யானை தந்தங்கள் பறிமுதல்



ஆபிரிக்காவிலிருந்து மலேஷியாவுக்கு கடத்தப்பட்ட சுமார் 144 கோடி ரூபா மதிப்பிலான யானை தந்தங்களை சுங்கத்துறை அதிகாரிகள் கைப்பற்றினர்.

செலங்கூர் துறைமுகத்திற்கு வந்த கப்பலில், ஆபத்தான பொருட்கள் இருப்பதாக எழுதப்பட்டிருந்த 3 கண்டெய்னர்களை சுங்கத்துறை அதிகாரிகள் சோதனையிட்டபோது 6,000 கிலோ யானை தந்தங்கள் இருந்துள்ளன.

இது தவிர, காண்டாமிருக கொம்புகள், புலியின் எலும்புகள், எறும்பு தின்னியின் செதில்கள் என 144 கோடி ரூபா மதிப்பில் மிகப்பெரிய கடத்தல் நடந்துள்ளது தெரியவந்தது.

# பாகிஸ்தானில் படகு விபத்து: 20 பேர் பலி; 30 பேர் மாயம்

பாகிஸ்தானில் படகொன்று விபத்துக்குள்ளானதில் 20 பேர் உயிரிழந்துள்ளதுடன், 30 பேர் காணாமல்போயுள்ளனர்.

பாகிஸ்தானில் திருமண நிகழ்வொன்றுக்கு 100 பேர் சென்ற படகொன்று நதியில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் 20 பேர் உயிரிழந்தனர்.

சாதிக்பாத் மாவட்டத்தில் சிந்து நதியில் படகு சென்றபோது அதிக பாரம் தாங்க முடியாமல் கவிழ்ந்ததாக கூறப்படுகிறது. 20 பேரின் சடலங்கள் கண்டெடுக்கப்பட்ட நிலையில், 30 பேருக்கும் மேற்பட்டவர்களை தேடி வருவதாக மீட்புப் படையினர் தெரிவித்துள்ளனர். இறந்தவர்களில் பெரும்பாலானோர் குழந்தைகள் மற்றும் பெண்கள் என தெரிவிக்கப்படுகிறது.




## பஜாஜ் – நான்காவது வருடமாகவும் தொடர்ச்சியாக 'மிகவும் விரும்பப்படும் மோட்டார்சைக்கிள் வர்த்தகநாமம்'




"மிகவும் விரும்பப்படும் மோட்டார்சைக்கிள் வர்த்தக நாமாக" பஜாஜ் நான்காவது வருடமாகவும் தொடர்ச்சியாகத் தெரிவுசெய்யப்பட்டிருப்பதுடன், எல்எம்டி - பிரான்ட் பினான்ஸ் 2022 அதாவது 19ஆவது வருடாந்த மதிப்பாய்வில் இலங்கையிலுள்ள 50 முன்னணி வர்த்தக நாமங்களில் ஒன்றாகவும் இடம் பிடித்துள்ளது.

"கடந்த இரண்டு வருடங்களாக புதிய மோட்டார் சைக்கிள்கள் கிடைக்கப்பெறாத சந்தர்ப்பத்திலும் சிறப்புத்தன்மை, விற்பனைக்குப் பின்னரான சேவைக்கான அணுகல் போன்ற பிரதான விடயங்கள் உள்ளடங்கலாக வர்த்தக நாமம் தொடர்பில் எமது 360 பாகை அர்ப்பணிப்புக் காரணமாக "மிகவும் விரும்பப்படும் மோட்டார் சைக்கிள் வர்த்தகநாமம்" என்ற தலைப்பை பஜாஜ் தக்கவைத்துக்கொண்டுள்ளது" என டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனி (பிறைவட்) லிமிடெட் நிறுவனத்தின் பிரதிப் பொது முகாமையாளர் (வாகன விற்பனை) திரு.லக்மல் டி சில்வா தெரிவித்தார்.

## Dialog OnMobile நிறுவனத்துடன் இணைந்து ONMO எனப்படும் மொபைல் Cloud Gaming Platform ஐ அறிமுகப்படுத்துகிறது




டயலொக் மொபைல் வாடிக்கையாளர்களுக்கு தனித்துவமான, அதிவேகமான கேமிங் அனுபவத்தை வழங்குவதற்காக ONMO (www.onmo.dgl.lk)ஐ அறிமுகப்படுத்த இலங்கையின் முன்னணி இணைப்பு வழங்குனரான டயலொக் ஆசிஆட்டா பிஎல்சி மொபைல் பொழுதுபோக்குகளில் உலகளாவிய முன்னணி நிறுவனமான OnMobile உடன் இணைந்துகொண்டது.

Cloud streaming, Social Esports மற்றும் Artificial Intelligence (AI) ஆகியவற்றைக்கொண்ட மொபைல் கேமிங் தளமான ONMO ஆனது, டயலொக் மொபைல் வாடிக்கையாளர்களுக்கு action, arcade, racing, adventure, puzzles மற்றும் பல வகைகளை உள்ளடக்கிய 60இற்கும் மேற்பட்ட அற்புதமான மொபைல் கேம்களுக்கான அணுகலை ஒவ்வொரு வாரமும் வழங்குகிறது. வாடிக்கையாளர்கள் ONMO மற்றும் அதன் பரந்த அளவிலான கேம்கள் அனைத்தையும் மாதத்திற்கு ரூ. 399+வரிகளுக்கு பெற்றுக்கொள்ள முடியும். ONMOஇன் Vision AI engine, டவுன்லோட் செய்யவேண்டிய அவசியமின்றி ஒரு சமூக தளத்தில் அனைவரும் அணுகும் வண்ணம் Esports ஐ வழங்குகிறது. மேலும் பல அற்புதமான அம்சங்களுடன் short, curated game moments மற்றும் virtual rewards உடன், சமூக விளையாட்டு அம்சத்தையும் இந்தத் தளம் வழங்குகிறது.

டயலொக் ஆசிஆட்டா பிஎல்சி இன் குழும கண்டுபிடிப்பு மற்றும் வடிவமைப்பு அதிகாரி அந்தோனி ரொட்ரிகோ, இந்த சமீபத்திய மொபைல் கேமிங் அனுபவம் குறித்து பேசியபோது, "எங்கள் பங்காளரான OnMobile உடன் இணைந்து இலங்கையில் வர்த்தக கிளவுட் கேமிங் தளத்தை முதன்முதலில் அறிமுகப்படுத்தியதில் டயலொக் பெருமைகொள்கின்றது. இந்த கிளவுட் கேமிங் தளமானது ஸ்மார்ட்போன்களுக்காகவும் டயலொக்கின் 4G மொபைல் மற்றும் ஹோம் புரோட்பாண்ட் வலையமைப்புகளில் தடையின்றி இயங்குவதற்கும் உகந்ததாக காணப்படுகின்றது. எதிர்காலத்தில் அனைத்து இலங்கையர்களுக்கும் கிளவுட் கேமிங்கிற்கு 5G தொழில்நுட்பத் திறனை வழங்கக்கூடியதாக இருக்கும் என்பதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம்.

ONMO இன் தலைமை நிர்வாகஅதிகாரி கிரிஷ் சேஷாத்ரி கருத்து தெரிவிக்கையில், "இந்தப் பிராந்தியத்தில் கிளவுட் கேமிங்கிற்கு செல்லும் இடமாக ONMO உருவாகும் என்று நாங்கள் நம்புகிறோம். இலங்கையில் முதல் கிளவுட் கேமிங் தளத்தை அறிமுகப்படுத்த டயலொக் உடன் இணைந்ததையிட்டு நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். ONMO – குறுகிய, நன்கு வடிவமைக்கப்பட்ட கேமிங் தருணங்கள் மற்றும் அனைவரும் விளையாடக்கூடிய virtual rewards போன்ற அம்சங்கள் மூலம் மிகச்சிறந்த பொழுதுபோக்குடன் கேமிங் அனுபவத்தை வாடிக்கையாளர்களுக்கு டயலொக் வழங்கும்" - என்றார்.

## FIFA World Cup Qatar 2022இன் உத்தியோகபூர்வ அனுசரணையாளராக vivo கைகோர்ப்பு




உலகளாவிய புத்தாக்க ஸ்மார்ட்போன் வர்த்தகநாமமான vivo, மிக முக்கியமான சர்வதேச கால்பந்து போட்டியானFIFA World Cup Qatar 2022™ இன் உத்தியோகபூர்வ அனுசரணையாளராக இணைந்துள்ளமை தொடர்பில் அறிவித்துள்ளது. 2017 முதல் இரண்டு FIFA World Cup™ போட்டித் தொடரினதும் அதிகாரப்பூர்வ ஸ்மார்ட்போனாக vivoஉள்ளது. இந்த ஆண்டு, உலகெங்கிலும் உள்ள கால்பந்து ரசிகர்களுடன் மறக்க முடியாத அனுபவத்தை உருவாக்கும் வகையில் 2022 நவம்பர் 21 முதல் கட்டாரில் இந்த போட்டித்தொடர் நடைபெறவுள்ளது.

இந்த பங்குடைமை மூலம் உத்தியோகபூர்வ சின்னம், உத்தியோகபூர்வ வர்த்தகநாம அடையாளங்கள் உள்ளடங்கலாக FIFA World CupTM இற்கான தனது உரிமைகளை vivo பயன்படுத்துவதோடு, உலகளவில் ஆர்வமுள்ள கால்பந்து ரசிகர்களுடன் இணைவதற்கு தனித்துவமான ஊக்குவிப்பு நடவடிக்கைகளையும் முன்னெடுக்கும். முன்னோக்கிப் பார்க்கையில், முழுமையான வாடிக்கையாளர் அனுபவங்களை உருவாக்கி, அதன் நவீன ஸ்மார்ட்போன் தொழில்நுட்பத்தை மேம்படுத்துவதன் மூலம் சர்வதேச அளவில் வளர vivo முயற்சிக்கிறது.

## 100 படுக்கைகள்கொண்ட புற்றுநோய் ஆஸ்பத்திரியின் நன்கொடையால் நிலைத்துநிற்கும் ஜெயம் விஜயரட்ணத்தின் மரபு



100 படுக்கைகள்கொண்ட புற்றுநோய் ஆஸ்பத்திரியொன்று இன்று இலங்கை மக்களின் பாவனைக்காக கையளிக்கப்பட்டது. நீர்கொழும்பு மக்களால் மிகவும் நேசிக்கப்பட்ட பிரஜையான காலம் சென்ற ஜெயம் விஜயரட்ணத்தின் கொடைவள்ளல் மரபை பறைசாற்றும் வகையில் இந்த நன்கொடை அமைந்துள்ளது. இவர் நீர்கொழும்பின் முன்னாள் பிரதி மேயரும் கரையோரப் பிராந்தியத்தின் மூன்றாவது தலைமுறை வர்த்தகராகவும் மக்கள் பணியாற்றியவர்.

ஜெயம் விஜயரட்ணம் புற்றுநோய் பராமரிப்பு நிலையம் (JWCCC) தலைசிறந்த கட்டிடக் கலை நிபுணர் அன்ஜலேந்திரனால் வடிவமைக்கப்பட்டு கீர்த்திமிக்க பொறியியலாளர் தீபால் விக்கிரமசிங்கவின் மேற்பார்வையில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. 2013இல் தனது கணவர் மரணமடைந்ததை தொடர்ந்து திருமதி யோகேஸ்வரி விஜயரட்ணத்தால் இந்தத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டு பூர்த்தி செய்யப்பட்டு தற்போது உத்தியோகபூர்வமாக சுகாதார அமைச்சிடம் கையளிக்கப்பட்டுள்ளது.


## சர்வமத அனுஷ்டானங்களைச் செய்து ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்ளும் HNB



இலங்கையின் முன்னணி தனியார் வங்கியான ஹட்டன் நெஷனல் வங்கி வருடத்தின் நடுப்பகுதியில் நடத்தும் சர்வ மத அனுஷ்டான நிகழ்வு அண்மையில் HNB தலைமை அலுவலகத்தில் நடைபெற்றது.

தற்போதைய பொருளாதார நெருக்கடியிலிருந்து நாடும் அதன் மக்களும் விடுபட பிரார்த்தனை செய்யும் வகையில் நடைபெற்ற இந்த சர்வமத அனுஷ்டான நிகழ்விற்கு HNBஇன் சிரேஷ்ட நிர்வாக அதிகாரிகள் மற்றும் ஊழியர்கள் பங்கேற்றனர். இந்த சவாலான காலங்களில் வாடிக்கையாளர்களுக்கு சேவை செய்வதற்கான அவர்களின் சேவையை தொடர்ந்ததற்காக ஹட்னா குடும்பத்திற்கு ஒரு சிறப்பு ஆசீர்வாதமும் வழங்கப்பட்டது.

## Samsung இலங்கையில் Good Lock அறிமுகப்படுத்தியது




Samsungஇன் இவ் புதிய அறிமுகம் Sri Lanka's Samsung Members Communityஇன் பின்னூட்டத்திலிருந்தே வந்துள்ளது. Sam sung உடனான தனிப்பயனாக்கப்பட்ட அனுபவத்தை மேம்படுத்த Good Lock பயன்பாடு உள்நாட்டில் கிடைக்க வேண்டும் என்பதை நீண்டகாலமாக வலியுறுத்தி வந்தனர்.

GenZ மற்றும் Millennials கள் இலக்காக இருப் பதுடன் அவர்கள் தங்கள் சாதனத்தின் ஒவ்வொரு அம்சத்தையும் தங்களுக்கு சொந்தமாக்கி கொள்வதில் மகிழ்ச்சியடைகிறார்கள். இந்த Good Lock பயன்பாடு சாதனத்தின் தோற்றத்தையும் அனுபவத்தையும் தனிப்பயனாக்க அனுமதிக்கும் பலவிதமான அம்சங்களையும் வழங்குகிறது. இலங்கையின்Samsung Good Lock app Galaxy S தொடர், Tab S தொடர் மற்றும் Z தொடர்களின் அனைத்து smartphone களிலும் கிடைக்கும். அதேநேரம் Galaxy A3x இலிருந்து தொடங்கும் Galaxy A தொடரின் பயனர்களுக்கும் அணுகக்கூயதாக இருக்கும்.

Kevin SungSU YOU, இலங்கைக்கான Samsung இன் முகாமைத்துவப் பணிப்பாளர்,'Samsung Good Lock உள்நாட்டில் அறிமுகப்படுத்துவதில் நாங்கள் மிகவும் மகிழ்ச்சியடைகிறோம். இது ஆரம்பிக்கபட்டதிலிருந்தே பல வருடங்களாக உள்நாட்டு Samsungபாவனையாளர்கள் இதனை நாட்டில் கிடைக்குமாறு வலியுறுத்தி வந்தனர். நாம் எமது நுகர்வோரின் தேவைகளை கடைபிடிக்கும் ஒரு brandஆக இருப்பதால் தொடர்ந்து பெருகிவரும் எமது Samsung Community வளர்ப்பதற்காக இதனை கிடைக்க நடவடிக்கை எடுத்தோம்' எனக்கூறினார்.

## நெஸ்லே லங்கா மற்றும் பெரேரா அன்ட் சன்ஸ் பேக்கர்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட் ஆகியவை இலங்கையில் பிளாஸ்ரிக் மாசுபாட்டைச் சமாளிக்க உதவுவதற்காக ஒன்றிணைந்து செயல்படுகின்றன



நெஸ்லே லங்கா மற்றும் பெரேரா அன்ட் சன்ஸ் பேக்கர்ஸ் (பிரைவேட்) லிமிடெட் ஆகியவை இலங்கையில் பிளாஸ்ரிக் மாசுபாட்டை சமாளிக்க உதவுவதற்காக கைகோர்த்துள்ளன. இதன்படி உள்நாட்டிலுள்ள பேக்கரி சங்கிலியின் விற்பனை நிலையங்களில் நுகரப்படும் தயாரிப்புகள் பொதி செய்யப்படுகின்ற பொருட்களை சேகரித்து மீள்சுழற்சி செய்வதன் மூலம் இந்த முயற்சி முன்னெடுக்கப்படுகின்றது. இரண்டு நிறுவனங்களும் ஒன்றிணைந்து செயல்படுவதன் மூலம், மீள்சுழற்சி செய்யக்கூடிய பொருட்களுக்குதனித்தனி கழிவுத்தொட்டிகளை ஏற்பாடு செய்வதன் மூலமும், பொறுப்புணர்வுடன் கழிவகற்றலை ஊக்குவிப்பதன் மூலமும் கழிவுகளை தரம்பிரிப்பதற்கு வசதியாக நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளன.

சேகரிக்கப்பட்ட கழிவுகள் அதன் பின்னர் ராஜகிரியவிலுள்ள பெரேரா அன்ட் சன்ஸ் மீள்சுழற்சி செய்யக்கூடிய பொருட்கள் சேகரிப்பு மையத்திற்கு அனுப்பப்படுகின்றன. அங்கு அவை சுத்தம் செய்யப்பட்டு, அமுக்கப்பட்டு, உள்நாட்டு மீள்சுழற்சி நிறுவனங்களான Eco-Maximus மற்றும் Eco-Spindles ஆகியவற்றிற்கு கொண்டுசெல்லப்படும் வரை வைத்துப் பேணப்படுகின்றன.

தற்சமயம் 100இற்கும்மேற்பட்ட விற்பனை நிலையங்களில் நடைமுறைப்படுத்தப் பட்டுள்ளதுடன், நெஸ்லே லங்கா மற்றும் பெரேரா அன்ட் சன்ஸ் ஆகியவை இந்த முயற்சியை எதிர்வரும் ஆண்டுகளில் நாடளாவிய ரீதியில் பெரேரா அன்ட் சன்ஸ் விற்பனை நிலையங்களுக்கு விரிவுபடுத்த எண்ணியுள்ளன.

இந்த நற்காரியத்துக்கான ஒத்துழைப்பின் ஒரு பகுதியாக, பெரேரா அன்ட் சன்ஸ் மீள்சுழற்சி செய்யக்கூடிய பொருட்கள் சேகரிப்பு மையத்தில் ஒரு சிப்பமாக்கல் இயந்திரத்தை (baling machine) நிறுவ நெஸ்லே லங்கா உதவியுள்ளது. இந்த சிப்பமாக்கல் இயந்திரம், உள்நாட்டில் பேக்கரி சங்கிலியின் சேகரிப்பு மற்றும் மீள்சுழற்சி முயற்சிகளை வலுப்படுத்த உதவுகிறது. அத்துடன், கழிவுகளை அமுக்கி மேலும் தொடர்ந்து பதப்படுத்தி மற்றும் மீள்சுழற்சி செய்வதற்கு அவற்றின் போக்குவரத்தை எளிதாக்குகிறது.

## இலங்கையை வளர்ச்சிப் பாதையில் கொண்டுசெல்வதற்காக புத்தாக்க சிந்தனையாளர்களை அழைக்கும் SLT–MOBITEL




22 மில்லியன் இலங்கையர்களின் வாழ்க்கையை மேம்படுத்தும் தேடலில் தேசிய தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப தீர்வுகள் வழங்குநரான SLT-MOBITEL, 'Dreamers' - தொலைநோக்கு கொண்டவர்கள், கண்டுபிடிப்பாளர்கள், புத்திசாலிகள் மற்றும் வழமைக்கு அப்பால் சிந்திக்கக்கூடியவர்கள் என சகல தரப்பினரையும் தமது செயற்படும் தீர்வுகளுடன் முன்வந்து, இலங்கை தற்போது எதிர்நோக்கியுள்ள பாரிய பிரச்சனைகளுக்கு தீர்வு காண முயற்சிக்க கைகோர்க்குமாறு அழைப்புவிடுத்துள்ளது.

SLT-MOBITEL இனால் தனது NoDreamTooBig எனும் திட்டம் அறிமுகம் செய்யப்பட்டுள்ளதுடன், அதனூடாக அனைத்து இலங்கையர்கள் வசமும் காணப்படும் அதே தொழில்நுட்பம் மற்றும் இணைக்கப்பட்ட சாதனங்கள் போன்றவற்றை பயன்படுத்தி புத்தாக்கமான முறையில் பாரிய கனவுகளை நனவாக்கிக்கொள்வதற்காக பணியாற்ற இணையுமாறு அழைத்துள்ளது. இந்த உறுதியற்ற காலப்பகுதியிலிருந்து நாம் விடுபட்டு ஓர் இலங்கையாக முன்னேற்றத்தை நோக்கி பயணிக்கத் தேவையான கனவுகளை நனவாக்கிக் கொள்வதற்காக முன்னெடுக்கப்படும் இந்த Dreamers Wanted திட்டத்துடன் இணையுமாறு SLT-MOBITEL அழைத்துள்ளது.

தமக்குக் காணப்படும் அறிவு, வளங்கள் மற்றும் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி சாதாரணமானவற்றைக்கொண்டு அசாதாரணமானவற்றை உருவாக்க முனையும் விண்ணப்பதாரிகளுக்கு www.sltmobitel.lk/dreamerswanted எனும் இணையப்பக்கத்துக்கு சென்று தமது தொழிற்படக்கூடிய தீர்வு அல்லது கண்டுபிடிப்பு தொடர்பான விளக்கமளிக்கும் சிறிய வீடியோ ஒன்றை தயாரித்து சமர்ப்பிக்குமாறு கோரப்படுவர். தமது தெரிவுக்குரிய மொழியில் இதனை அவர்களால் சமர்ப்பிக்கக்கூடியதாக இருக்கும் என்பதுடன், விண்ணப்பத்தை சமர்ப்பித்த பின்னர் சுயமான அறிவுறுத்தல் அவர்களுக்கு வழங்கப்படும்.

Dreamers Wanted Evaluation Team (DWET) என்பதில் SLT-MOBITEL அதிகாரிகள் மற்றும் உள்நாட்டு பல்கலைக்கழகங்களைச் சேர்ந்த கல்விசார் நிபுணர்கள் ஆகியோர் அடங்கியிருப்பதுடன், விண்ணப்பங்களை மீளாய்வு செய்து தெரிவுசெய்யும் பணிகளை தொடர்ந்து முன்னெடுப்பார்கள். அதனூடாக மேலதிக மேம்படுத்தலுக்காக சிறந்த சிந்தனைகள் தெரிவுசெய்யப்படுவது உறுதிசெய்யப்படும். தெரிவுசெய்யப்பட்டதும், நேர்காணல்கள், விளக்கமளிப்பு நிகழ்வுகள் மற்றும் மாதிரி விளக்கங்கள் மற்றும் வினா விடை அமர்வுகளுக்கு முகங்கொடுப்பார்கள். அதனூடாக சிறந்த கண்டுபிடிப்புகள் தெரிவுசெய்யப்படுவது உறுதிசெய்யப்பட்டு, அவை முன்னெடுத்துச் செல்வதற்கு அவசியமான ஆதரவு உடனடியாக வழங்கப்படுவது உறுதிசெய்யப்படும்.

SLT-MOBITEL டு இன் முன்னணி குழும R&D செயற்றிட்டமான The Embryoஇனால், SLT குழுமம் மற்றும் கல்விமான்கள், தொழிற்துறை, ஒன்றிணைப்பாளர்கள் மற்றும் தொழில் முயற்சியாளர்கள் என பல தரப்பினரையும் ஒன்றிணைத்து தேசத்துக்கு சேவையாற்றுவதற்கான பெறுமதியான அறிவு மற்றும் திறன்கள் பகிர்வு முன்னெடுக்கப்பட்டிருந்ததுடன், பன்நாளிகை புத்தாக்க கட்டமைப்பை நவீன தொழில்நுட்ப தீர்வுகளைப் பின்பற்றி முன்னெடுத்துச் செல்வதற்கு ஏதுவாக அமைந்துள்ளது. இந்த அமைப்பினால் 'Dreamers Wanted' திட்டம் முன்னெடுக்கப்படுகின்றது. புத்தாக்கத்தை உள்வாங்கியதன் பின்னர்,'Dreamers' உடன் இணைந்து தேசத்தின் தேவைகளின் பிரகாரம் SLT-MOBITEL செயலாற்றும். வங்கிகள், முதலீட்டாளர்கள், 'Dreamers' விற்பனை மற்றும் இதர விநியோக வலையமைப்புகள் ஆகியவற்றுடன் இணைக்கப்பட்டு தீர்வை செயற்படுத்துவதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்படும். SLT-MOBITEL இடமிருந்து நிறுவனசார் ஆதரவை Dreamers பெறுவார்கள். இதில் சந்தைப்படுத்தல் மற்றும் விற்பனை, ஏதேனும் பிரச்சினைகளிலிருந்து மீள்வதற்கு அவசியமான ஒழுங்குபடுத்தல் ஆலோசனை, நிதி ஆதரவு மற்றும் உட்கட்மைப்பு நிறுவுகை போன்றன அடங்கியிருக்கும்.

'Dreamers Wanted', தொலைநோக்கு கொண்டவர்கள், கண்டுபிடிப்பாளர்கள், புத்திசாலிகள் மற்றும் வழமைக்கு அப்பால் சிந்திக்கக்கூடியவர்கள் 1212 அல்லது 1717 எனும் இலக்கத்துடன் தொடர்புகொண்டு மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம் அல்லது SLT-MOBITEL உடன் கைகோர்த்து உறுதியான இலங்கையை கட்டியெழுப்புவதற்கு தமது சிந்தனைகளை பகிர்ந்துகொள்வதற்கு www.sltmobitel.lk/dreamerswanted எனும் இணையப் பக்கத்தைப் பார்க்கவும்.

## மூன்றாம் நிலை மற்றும் தொழில் கல்வி ஆணைக்குழுவிற்கும் S4IG நிகழ்ச்சித்திட்டத்துக்குமிடையே புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்து



மூன்றாம் நிலை மற்றும் தொழில் கல்வி ஆணைக்குழு (TVEC) மற்றும் உள்ளடக்கிய வளர்ச்சிக்கான திறன்கள் (Skills for Inclusive Growth Programme – S4IG) நிகழ்ச்சித்திட்டத்துக்குமிடையே அண்மையில் புரிந்துணர்வு உடன்படிக்கையொன்று கைச்சாத்திடப்பட்டுள்ளது. மூன்றாம் நிலை மற்றும் தொழில் கல்வி ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் கே.ஏ. லலிததீர மற்றும் S4IG நிகழ்ச்சித்திட்டத்தின் பிரதானி டேவிட் அப்லட் ஆகியோர் மேற்படி உடன்படிக்கையில் கையொப்பமிட்டுள்ளனர்.


2012ஆம் ஆண்டு தேசிய கணக்கெடுப்பு தரவுகளின் பிரகாரம் விசேட தேவையுடையோர்களின் சதவீதம் 8.7% ஆகும். அவர்கள் மத்தியில் 15 வயதுக்கும் 19 வயதுக்குமிடைப்பட்ட இளைஞர்களில் சுமார் 45 வீதமானோர் சாதாரண தரம் மற்றும் உயர் தரம் வரை கல்வி கற்பவர்களாவர். விசேட தேவையுடைய வயது வந்தோர்களில் சுமார் 71 வீதமானோர் தொழில் படைச் சந்தைக்கு வெளியில் உள்ளனர். அவர்களின் தொழிலின்மை விகிதத்தை குறைப்பதற்கும் கல்வி நடவடிக்கைகளை மேம்படுத்துவதற்குமாக மூன்றாம் நிலை மற்றும் தொழில் கல்வி ஆணைக்குழு பங்களிப்பு செய்கிறது.

## சியெட் தனது இரு சக்கர வண்டி ரயர்களை இந்திய ஓடுதளத்தில் போட்டி உற்பத்திகளோடு ஒப்பிட்டு பரீட்சித்துள்ளது



சியெட் களனி ஹோல்டிங்ஸ் நிறுவனம் அதன் சில மோட்டார்சைக்கிள் ரயர்களை தொடர்ச்சியாக தீவிரமான பல பரிசோதனைகளுக்கு உட்படுத்தி உள்ளது. இரண்டு பிரதான போட்டி வர்த்தகச் சின்னங்களோடு நடத்தப்பட்ட இந்தப் பரிசோதனைகள் தற்போது முடிவடைந்துள்ளன. இந்த வர்த்தகச் சின்னங்களில் ஒன்று இலங்கையையும் மற்றையது இந்தியாவையும் சேர்ந்தது.

இந்தக் குறிப்பிடத்தக்க பயிற்சி இந்தியாவின் இந்தோர் நகரிலுள்ள தேசிய வாகன பரிசோதனைகள மற்றும் ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு (R&D) உள் கட்டமைப்புத் திட்டத்துக்குரிய (NATRiP) அதி நவீன வாகன பரிசோதனைத் தளம் (NATTRAX) மற்றும் சியெட் இந்தியாவின் கூட்டாண்மை ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு (R&D) ஹலோய் வளாகத்திலும் இடம்பெற்றது என இந்நிறுவனம் அறிவித்துள்ளது.



# 5 போட்டிகள் 59 ஓட்டங்கள் தடுமாறும் கோஹ்லி

(ரமணி)

இந்திய அணியின் 'ரன் மெஷின்' என அழைக்கப்பட்ட கோஹ்லியின் துடுப்பாட்டம் மிக மோசமாக உள்ளது. ஆக்ரோஷக் கோஹ்லி காணாமல் போய்விட்டார். கடந்த 3 வருடங்களாக சதமடிக்க முடியாமல் தினந்தோறும் கடுமையான விமர்சனங்களை சந்தித்துவரும் விராட் கோஹ்லி அதற்கு முற்றுப்புள்ளி வைப்பார் என்று ரசிகர்கள் ஏற்கத் தொடங்கிவிட்டனர்.

கடைசியாக கடந்த 2019இல் சதமடித்திருந்த அவர், பெரிய பெயரை வைத்துக்கொண்டு எத்தனை நாட்கள் ஓட்டங்கள் அடிக்காமல் இருப்பீர்கள் என்று கபில் தேவ் உட்பட பலர் விமர்சித்ததுடன், அணியிலிருந்து நீக்குமாறு கோரிக்கை வைத்துள்ளனர்.

பல எதிர்ப்புகளையும் மீறி ஏராளமான ஆதரவையும் வாய்ப்புகளைப் பெற்றுவரும் அவர், சமீப காலங்களில் அதற்கேற்றாற்போல் கணிசமான ஓட்டங்களைக் கூட அடிக்காமல் முன்பை விட மோசமாக செயற்படத் தொடங்கியுள்ளமை வேதனையாக அமைகிறது. ஆம் தன்னுடைய கடைசி 5 ஒருநாள் போட்டிகளில் 8, 18, 0, 16, 17 என சொற்ப ஓட்டங்களில் வெளியேறிய அவர், எந்தவொரு போட்டியிலும் 20 ஓட்டங்களைத் தாண்டவில்லை.

கடந்த 2008இல் அறிமுகமாகி 14 வருடங்களில் ஏராளமான சாதனைகள் படைத்துள்ள கோஹ்லி தன்னுடைய ஒருநாள் கிரிக்கெட் வரலாற்றில் இப்படி முதல் முறையாக தொடர்ச்சியாக 5 போட்டிகளில் 20 ஓட்டங்களைக் கூட தாண்ட முடியாமல் மாபெரும் வீழ்ச்சியை சந்தித்துள்ளார். கோஹ்லி ஒரு தொடரில் 4ஆவது முறையாக குறைந்தபட்ச ஸ்கோர் பதிவு செய்துள்ளார்.

அந்தப் பட்டியல்:

1. 13, பாகிஸ்தானுக்கு எதிராக 2012
2. 26, வெஸ்ட் இண்டீசுக்கு எதிராக
3. 31, தென் ஆபிரிக்காவுக்கு எதிராக 2013
4. 33, இங்கிலாந்துக்கு எதிராக, 2022

2022இல் 8 ஒருநாள் இன்னிங்ஸில் வெறும் 2 அரைச்சதங்களுடன் 175 ஓட்டங்களை 21.87 என்ற மோசமான சராசரியில் எடுத்துள்ளார்.

விளையாட்டு செய்திகள்

thamilansports@gmail.com



# உலகக்கிண்ணத்திற்கு நேரடியாக தகுதிபெற முடியாத நிலைக்குள்ளாகும் தென்னாபிரிக்கா!

2ஆம் ஆண்டு நடைபெறவுள்ள ஐ.சி.சி. உலகக்கிண்ணத் தொடரில் தென்னாபிரிக்க அணி நேரடியாக தகுதிபெற முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. அண்மைக்காலமாக ஒருநாள் தொடர்களில் தென்னாபிரிக்க அணி படுதோல்விகளை சந்தித்து வந்தது. இதனால் ஒருநாள் உலகக்கிண்ண சுப்பர் லீக் புள்ளிப் பட்டியலில் தென்னாபிரிக்கா கடும் பின்னடைவை சந்தித்தது. தற்போது சில வெற்றிகளை பெற்றிருந்தாலும் 11 இடத்தில் நீடித்துவருகிறது.

புள்ளிப் பட்டியலில் முதல் 8 இடங்களைப் பிடிக்கும் அணிகள்தான் நேரடியாக உலகக்கிண்ணத் தொடரில் இடம்பெற முடியும். இந்நிலையில், 11ஆவது இடத்தில் இருக்கும் தென்னாபிரிக்க அணி, அடுத்த அனைத்துப் போட்டிகளிலும் வென்றால்தான் 8ஆவது இடத்திற்குள் வர முடியும்.

இந்நிலையில், தென்னாபிரிக்க கிரிக்கெட் சபையானது ப்ரீமியர் லீக் தொடரை நடத்த திட்டமிட்டுள்ளதால், அவுஸ்திரேலியாவுக்கு எதிரான 3 போட்டிகள்கொண்ட ஒருநாள் தொடரை இரத்துசெய்துள்ளது. தன்னிச்சையாக தொடரை இரத்துசெய்துள்ளதால், அவுஸ்திரேலியா வென்றதாக அறிவித்து, அவுஸ்திரேலியாவுக்கு சுப்பர் லீக் புள்ளிப் பட்டியலில் புள்ளிகள் வழங்கப்படும் என ஐ.சி.சி. அறிவித்துள்ளது. இதனால், தென்னாபிரிக்க அணி ஒருநாள் உலகக்கிண்ணத் தொடரின் தகுதிச்சுற்றிலிருந்து விளையாடும் நிலை உருவாகியுள்ளது.

# "அவருக்காக அவர் படைத்துள்ள சாதனைகள் பேசும்"

## கோஹ்லிக்கு குரல் கொடுத்த பட்லர்



இந்திய அணியின் முன்னாள் தலைவராக விராட் கோஹ்லி அண்மைக்காலங்களாக ஓட்டங்களை குவிப்பதில் தடுமாறி வருகிறார். கோஹ்லியின் துடுப்பாட்டம் தொடர்பில் பலரும் பல விமர்சனங்களை முன்வைத்துவரும் நிலையில், "அவருக்காக அவர் படைத்துள்ள சாதனைகள் பேசும்" என இங்கிலாந்து அணியின் தலைவர் ஜோஸ் பட்லர் தெரிவித்துள்ளார்.

"ரன் மெஷின்" என்றெல்லாம் போற்றப்படும் கோஹ்லி கடந்த ஆண்டுவரை எப்போது சதம் விளாசுவார் என்ற எதிர்பார்ப்பு இருந்துவந்தது. ஆனால், இப்போது அவர் ரன் ஸ்கோர் செய்தாலே போதும் என்ற நிலை உருவாகியுள்ளது. அவருக்கு எதிராகவும், ஆதரவாகவும் கிரிக்கெட் வீரர்கள், விமர்சகர்கள் என பலரும் தங்களது கருத்தை தெரிவித்துவரும் நிலையில், அவருக்கு ஆதரவாக பேசியுள்ளார் பட்லர்.

"அவரும் ஒரு மனிதர்தான் என்பதை அறியும்போது புத்துணர்ச்சி அளிக்கிறது. அவர் கிரிக்கெட் உலகின் மகத்தான வீரர்களில் ஒருவர். அவர் பல ஆண்டுகளாக அயராது ஓட்டங்கள் சேர்த்தவர். அதன்மூலம் இந்திய அணிக்கு பல போட்டிகளை வென்று கொடுத்தவர். அவர் ஒரு க்ளாஸான வீரர். அவருக்காக அவரது சாதனைகள் பேசும். இது (ஃபார்ம்-அவுட்) எல்லாம் சில காலம்தான்" என பட்லர் தெரிவித்துள்ளார்.



# அடுத்தடுத்து ஓய்வை அறிவித்த இரு நட்சத்திரங்கள்

தென்னாபிரிக்க அணியுடன் நேற்று நடைபெற்ற முதலாவது ஒருநாள் சர்வதேச போட்டியுடன் இங்கிலாந்து டெஸ்ட் அணியின் தலைவர் பென் ஸ்டோக்ஸ் ஒருநாள் சர்வதேச அரங்கிற்கு விடைகொடுத்தார். குறுகிய கால இடைவெளியில் இங்கிலாந்து அணியின் இரு நட்சத்திர வீரர்களான அணித்தலைவர் ஒயின் மோர்கன் மற்றும் பென் ஸ்டோக்ஸ் ஆகியோர் அடுத்தடுத்து ஓய்வை அறிவித்துள்ளமை ரசிகர்களிடத்தில் கவலையை ஏற்படுத்தியுள்ளது.

நேற்று முன்தினம் அறிக்கை ஒன்றினை வெளியிட்டிருந்த 31 வயதான பென் ஸ்டோக்ஸ், தான் ஒருநாள் சர்வதேச போட்டிகளிலிருந்து ஓய்வு பெறுவதாக குறிப்பிட்டார். இங்கிலாந்து அணிக்காக 105 ஒருநாள் போட்டிகளில் ஆடியிருக்கும் பென் ஸ்டோக்ஸ், இங்கிலாந்து கிரிக்கெட் அணி 2019ஆம் ஆண்டு ஐ.சி.சி. உலகக் கிண்ணத்தினை வெல்வதற்கும் முக்கிய காரணமாக திகழ்ந்தார்.

ஒருநாள் சர்வதேச போட்டிகளில் ஓய்வுபெற்றபோதும் டெஸ்ட் மற்றும் இருபதுக்கு 20 போட்டிகளில் இங்கிலாந்து அணிக்காக தொடர்ந்து ஆடுவார் எனத் தெரிவிக்கப்படுகிறது. இதேநேரம் பென் ஸ்டோக்ஸ் அண்மையில் இங்கிலாந்து டெஸ்ட் அணியின் தலைவராக நியமனம் பெற்றிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.



# நமீபியாவை முதல் போட்டியில் எதிர்கொள்ளும் இலங்கை அணி

அவுஸ்திரேலியாவில் எதிர்வரும் ஒக்டோபர் மாதம் ஆரம்பமாகவுள்ள 2022 ஐ.சி.சி. இருபதுக்கு 20 உலகக்கிண்ணத் தொடரின் முதல் சுற்றில் இலங்கை அணி விளையாடவுள்ள போட்டிகளின் அட்டவணை உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி குழு 'ஏ'யில் இடம்பெற்றுள்ள இலங்கை அணியானது நமீபியா, நெதர்லாந்து மற்றும் ஐக்கிய அரபு இராச்சியம் போன்ற அணிகளை எதிர்கொள்ளவுள்ளது.

இருபதுக்கு 20 உலகக்கிண்ணத் தொடருக்கான தகுதிகாண் தொடரின் இறுதிப்போட்டியில் நெதர்லாந்து அணியை சிம்பாப்வே அணி வீழ்த்தி முதல் சுற்றில் குழு 'பி'யில் இடத்தைப் பிடித்துக்கொண்டது. அந்தக் குழுவில் அயர்லாந்து, ஸ்கொட்லாந்து மற்றும் மேற்கிந்திய தீவுகள் ஆகிய அணிகள் இடம்பெற்றுள்ளன.

முதல் சுற்றின் முதல் போட்டியில் இலங்கை அணியானது நமீபியா அணியை ஒக்டோபர் 16ஆம் திகதி எதிர்கொள்ளவுள்ளதுடன், 18ஆம் திகதி ஐக்கிய அரபு இராச்சியம் அணியையும், 22ஆம் திகதி நெதர்லாந்து அணியையும் எதிர்கொள்ளவுள்ளது. முதல் சுற்றுப்போட்டிகள் நிறைவடைந்த பின்னர் 'சுப்பர் 12' சுற்றுக்கான போட்டிகள் 22ஆம் திகதி ஆரம்பிக்கிறது.

முதல் சுற்றில் தங்களுடைய குழுவில் முதல் இரண்டு இடங்களை பிடித்துக்கொள்ளும் அணிகள், சுப்பர் 12 சுற்றுக்கான வாய்ப்பை பெற்றுக்கொள்ளும். உலகக்கிண்ணத் தொடரானது ஒக்டோபர் 16ஆம் திகதி முதல் நவம்பர் 13ஆம் திகதிவரை அவுஸ்திரேலியாவில் நடைபெறவுள்ளது.




# லொஸ் ஏஞ்சல்ஸ் 2028 போட்டி அட்டவணை அறிவிப்பு

(ரமணி)

லொஸ் ஏஞ்சல்ஸில் 2028 ஒலிம்பிக் போட்டிகள் ஜூலை 14ஆம் திகதி தொடங்கி ஜூலை 30ஆம் திகதி முடிவடையும் என்று ஏற்பாட்டுக் குழு கடந்த திங்கட்கிழமை அறிவித்துள்ளது. பாராலிம்பிக் போட்டிகள் ஒகஸ்ட் 15ஆம் திகதி தொடங்கி ஒகஸ்ட் 27ஆம் திகதி நிறைவடையும். லொஸ் ஏஞ்சல்ஸ் 2028 தலைமையகத்திற்கு சர்வதேச ஒலிம்பிக் கமிட்டி மேற்கொண்ட விஜயத்தின்போது திகதிகள் உறுதிப்படுத்தப்பட்டன.

ஐந்து முறை ஒலிம்பிக் பதக்கம் வென்றவரும் லொஸ் ஏஞ்சல்ஸ் 2028இன் தலைமை தடகள அதிகாரியுமான ஜேனட் எவன்ஸ் கூறுகையில், "லொஸ் ஏஞ்சல்ஸ் 2028 ஒலிம்பிக் மற்றும் பாராலிம்பிக் விளையாட்டுகளுக்கான அதிகாரப்பூர்வ கவுண்ட்டவுனைக் குறிக்கிறது.

மூன்று முறை ஒலிம்பிக் போட்டி நடைபெற்ற லண்டனுடன் லொஸ் ஏஞ்சல்ஸ் இணைகிறது. 1932,1984ஆம் ஆண்டுகளில் லொஸ் ஏஞ்சல்ஸில் ஒலிம்பிக் நடைபெற்றது. பாராலிம்பிக் நடைபெறுவது இதுவே முதன் முறையாகும்.

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7